கல்கி


KALKI 7-12-1975 ● 75 காசு



ஒரு நாள்
கறந்த பால்
வராதபோது திருமதி பாலசந்திரன்
அமுல் மில்க் பவுடர் வாங்க நேர்ந்தது.



ஆனால்



இப்பொழுது அவர் அமுல் மில்க் பவுடரை தவறாமல் வாங்குகிறார்.

திருமதி பாலசந்திரன் கறந்த பால்தான் பால் பவுடரைவிட மிகவும் சிறந்தது என்று ஒரு காலத்தில் நினைத்திருந்தார். ஆனால் ஒரு நாள் கறந்த பால் கிடைக்கவில்லை. அன்று அமுல் மில்க் பவுடர் உபயோகித்தபோது வியப்புற்றார்! ஒரே ஒரு டின் அமுல் மில்க் பவுடர் அவரது கருத்தையே மாற்றி விட்டது. அது உங்கள் கருத்தையும் மாற்றி விடும்.

ஒரே ஒரு முறை அமுல் மில்க் பவுடர் உபயோகித்தாலே, இது எவ்வளவு சிறந்தது, சௌகரியமானது என்பது தெரிந்து விடும். இது தூய்மையாக, முழுமையாக, புதுமையாக பால் பவுடர் வடிவில் வருகிறது. இது நிமிடங்களில் கரைந்து தயாராகி விடுகிறது. இது மிகவும் வசதியானது. காப்பிக்கும் டீக்கும் அதிக இன்சுவை அளிக்கிறது. இதிலிருந்து சிறந்த கெட்டித் தயிரும், சுவை மிக்க தின்பண்டங்களும் தயாரியுங்கள். க்ரீமுக்குப் பதிலாகப் பயன்படுத்துங்கள். எல்லாமே இன்சுவை கொழிக்கும்.

திருமதி பாலசந்திரன் போன்ற நவீன இல்லத்தரசிகள் இன்று அமுல் மில்க் பவுடரை நம்பி இருப்பதற்குக் காரணங்கள் உண்டு. அமுல் மில்க் பவுடர்—இந்த ஒரே பால்தான் புத்தம் புதிதானது; தூய்மையானது; இன்சுவையுள்ளது; வசதியானது; எளிதில் கிடைப்பது!

அமுல்
மில்க் பவுடர்


வீட்டிலே பால் பண்ணை இருப்பதற்கு ஈடு!

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

ASP-AMP-27


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்..

காண்பவற்றில் சில இப்படி இருந்தால் ...



நீங்கள் காணவேண்டியது டிவிஎஸ்

ஆம். எதிலும் எப்படி சிக்கனம் காணலாம் என்று நீங்கள் முயல்வதை டிவிஎஸ் நிறுவனத்திலுள்ள நாங்கள் நன்கு உணர்கிறோம். டிரக்-லாரிகள் ஓட்டுவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் சிக்கனம் காண உங்களுக்கு நாங்கள் சகலவிதமான பணிகளாலும் உதவுகிறோம்.

- பராமரிப்பில் நீங்கள் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது.
- மாற்று உறுப்புகளில் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது.
- பெட்ரோல் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது
- டயர் செலவில் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது.

டிவிஎஸ் உங்களுக்காக இன்னும் பல பணிகள் புரியும்—நம்பகமான லாரிகளை உங்களுக்கு விற்பனை செய்வது, அவற்றை வாங்கப் பணத்திற்கு ஏற்பாடு செய்வது, உங்கள் தேவைக்கு ஏற்ற 'பாடி' கட்ட உதவுவது போன்ற பணிகள். எல்லாம் ஒரே நிறுவனத்தில் அறுபது ஆண்டு காலத்துக்கு மேல் தரமான சேவைக்கும் நம்பிக்கைக்கும் புகழ்பெற்ற நிறுவனத்தில.

உங்கள் தேவைக்கு அருகிலுள்ள டிவிஎஸ் ஆபீசுக்கு வருக.

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

டி.வி. சுந்தரம் ஐயங்கார் அண்ட் சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்.

TVS



SAA/TVS/1832 R



கல்கி


ராக்ஷஸ
கார்த்திகை 21

○

டிசம்பர் 7
1976

○


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



இங்குள்ள 'டை'களில் இரண்டு மட்டும் ஒன்றே போன்றவை. அவை எவை என்று சொல்ல முடியுமா?

(விடை : [illegible])

இங்குள்ள பொருள்கள் எல்லாம் சமையல் அறையில் பயன்படும் சாமான்கள். என்னென்ன என்று புரிகிறதா?



ரவிக்குக் காயம்
படும்போது



ரவியின் அன்னை, நோய் தொற்றாமல் அவனைப் பாதுகாக்க, BAND-AID BRAND டிரஸ்ஸிங்குகளையே நம்புகிறார்.

காயங்கள் திறந்திருந்தால் தொற்று
நோய் பரவக்கூடும். எனவேதான்,
விவேகமுள்ள தாய்மார்கள், காயங்-
களைப் பாதுகாத்து ஆற்றுவதற்கு
பாண்டு-எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்கு
களை மட்டுமே நம்புகிறார்கள்.
பாண்டு-எய்ட் பிராண்ட் டிரஸ்ஸிங்கு-
கள் நோய்க் கிருமி தொற்றாமல்
காயங்களைக் காக்கின்றன. அவற்-
றிலுள்ள நிருபணமான ஆன்டிசெப்டிக்
மருந்து மெர்க்கியூரோக்ரோம்,
பிளவுபட்ட சருமத்துக்கு இதமளித்து
ஆற்ற உதவுகிறது.

பாண்டு-எய்ட்
பிராண்ட்
டிரஸ்ஸிங்குகளை
ஜான்ஸன் & ஜான்ஸன்
மட்டுமே தயாரிக்கிறார்கள்.

Johnson & Johnson*



மெர்க்கியூரோக்ரோம்
மருந்து கலக்கப்பட்டது.

பத்து அம்சத் திட்டமும் வல்லபபாய் பட்டேலும்

மத்திய அரசின் இருபது அம்சத் திட்டத்தைத் தமிழக அரசு நிறைவேற்றத் தவறுகிறது என்ற கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்குப் பதில் அளிக்கையில் நமது முதல்வர் 1967ம் ஆண்டில் காங்கிரஸ் வகுத்த பத்து அம்சத் திட்டத்தைப் பட்டியல் போட்டுத் தருகிறார் :

1. பாங்கிகளைத் தேசிய மயமாக்குதல் 2. இன்ஷியூரன்ஸைத் தேசியமயமாக்குதல் 3. மன்னர் மானியத்தை ஒழித்தல் 4. கிராமத் திட்டம் — நிலச் சீர்திருத்தம் 5. நகர்ப்புறச் சொத்துக்கு உச்ச வரம்பு 6. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் 7. ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு விதித்தல் 8. கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல் 9. உணவு வாணிபத்தை அரசே மேற்கொள்ளுதல் 10. ஏற்றுமதி இறக்குமதியில் பொருள்வாரியாக முன்னேற்றம் காணுதல்.

கல்கி

மலர் 35

இதழ் 19

இவற்றுள் ஆறுவது அம்சமான மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் என்பதுதான் முக்கியமானது. இதை எப்படி நிறைவேற்றுவது என்று பார்க்கையில் சுதந்திரப் பொருளாதாரத்துக்கு மாறான சோஷலிஸ சித்தாந்தத்தின் அடிப்படையில் மற்ற அம்சங்கள் வகுக்கப்பட்டன. சோஷலிஸ அடிப்படையில் வகுக்கும் திட்டங்கள் தி.மு.க.வுக்குச் சம்மதமே என்பதால் இத் திட்டங்களைத் தி.மு.க. அரசு வரவேற்கவே செய்தது. இல்லாமற்போனால் பதினாலு பாங்குகளை அரசுடைமையாக்கியதற்காகப் பதினாலு பரிசுப் பொருள்களைப் பிரதமர் தமிழகம் வந்திருந்த போது அவருக்குத் தமிழக அரசு அளித்திருக்காது. ஆக முதல்வரின் குறையெல்லாம் இந்தத் திட்டங்களை மத்திய அரசு அரைகுறையாக நிறைவேற்றுகிறது, தீவிரம் காட்டவில்லை என்பதுதான். அவரது பேச்சின் தொனி இதனை நமக்கு உணர்த்துகிறது.

ஆனால் இதுபோன்ற திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கு முன் சிந்திக்க வேண்டிய கடமை ஒவ்வொரு பாரதப் பிரஜைக்கும் உண்டு.

சர்தார் வல்லபபாய் பட்டேல் பிறந்து நூறாண்டுகள் ஆனதை இந்த வருஷம் கொண்டாடுகிறோம். விழா எடுத்தோம், ஸ்டாம்பு வெளியிட்டோம். கூடவே அவர் கூறியவற்றை மறந்தும் விட்டோம்! சமீபத்தில் அவரது சொற்பொழிவுகள் அடங்கிய நூல் ஒன்று வெளியாகியுள்ளது. பட்டேல் கூறுகிறார்:

''சோஷலிஸம் என்று நீங்கள் பேசுவதற்கு முன்னால் உங்கள் உழைப்பால் நீங்கள் எவ்வளவு செல்வத்தை உற்பத்தி செய்தீர்கள் என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். முதலில் செல்வத்தை எப்படி உற்பத்தி செய்வது என்று நாம் கற்றுக் கொள்ள வேண்டும். பிறகுதான் அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று சிந்திக்க வேண்டும். இன்றையத் தேவை கிளிப் பிள்ளைபோல் சோஷலிஸம் என்று பேசுவதல்ல, ஒற்றுமையும் பலமும்தான். உபயோகமான நிர்மாணக் காரியங்களில் உங்கள் முயற்சிகளை மையப் படுத்துங்கள். சோஷலிஸம் என்கிற பாட புத்தக ரீதியான வாக்கு வாதத்தில் இறங்கிக் குழம்பாதீர்கள். எல்லாப் பிரச்னைகளும் குண்டாந் தடியைத் தூக்குவதாலும் சோஷலிஸ கோஷத்தை எழுப்புவதாலும் தீர்ந்துவிடும் என்று சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் அன்பும் பரிவும்தான் பலன் தருவன, துவேஷமும் பலாத்காரமும் அல்ல என்பதை மறந்து விடுகிறார்கள்.''

பத்து அம்சத் திட்டத்தில் மூன்றாவது மன்னர் மானிய ஒழிப்பு. இப்படி ஒரு பேச்சு தமக்குப் பின்னால் அடிபடும் என்றே பட்டேல் எதிர்பார்த்திருக்கமாட்டார். ''ஜமீந்தார்களுக்கு நஷ்டஈடு தருவானேன்?'' என்று சிலர் குரல் எழுப்பிய போதே அவர் கூறினார்: ''ஜமீந்தார்களுக்கு நஷ்டஈடு தரக் கூடாது என்ற பேச்சு ஆபத்தானது. அதை நடைமுறைக்குக் கொணர்ந்தால் கொள்ளையடிப்

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

பதைவிட மோசமான காரியமாகும். ஏனெனில், அது நாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்குவதாகும்.''

முதல்வர் தமது பதிலுரையில், ''பதினன்கு பாங்குகள் தேசிய மயமாக்கப்பட்டன; அதற்குமேல் ஓர் அடியெடுத்து வைக்கவில்லை'' என்று குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார். பாங்குகள் அரசுடைமையானதால் எந்த அளவுக்கு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளன என்பதைக் கணித்து இன்றுவரையில் யாரும் கூறியதாக நமக்குத் தெரியவில்லை. ஆனால் டி. ஏ. பை அவர்களின் சமீபத்திய பேச்சு ஒரு முரண்பாடான மன நிலையைக் காட்டுகிறது. கிராமப் புறங்களில் நிலவும் ஏழைமையை அதிகமாக்குவதே போல் கிராமங்களில் கிளைகளைத் திறந்து டெபாசிட்டுகளுக்காகப் பாங்குகள் போட்டி யிடுகின்றன என்கிறார். அதே மூச்சில் போதிய அளவு கிராமப்புறங்களில் உள்ள செல்வத்தை டெபாசிட்டுகளாக ஒற்றி எடுக்காததால்தான் பண வீக்கம் நாட்டில் இன்னமும் இருக்கிறது என்கிறார்!

நகரங்களிலோ பேட்டைக்குப் பேட்டை, மூலைக்கு மூலை வெற்றிலை பாக்குக் கடைகள் போலப் பாங்குகளின் கிளைகளைத் திறப்பதால் எந்த அளவுக்கு நன்மை என்று யாரும் சிந்திக்கக் காணோம்.

கடைசியாக இப்பொழுது இன்னொரு கருத்தை வெளியிட்டிருக்கிறார் ஸ்ரீ டி.ஏ.பை. இன்ஷியூரன்ஸ், பாங்குகள், இதர மத்திய அரசு ஊழியர்களின் சம்பள விகிதங்கள் மற்ற மாநில அரசு ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்கு ஏற்பக் குறைக்கப்பட வேண்டும் என்பதே அந்தக் கருத்து.

இன்ஷியூரன்ஸும் பாங்குகளும் தனியார் துறையிலேயே தொடர்ந்து இருந்திருந்தால் சம்பள விகித வித்தியாசங்கள் விசுவரூபம் எடுத்து மனத் தாங்கலை இந்த அளவுக்கு வளர்த்திருக்குமா?

''மத்திய அரசாங்கம் கோதுமை வியாபாரத்தை மேற்கொண்டது; கொஞ்சநாளைக் கெல்லாம் அது சரிப்படவில்லை என்று விட்டுவிட்டார்கள்.'' — இப்படி முதல் அமைச்சர் தமது பதிலில் கூறுகிறார். இதை அவர் கிண்டலாகப் பேசவில்லையென்றால் வருத்தத்துடன் பேசுகிறார் என்றாகிறது.

யதார்த்த நோக்கில் பாராமல் கொள்கைப் பிடிவாதத்துடன் அனைத்தையும் அரசுடைமையாக்குதல் என்பது தவறு. தேசிய மயமாக்குதல் பற்றி பட்டேலின் கருத்து: ''முதலாளித்துவத்தை ஒழிப்பதுதான் நாட்டுக்கு நல்லது என்று எனக்கு உறுதி ஏற்பட்டால் அதைச் செய்யுமாறு அரசுக்கு ஆலோசனை கூறும் முதல் மனிதனாக நான் இருப்பேன். ஆனால் அது நாட்டு நன்மைக்கு உகந்ததல்ல. தொழிலகங்களை நன்றாக இயங்குமாறு நிர்வகிக்க நம்மால் முடியுமானால் அரசுடைமையாக்குவதால் பலன் ஏற்படும். ஆனால் அரசாங்க நிர்வாகத்தையே திறம்பட நடத்த நம்மிடம் போதிய அளவு வருவாயோ ஆற்றல் மிக்க ஆட்களோ இல்லை.

''நாம் நம்மிடமிருந்து துவேஷங்களை நீக்கிவிடுவோம்; ஒழுக்கமின்மையை அப்புறப் படுத்துவோம். காந்திஜியின் சகோதரத்துவம், அன்பு, உண்மை, நியாயம் ஆகிய கோட்பாடுகளைப் புனருத்தாரணம் செய்வோம். இதைச் செய்தால் தேசம் அமைதியும் சுபிட்சமும் பெறும்.''

என்ன சேதி?

மக்கள் முன்னணியின் மாபெரும் வெற்றி

குஜராத்தில் ராஜ்கோட் நகரசபைத் தேர்தலுக்குப் பிறகு அண்மையில் பரோடாவிலும் சூரத்திலும் நகரசபைத் தேர்தல்களில் மக்கள் முன்னணி மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளது. பல முக்கியமான இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் தோல்வி அடைந்துள்ளனர்.


இந்திர ஜாலங்கள் புரிவார் என்று எதிர்பார்த்து ஹிதேந்திர தேசாய், இந்திரா காங்கிரஸ் தலைமையை ஏற்குமாறு கோரப்பட்டார். அவரும், ''இந்த நகரசபைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் பெறும் வெற்றிக்குப் பிறகு மக்கள் முன்னணி முதலமைச்சர் ராஜிநாமா செய்வதை வரவேற்போம்'' என்று வீராப்பாகப் பேசினார். இப்போது சுருதி இறங்கி, ''நல்ல எதிர்க்கட்சியாக இயங்குவோம்'' என்கிறார்.

இந்திரா காங்கிரஸ் ஆத்மப் பரிசோதனையில் ஈடுபட வேண்டும் என்று கோரும்போதே மக்கள் முன்னணி வெற்றிப் போதை தலைக்கேறிவிட அனுமதிக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

அறிஞர்களுக்கு அஞ்சலி

ராஜாஜியின் பிறந்த தினத்தையொட்டி வெளியாகும் இந்த அஞ்சலி இதழில் பிரசுரிக்க திரு சி. ஆர். நரசிம்மன் சில கடிதங்களைக் கொடுத்து உதவியுள்ளார். அரிய பொக்கிஷங்களை அனைவரும் அனுபவிக்க அளித்த அவருக்கு நன்றி.

மேலும், எதிர்பாராத ஒரு பொருத்தத்துடன் 'பொன்னியின் புதல்வர்' அத்தியாயம் அமைந்திருப்பதை எண்ணி மெய் சிலிர்க்கிறோம். ராஜாஜியின் வாழ்க்கையில் பரபரப்பான ஒரு கட்டத்தைப் பற்றி கல்கி அவர்கள் என்னவெல்லாம் எழுதினார், தமது தலைவர் சார்பில் பேனாப் போர் நடத்துகையில் எப்படியெல்லாம் சினந்து சீறினார், வருந்தி நெகிழ்ந்தார், மகிழ்ந்து புளகித்தார் என்பதைச் சென்ற வாரமும் இந்த வாரமும் சுந்தா அவர்கள் அற்புதமான ஆற்றலோடு எடுத்துக்காட்டியுள்ளார். டிசம்பர் ஐந்தாம் தேதி கல்கியின் நினைவு நாள் என்பதால் இவ்விரு அத்தியாயங்களும் அவருக்கும் விசேஷ அஞ்சலிக் கட்டுரைகளாகவே அமைகின்றன.



அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை

கோடி அர்ச்சனை

நாடு வளம்பெற, மக்கள் நல்வாழ்வு பெற்று மகிழ, அறம் தழைக்க, நல்லாட்சி நிலைபெற, எல்லா உயிர்களும் இன்புற்று வாழ அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கு கோடி அர்ச்சனை, வரும் 7-12-1975-ம் தேதி முதல் நடைபெறுகிறது. அன்பர்கள் அனைவரும் இக் கோடி அர்ச்சனையில் பங்கு கொண்டு அன்னையின் திருஅருள் நோக்கும், புனித பிரசாதமும் பெற வேண்டுகிறோம்.


சகஸ்ரநாமம் அர்ச்சனை டிக்கட் 1க்கு ரூ. 15.00
லட்சார்ச்சனை செய்ய ... ரூ. 1,500.00

திரு என். பொன்னப்பன் அவர்கள்
தலைவர், அறங்காவலர் குழு

திரு டி. தியாகையா அவர்கள்
திரு ஆர். கோபால்சாமி அவர்கள்
திரு கே. எஸ் இராமகிருஷ்ணன்,
எம். எல். ஏ., **அவர்கள்**
திரு எம்.பி என் பொன்னுச்சாமி அவர்கள்
அறங்காவலர்கள்

ஆர். திருவேங்கடசுவாமி,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி

பூரண கைங்கரியம்



ஜகத்குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்

அய்யாவாள் ஒரு சிராத்த தினத்தன்று பஞ்சமனுக்குப் போஜனம் பண்ணி வைத்தார் என்பதற்குப் பிராயச்சித்தமாக அவர் கங்கா ஸ்நானம் செய்து வரவேண்டும் என்று நாட்டாண்மைக்காரர்கள் தீர்ப்புப் பண்ண, அவர் தம் வீட்டுக் கிணற்றிலேயே கங்கையைப் பொங்க வைத்தார் என்ற விஷயம் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும். இப்படிக் கங்கை வந்தது ஒரு கார்த்திகை அமாவாசையில். இப்போதும் அந்தப் புண்ய தினத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் திருவிசநல்லூரில் அந்தக் கிணற்று ஜலத்தில் ஸ்நானம் செய்தால் கங்கா ஸ்நான பலன் கிடைக்கும் என்று நம்பிச் செய்து வருகிறார்கள்.

ஏகாதசிப் பிரவசனத்தைப் பற்றி ஆரம்பித்தேன். ஏகாதசியில்தான் பஜனையும் விசேஷம். தற்செயலாக பஜனை சம்பிரதாயப் பிரவர்த்தகர்களான போதேந்திராள், அய்யாவாள் இவர்களைப் பற்றிப் பேசுகிற பாக்கியமும் சேர்ந்தது. இவர்கள் சைவ வைஷ்ணவ பேதமே இல்லாமல் இருந்திருக்கிறார்கள் என்று சொல்ல வந்தேன்.

அய்யாவாள், ஸீதா கல்யாணத்துக்கு முன்னால் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி சிவதநுசை ஒடித்த விஷயத்தை ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார். அங்கே ''ஸ்வகர ப்ரதி பாடித ஸ்வ சாப:'' என்கிறார். அதாவது, தன் கையாலேயே தன் வில்லை ஒடித்துக் கொண்டார் என்கிறார். 'சிவதநுஸ் ஏற்கனவே நாராயணனால் விரிசல் ஆக்கப்பட்டது ; அப்புறம் நாராயணன் ஸ்ரீ ராமனாக வந்து அதை நன்றாகவே ஒடித்துப் போட்டுவிட்டார்' என்பதாக இந்தத் தநுர்பங்க சமாசாரத்தை வைத்து ஈச்வரனைத் தாழ்த்திப் பேசுவது நீண்ட காலமாக வந்த ஒரு வாதம். ஆனால் சமரசமாகப் பார்த்த அய்யாவாளுக்கோ, சிவ விஷ்ணு பேதமே தெரியவில்லை. 'சிவனே தான் விஷ்ணு, விஷ்ணுவேதான் ராமன், ஆகையினால் ராமனும் சிவனும் ஒன்றுதான். தன் கையால் தன் வில்லையே முறித்துப் போட்டார். அவருடைய லீலைக்கு இதெல்லாம் வேண்டியிருக்கிறது' என்று எழுதிவிட்டார்.

ஆழ்வார்கள் விஷ்ணுபரமாகப் பாடி வைத்திருக்கிறார்கள். நால்வர் சிவபரமாகப் பாடினார்கள். வேதத்தில் சகல தெய்வங்களையும் ஒரே மாதிரி ஸ்தோத்திரம் செய்திருக்கிறது. உபநிஷத்து என்று போனால், அங்கே தெய்வங்களைப் பற்றி அதிகம் பேச்சில்லாமல் எல்லாம் ஆத்ம தத்துவமாகச் சொல்லியிருக்கிறது. இங்கே திருவள்ளுவரை எடுத்துக் கொண்டால் அவர் தெய்வம், தத்துவம் இவைகளைப் பற்றி வைதிக சம்பிரதாயப்படியே சொல்லியிருந்தாலும், அதைவிட ரொம்ப அதிகமாக தர்மங்கள், நன்னெறிகள் (Moral, ethics) இவற்றையே சொல்கிறார். இன்னொரு பக்கம் திருமூலரைப் பார்த்தால் அங்கே ஸ்வாமி, பக்தி என்பதைவிடப் பிராணாயாமம், தியானம், தாரணை, சமாதி இத்யாதி யோக சமாசாரங்கள்தான் நிறைய வருகின்றன. 'இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொன்றைச் சொன்னால் எதை எடுத்துக் கொள்வது' என்றால், எதை எடுத்துக் கொண்டாலும் தப்பில்லை. நாம் எடுத்துக் கொண்டதை நடுவிலே விடாமல், அதையே நம்பிக்கையோடு பிடித்துக்கொண்டு போய்க் கொண்டேயிருந்தால் முடிவில் எது பரமார்த்த சத்தியமோ அதை அடைந்துவிடுவோம். ஆரம்பத்தில் இவை வேறு வேறு வழிகளாகத் தோன்றினாலும், முடிவில் எல்லாம் கொண்டு சேர்க்கிற இடம் ஒன்றுதான்.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்(று) உணர்

இதே மாதிரி 'சிவமஹிம்ன ஸ்தோத்திர'த்திலும் சொல்லியிருக்கிறது. புஷ்பதந்தர் என்ற மகான் — கந்தர்வராக இருந்து ஈசுவர சாபத்தால் பூமியில் விழுந்தவர் என்று கூடச் சொல்வார்கள் — பரமேசுவரன் மகிமைகளைப் பற்றிச் சொல்கிற ஸ்தோத்திரம் அது. அதிலே ஒரு சுலோகத்தில், 'த்ரயீ (வேதம்), ஸாங்கியம் (தத்வ ஆராய்ச்சி), யோகம், பசுபதி மதம், வைஷ்ணவம் என்பதெல்லாம் அவரவரின் ருசி விசித்திரத்தைப் பொறுத்து ஒரே பரமாத்ம தத்வத்தில் கொண்டு சேர்க்க ஏற்பட்டவைதான் — எந்த நதியானாலும் ஒரே சமுத்திரத்தில் போய் விழுகிற மாதிரி' என்று சொல்லியிருக்கிறது. இங்கிலீஷ்காரர்கள் இதே சமரச திருஷ்டியில்தான் 'Jehovah, Jove on land' என்கிறார்கள். பைபிள் தோன்றிய இஸ்ரேல் பிரதேசங்களில் இருந்த ஹீப்ரு, ஸெமிடிக் மத ஸ்வாமிதான் ஜெஹோவா. கிரீஸ் முதலான தேசங்களில் இருந்த ஹெலனிக் மதத்தின் கடவுள் 'ஜவ்'. ஜுபிடரின் இன்னொரு பெயர்தான் ஜவ். 'லார்ட்' — பிரபு — என்பது பொதுவாக எல்லா மதத்திலும் ஈசுவரனுக்குச் சொல்கிற பேர். பேர் வேறாயிருந்தாலும் ஆசாமி ஒருத்தனேதான். (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள் ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.]



ராஜாஜியின் கடிதங்கள்...

● ராஜாஜியின் 97-வது பிறந்த நாளின் போது வெளியாகும் இவ்விதழில் காந்திஜி ராஜாஜிக்கு எழுதிய கடிதம், ராஜாஜி சிறையிலிருந்து எழுதிய கடிதம் - தீரர் சத்தியமூர்த்தி சிறையிலிருந்து வெளியில் வந்ததும் எழுதிய கடிதம் ஆகியவை பிரசுரமாகின்றன. இவற்றிலிருந்து இத்தலைவர்களிடை எத்தகைய நட்பு நிலவியது எனப் புரியும்.

1941ம் ஆண்டு தனி நபர் சத்தியாக்கிரகத்தின்போது ராஜாஜி திருச்சிறைப் பள்ளிச் சிறையில் இருந்தார். அப்போது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறைதான் ராஜாஜி தம் வீட்டுக்குக் கடிதம் எழுத முடியும். வீட்டிலிருந்தும் அதே மாதிரி ஒரு முறைதான் கடிதம் வர முடியும். இப்படி ஒரு கடுமையான கட்டுப்பாடு இருந்தது. ஆகவே, ராஜாஜி வெளியில் யார் யாருக்கு என்னென்ன தகவல் சொல்ல வேண்டுமோ அவற்றை யெல்லாம் தமது புதல்வர் திரு நரசிம்மனுக்கு எழுதி, அனுப்பச் சொல்லுவார். அதே போல் நரசிம்மனும் வெளியிலிருந்து ஏதாகிலும் முக்கியமான தகவல்கள் வந்தால் தம் கடிதத்துடன் இணைத்துச் சிறையிலிருக்கும் ராஜாஜிக்கு அனுப்பி வந்தார்.

ஒரு முறை காந்திஜிக்கு நரசிம்மன் எழுதுகையில், 'நீங்கள் சிறையிலிருக்கும் என் தகப்பனருக்கு ஒரு கடிதம் எழுதினால் அவருக்குச் சற்று உற்சாகமாக இருக்கும்' என்று எழுதினார். அதன்படி காந்தி மகான் ராஜாஜிக்கு எழுதினார்.


அந்தக் கடிதத்துக்குப் பதிலாக ராஜாஜி, காந்தி மகானின் காரியதரிசியாகப் பணியாற்றி வந்த ஸ்ரீ மகாதேவ் தேசாய்க்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்துடன் இன்னும் பலருக்குத் தகவல்கள் சொல்லும்படி திரு நரசிம்மனுக்கு எழுதியிருக்கிறார் ராஜாஜி.

— ஆசிரியர்

சேவா கிராமம்
வார்தா (வழியாக) 22–1–41

என் அன்புள்ள சி. ஆர்.

இது உங்களைத் திருப்திப்படுத்த அல்ல— நரசிம்மனின் திருப்திக்காக. உங்களுக்கு உபசாரமாகவோ, மற்ற விதத்திலோ என்


22-1-41

My dear C.R.
This is not to
please you but
Narsinhan. I know
you don't need
a formal or other
letter from me.
Letters are meaning-
less when hearts
can speak to
each other.
Love - Bapu



காந்திஜி எழுதிய கடிதம்

சத்தியமூர்த்தி மகள் லட்சுமி



விடமிருந்து கடிதம் தேவையில்லை என்பது எனக்குத் தெரியும். உள்ளங்கள் ஒன்றுடன் ஒன்று பேசி உறவாட முடியும்போது கடிதப் பரிமாற்றங்களுக்குப் பொருளே இல்லை. நீங்கள் அங்கிருந்து உங்கள் கடமையை ஆற்றுகிறீர்கள், நாங்கள் வெளியிலிருந்து எங்கள் கடமையை ஆற்ற முயல்வது போல. உங்கள் உடம்பை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளப் பாருங்கள். ஹிந்தி படிப்பை முடித்து விடுங்கள்.

அன்புடன் பாபு


திருச்சிராப்பள்ளி
21-2-41

அன்புள்ள மகாதேவ்,

நரசிம்மனுக்கு எழுதும் (பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை எழுத அனுமதிக்கப்பட்ட) கடிதத்துடன் இதை எழுதுகிறேன். நரசிம்மன் இதை உங்களுக்கு அனுப்புவான். பாபுவுக்கு என் அன்பைத் தெரிவிக்கவும். நரசிம்மன் மூலம் அவர் எழுதிய சிறு கடிதம் எனக்குக் கிடைத்தது. வாடா மலர்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை. சிறைக்கூடக் கடிதப் போக்கு வரத்து விளைவிக்கும் கால தாமதம் அவற்றை ஒன்றும் செய்யா. அவரிடம் நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்று சொல்லவும். நூல் நூற்கிறேன்; படிக்கிறேன்; அரசியலைப் பற்றி நினைப்பதே இல்லை. நன்கு படித்த அறிவாளிகளுடன் சேர்ந்து தினம் கொஞ்சம் வால்மீகி, கொஞ்சம் குறள், கொஞ்சம் பகவத் கீதை, கொஞ்சம் வைணவப் பிரபந்தங்கள் படிக்கிறேன். வால்மீகியில் 82 அத்தியாயங்கள் படித்தாகி விட்டன. அப்படியே குறளையும் முப்பது அதிகாரங்கள் படித்து முடித்து விட்டோம். ஆழ்வார்களின் சில நூறு பாசுரங்கள் படித்து விட்டோம். கீதையை ஒருமுறை வேகமாக முழுதினையும் படித்தோம். இப்போது சங்கரர் — ராமானுஜர் பாஷ்யங்களுடன் சேர்ந்து மீண்டும் படிக்கத் தொடங்கியிருக்கிறோம். எத்தனை விடுவிக்க முடியாத முடிச்சுக்கள் காணக் கிடைக்கின்றன! ஆழ்வாராதிகளில் காணக் கிடைக்கும் பக்தி தேன் போல் இனிக்கிறது. என்னைப் போன்ற இறுகிய இருதயம் படைத்தவர்களுக்கு என்ன பயன்!

சில இளம் நண்பர்களுடன் ஷேக்ஸ்பியரின் சில நாடகங்களை மீண்டும் படித்தேன். எப்படிப்பட்ட பெரிய மனிதர் அந்த அசகாய சூரர்!

முன்னாள் என் சக மந்திரி முனுசாமி பிள்ளை இங்கு சிறைவாசிகளிடை சர்க்கா பழக்கம் ஏற்படுத்தப் பெரு முயற்சி செய்து வருகிறார். அவர் ஒரு நல்ல பிரசாரகர்; நல்ல பக்தர்; என்ஜினியர். இப்படி அத்தனையும் கலந்த இனிய மனிதர். அவர் எனக்கு அடுத்தாற் போலிருப்பவர். என்னைத் தாயினும் சாலப் பரிவுடன் பார்த்துக் கொள்கிறார். அப்படியே, இன்னும் சிலர், டாக்டர் ராஜன், பாபி நீடு போன்றவர்கள் என்னை அக்கறையோடு கவனித்துக் கொள்கிறார்கள். சத்தியமூர்த்தி நன்றாகவே இருக்கிறார். ஆனால் அவருக்குத் தேவையான தூக்கம் வருவதில்லை. கிருபளானி மூலம் பாபு சந்தோஷமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ச்சியுற்றேன்.



டி. கே. சி.



சத்தியமூர்த்தி

தங்களுக்கும் அங்குள்ள அத்தனை பேருக்கும் என் அன்பு. —ராஜாஜி

நரசிம்மன்: என்னுடைய அன்பை ஸ்ரீ எ. நடேசன், அல்லாடி, டி.டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோருக்குத் தெரிவிக்கவும். ''பஞ்ச்'' (Punch) பிரதிகள் வந்தன.

டி.கே.சி.க்கு என் வணக்கங்களைத் தெரிவிக்கவும். குறளில் டி.கே.சி. விசேஷமாக வற்புறுத்திச் சொல்லும் குறிப்புக்களை, இங்குள்ள சிலருக்கு நான் சொல்லி வருகிறேன்.

* செல்லையாவைப் பற்றிக் கவலையுடன் இருக்கிறேன். அவரைப் பற்றி நல்ல செய்தி வராதா என்று ஏங்குகிறேன்.

டபிள்யூ. கே. லாங்லிக்கு * அவருடைய புத்தகம் — ஒரு நாவல் — வந்து சேர்ந்தது என்றும் அதனை டாக்டர் சுப்பராயன் படித்து வருவதாகவும் தெரிவிக்கவும். நான் தமிழ், ஸம்ஸ்கிருத இலக்கியங்கள் படித்து வருகிறேன். நாவல் படிப்பது அறுவையாகக் கருதுகிறேன். தற்கால இலக்கியம் என்ற வகையில் அதிகப்பட்சம் என்னால் படிக்கக் கூடியது ஷேக்ஸ்பியரின் சரித்திர நாடகங்கள். அவற்றைப் படித்து நான் ரொம்பவும் அனுபவித்து வருகிறேன். என் வகுப்பைச் சேர்ந்த கைதிகளுக்குப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை ஒரு கடிதத்துக்கு மேல் வெளி உலகத்திலிருந்து பெற முடியாது என்பது லாங்லிக்குத் தெரியாது போலும். அவருக்கு எல்லா விவரங்களையும் சொல்லவும். அத்துடன் அவருடைய கோட்டயம் பிரசங்கத்தில் என்னைப் பற்றியும் நம் வேலையைப் பற்றியும் பரிவுடன் குறிப்பிட்டதற்காக நான் ரொம்பவும் மகிழ்ந்தேன் என்பதையும் தெரிவிக்கவும்.

செல்லையா-தீபன் >

வி. ஆர். நரசிம்மன்





அன்புள்ள * ராமுவுக்கு,

நரசிம்மன் இந்தக் குறிப்பை அனுப்புவான். நரசிம்மனின் முந்தைய கடிதத்துடன் அனுப்பி வைத்த உன் கடிதம் பார்த்து ரொம்பவும் மகிழ்ந்தேன். ஆம், அது ரொம்ப நாளுக்கு முன் எழுதியதல்லவா என்று நீ கருதலாம். சிறை வாசத்தில் கடிதப் போக்கு வரத்துக்கு அவ்வளவு கால தாமதமாகிறதல்லவா? * இந்திராவும் சீனுவும் நன்கு வளர்ந்து வருகிறார்கள் என்பதையும் நீயும் உற்சாகமாய் இருக்கிறாய் என்பதையும் கேட்டு மகிழ்ச்சி. உன் யோசனைப்படி நடக்கிறேன். எனினும் எங்களையெல்லாம் பற்றிக் கவலைப்படாதே! * தங்கத்துக்கும் குழந்தைகளுக்கும் என் அன்பு. குழந்தைகளை எதற்காகவும் அழ விடாதே! நரசிம்மனுக்கு எழுதிக் கொண்டிருக்கவும்.

* படிக்கார முதலியாருக்கு ஒரு நல்ல கடிதம் எழுதவும். உன் மூலமாக எனக்குச் செய்தி கிடைத்தது என்று தெரிவிக்கவும். அவருடைய அன்பான எண்ணங்களை நான் பெரிதும் போற்றுகிறேன். அவருடைய நட்பை ரொம்பவும் மதிக்கிறேன்.

முன்பு திட்டமிட்டபடி ஆச்ரமம் சேவா சங்கத்துக்குத் தவணை முறையில் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடட்டும். அதற்கான பணத்தைச் சேமிக்க முடியும் என்று நினைக்கிறேன். * ராமநாதனுக்கு என் அன்பு. பாபுவுடன் தொடர்பு வைத்துக் கொள்ளச் சொல்லவும்.

ராஜாஜிக்கு தீரர் சத்தியமூர்த்தியின் கடிதம்

எஸ். சத்தியமூர்த்தி

"சுந்தரா"
தியாகராயநகர்
சென்னை, 30–8–41

அநேக நமஸ்காரம். உபயக்ஷேமம்.

நான் இம்மாதம் 23ந் தேதி வெளியில் வந்தேன். உடம்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குணமடைந்து வருகிறது. நாளைய தினம் நானும் என் சம்சாரமும் திருக்குற்றாலம் போகிறோம். அங்கு செப்டம்பர் 26ந் தேதி வரை தங்குகிறோம். 27ந் தேதி திருச்சி வந்து உங்களைப் பார்ப்பதாக உத்தேசம். தங்கள் சம்மதத்தைக் கோருகிறேன். லட்சுமி * குற்றாலம் வரவில்லை. அவளுக்குப் பரீட்சை.

உங்கள் உடம்பு சௌக்கியமாக இருக்கிறதென நம்புகிறேன். என்னுடைய பேச்சுக்களைப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இப்பொழுது நடக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. அத்துடன் கூட நாம் சட்டசபைகளிலும் மந்திரிப் பதவிகளிலுமிருந்து வேலை செய்ய வேண்டுமென்பது என் அபிப்பிராயம். நான் பாபுவுக்கும் இது விஷயமாக எழுதியிருந்தேன். அடுத்த இந்திய சட்டசபைக் கூட்டத்துக்குக் காங்கிரஸ்காரர்கள் போக அனுமதி கொடுக்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறேன். தாங்கள் வெளியே வரும் தேதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் இப்போது மலையாள வைத்தியரிடம் சிகிச்சை அடைந்து வருகிறேன். அதிகம் குணமிருக்கிறது.

அநேக நமஸ்காரம்.

தங்கள் அன்புள்ள
எஸ். ஸத்தியமூர்த்தி

---

(1) செல்லையா — டி. கே. சி.யின் புதல்வர்; டி. பி. நோயினால் அப்போது வருந்திக் கொண்டிருந்தார்.

(2) லாங்லே — ஐரோப்பிய சட்டசபை அங்கத்தினர்களின் தலைவராக இருந்தவர்.

(3) ராமு—ராஜாஜியின் இரண்டாவது குமாரர். அப்போது சேலத்தில் டாக்டராகப் பணியாற்றி வந்தார்.

(4) இந்திராவும் சீனுவும்—ராமுவின் குழந்தைகள். ராஜாஜியின் பேரக் குழந்தைகள்.

(5) தங்கம்—ராமுவின் மனைவியார்.

(6) படிக்கார முதலியார் — என்ற குடும்பப் பட்டப் பெயரில் அந்நாளில் இலங்கையிலிருந்த சீமான்; ரோமாபுரியிலிருக்கும் போப்பாண்டவரால் மதிக்கப் பெற்றவர். பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்த செல்வாக்குப் பெற்றவர். இந்திய அரசியல் சிக்கலை விடுவிக்க அந்நாளில் முயன்றவர்களில் ஒருவர்.

(7) ராமநாதன் — ராஜாஜியின் முதல் மந்திரி சபையில் மந்திரியாக இருந்தவர்.

(8) லட்சுமி — சத்தியமூர்த்தியின் புதல்வி.

ஒரு முறை ராஜாஜி சொன்னார்...

"நான் அரசியலிலிருந்து துறவறம் பூண்டுவிட்டது நாட்டுக்குப் பெரும் நஷ்டம் என்றும் சீக்கிரமே அரசியலுக்குத் திரும்பி நாட்டுப் பணியில் ஈடுபட வேண்டும் என்றும் நண்பர் கேட்டுக்கொண்டார். இதில் அவருடைய தவற்றினை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நாட்டு நலனில் அக்கறையுள்ள எவரும் நிரந்தரமாக விலகிவிட முடியாது. சிறிது காலம் எட்ட நின்று நாட்டு நடப்பைச் சீர்தூக்கிப் பார்த்து ஆலோசிக்க வேண்டும். அடுப்பின் மேல் பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள பதார்த்தம் பக்குவமாக வேண்டுமாயின் விறகுக் கட்டையை உள்ளே தள்ளி நன்றாக எரிய விட வேண்டும். கொதி ஏற்படுவதற்கேற்ப அவ்வப்போது உள்ளே தள்ளுவீர்கள். வெளியே இழுப்பீர்கள். இந்த விறகுக் கட்டையும் (தன்னைத் தானே சுட்டுக்கொண்டு) அது போலத்தான். ஆனால் ஒரு வித்தியாசம். நீங்கள் பக்குவம் செய்யும்போது அந்த விறகுக் கட்டையை உள்ளே தள்ளவும், வெளியே இழுக்கவும் செய்வீர்கள். இந்த விறகுக் கட்டையோ நாட்டு நலனுக்கேற்ப தன்னைத் தானே உள்ளே தள்ளிக்கொள்ளும், வெளியே இழுத்துக் கொள்ளும். இறுதியில் முழுதும் எரிந்து சாம்பலாகித் தன்னைத் தானே கரைத்துக் கொள்ளும்."

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட அன்பர்கள் கண்களில் நீர் மல்கக் கரைந்து போனார்கள்.

நேரில் கேட்டவர்: காந்தி ஆசிரமம் கிருஷ்ணன்






மோகன எழிலுடன் கவனத்தை ஈர்க்க
37 வழிகள், அதற்கு உதவுவன
மதுரை துணிகளிலுள்ள 37 சாம்பல்
வண்ணங்களும் டிசைன்களும்.
உள்ளங் கவரும் 260 வகை
வண்ணங்களின், டிசைன்களின்
பேரணியிலே இது சிறு அணி.
இதுவரை இதைப் போன்ற
வண்ண வேலையின் கொஞ்சும்
எழிலில் எந்த ஆலையும்
மிஞ்சியதில்லை.
மதுரை துணிகள்
மதுரை கோட்ஸ் தயாரிப்பு

விநியோகஸ்தர்கள்:

உள்ளத்தை அள்ளும்

சென்ற ஆண்டு மே மாதம் என் கணவர் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருக்கும்போது திடீரென்று கண் பார்வை மங்கி, படிப்பதற்கும் எழுதுவதற்கும் முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. டெல்லியில் தள்ள கை தேர்ந்த கண் வைத்தியர்கள், கண்ணிலுள்ள ரெடினு என்னும் திரை எரிந்துவிட்டதால் ஏதும் சிகிச்சை செய்து குணமாக்க முடியாது என்று சொன்னார்கள். சென்னைக்கு வந்து டாக்டர் பத்ரிநாத்திடம் காட்டியபோது, கண்ணிலுள்ள திரையின் முன்னே ஒரு திரவம் ஊறுவதால் பார்வை மங்குகிறது; ஆனால் அறுவைச்சிகிச்சை செய்யுமளவுக்கு அது ஊறாததால் தற்போதைக்குக் கண்ணாடி அணிந்து கொள்ளலாம் என்றார்.

கண்ணாடிக்கு ஆர்டர் கொடுத்து விட்டுக் காஞ்சியில் என் கண்கண்ட தெய்வத்தைக் காணச் சென்றோம். தேனம்பாக்கத்திலே, கிணற்றடியிலே குழந்தைச் சிரிப்புடன் ஜோதி ஸ்வரூபம் வீற்றிருக்கக் கண்டோம்.

காலையிலேயே காஞ்சிக்குக் கிளம்பும் முன்னரே என் கணவர் "அனுக்கிரகம் செய்யத் திருவுளம் இருந்தால் பெரியவர்களே வலுவில் கூப்பிட்டு அனுக்கிரகிக்கட்டும். நானாகப் போய்ப் பேச மாட்டேன்" என்று சொல்லியிருந்தார். பகல் ஒன்றரை மணிக்குப் பெரியவாளைச் சுற்றி இருந்த கூட்டமெல்லாம் மனமாறப் பேசிக் கலைந்த பிறகு, பெரியவாளே, "இன்னும் யாராவது பேச இருக்காளா? பாருடா. ஒருத்தரையும் பேசாம அனுப்பக் கூடாது" என்றார். நான் அங்கு ஒரு மூலையில் காயத்ரி ஜபம் செய்துகொண்டு உட்கார்ந்திருந்த என் கணவரை உசுப்பி அழைத்துக் கொண்டு பெரியவாளிடம் சென்றேன். நான் என்னைப் பெரியவாளிடம் அறிமுகம் செய்து கொண்டவுடனேயே அவர் என் கணவரிடம் "ஏதேனும் குறை இருக்கிறதா?" என்று கேட்டார். மனம் நிறையக் குறை இருப்பதையும், மனோ நாசம் அனுக்கிரகிக்க வேண்டும் என்றும் கணவர் தெரிவித்தார்.

"மனோ நாசம் எதுக்குடா? மனம் நெறஞ்சு ஏற்படற சந்தோஷம்னா விசேஷம். என் அனுக்கிரகம் பரிபூரணமா வேணும்னுட்டு தந்திரமா, மனசு நெறயக் கொறை இருக்குனு சொல்லியிருக்கான்டா. என்னோட அனுக்கிரகம் அவனுக்குப் பரிபூரணமா இருக்குடா. அப்படின்னா அவன் சந்தோஷப்படுவான். அவன் சந்தோஷப்பட்டா அவ சந்தோஷப்படுவ. அவ சந்தோஷப்பட்டா நான் சந்தோஷப்படுவேன். நான் சந்தோஷப்பட்டா நீயும் சந்தோஷப்படுவையோன்னோடா" என்று உள்ளத்தை அள்ளும் பிள்ளைச் சிரிப்புடன் தம் சீடரைக் கேட்டார்.

காலையிலே என் கணவர் செய்த சபதத்தை அவருக்கு நிறைவேற்றி வைத்து, அவரை வலுவிலே அனுக்கிரகித்த விந்தையை எண்ணி எண்ணி இன்னும் வியப்பிலே மிதந்து கொண்டிருக்கிறேன் நான்.

சென்னை அடைந்தவுடன் கண்ணாடிக் கடையிலிருந்து கண்ணாடியைப் பெற்றுக் கொண்டு டாக்டர் பத்ரியிடம் என் கணவர் சென்றார். அடையாறு வி. எச். எஸ். செண்டரில் அவரை மீண்டும் பரிசோதித்த டாக்டர் பெரு வியப்புடன் கண்ணில் ஊறும் திரவம் மறைந்துவிட்ட விந்தையைத் தெரிவித்தார்.

பிள்ளைச் சிரிப்பு

முன்னமொருமுறை நான் சென்னையில் பெரியவாளைத் தரிசிக்கச் சென்றபோது, டில்லியிலிருந்த என் கணவர் சாந்தினி சௌக்கில் உள்ள கௌரி சங்கர் கோயிலுக்குச் சங்கர ஜயந்தியன்று போய் ருத்ரம், சமகம் பாராயணம் செய்ய வேண்டுமெனப் பெரியவாள் பணித்தார். எனக்குத் தெரிந்து என் கணவர் ருத்ரம், சமகம் பாடம் செய்ததில்லை யாதலால் அவர் எப்படி இந்தக் கட்டளையை நிறைவேற்றுவார் என்று திகைத்தேன். "எல்லாம் தெரியும், சொல்லச் சொல்லு" என்றார் என் தெய்வம். டில்லிக்கு உடனே ருத்ரம் சமகம் கற்றுக்கொள்ளச் சொல்லிக் கடிதம் பறந்தது. கணவர் பதில் மறு தபாலில் வந்தது: "நீ ஊருக்குச் சென்றவுடனேயே நம் வீட்டுக்குத் தாற்காலிகமாகக் குடி வந்திருந்த சாஸ்திரிகள் என்னிடம் வலுவில் வந்து ருத்ரம் சமகம் கற்றுக்கொள் என்றார். உடனே ஒப்புக் கொண்டேன். உன் கடிதம் வந்த அன்றுதான் அத்யயனம் முடிந்து அவருக்குச் சம்பாவனை செய்தேன்!"

– பத்மா வைத்தியநாதன்





ஒரு பிடி அவல்

வாமனன்

சமீபத்தில் லண்டனில் அகில உலக அழகிகள் போட்டி நடந்தது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து அறுபத்தி ஆறு அழகிகள் இப்போட்டியில் கலந்துகொள்ள வந்திருந்தனர். இப்போட்டியில் எந்த நாட்டு அழகி ''உலக அழகி'' என்ற பட்டத்தைப் பெற்றாள் என்று நான் சொல்லப் போவதில்லை. பின் இந்த விஷயத்தை இப்போது பிரஸ்தாபிப்பானேன் என்று கேட்டால், இந்த அறுபத்தாறு அழகிகளில் ஓர் அழகி கடைசி நிமிஷத்தில் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள மாட்டேன் என்று மறுத்து விட்டாள் என்ற செய்தியைச் சொல்லத்தான். இப்படி மறுத்தவள் எந்த நாட்டு அழகி தெரியுமா? ஸ்பெயின் நாட்டு அழகி. ஸ்பெயின் நாட்டு அதிபர் ஜெனரல் பிராங்கோ இறந்துவிட்டார் அல்லவா? அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில்தான் போட்டியிலிருந்து பின்வாங்கி விட்டாள் இந்த அழகி! வாழ்க அவள் தேசப் பற்று!

திருச்சி ஜில்லாவில் லப்பைக் குடிகாடு என்ற ஊரில் ஒரு சர்க்கரை ஆலையைத் திறந்து வைக்கச் சென்ற முதல்வர் திரு கருணாநிதி அவர்களை, அவ்வாலைக்குப் பெயர் வைக்கும்படியும் கோரியிருக்கிறார்கள். நாட்டில் அவசர நிலைமை பிரகடனமாகியுள்ளதன் பயனாகவோ என்னவோ, ''ஜவாஹர்லால் நேரு சர்க்கரை ஆலை'' என்று பெயர் சூட்டியிருக்கிறார் — வழக்கமான போக்குக்கு மாறாக! வரவேற்கத்தக்க மாற்றம்தான்!

சென்ற வாரம் மாக்ஸ் முல்லர் பவனில் திரு ராஜரங்கன், எழுத்தாளர் திரு அகிலன் அவர்களை ''நேருக்கு நேர்'' கொண்டு வந்து நிறுத்தினர். அப்போது வெளியான தகவல்:

பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலத்தில் அகிலனின் சொந்த ஊரான புதுக்கோட்டை, சுதேச சமஸ்தானமாக இருந்தது. அப்போது ஜவாஹர்லால் நேருவின் கார் சமஸ்தானத்துக்குள் நுழையக் கூடாது என்று சமஸ்தான போலீஸ் தடை உத்தரவு போட்டதாம்.

தீரர் சத்தியமூர்த்தி ஜவாஹர்லால் நேருவை நடத்திச் சமஸ்தானத்துக்குள் அழைத்துச் சென்றாராம்.

போலீஸ் அதிகாரிகள் விழித்தனராம்; பரபரப்படைந்தனராம்.

சத்தியமூர்த்தி, ''எங்களுக்கு வந்துள்ள உத்தரவில் தடை நேருஜியின் காருக்கே தவிர நேருஜிக்கு அல்ல. அதனால் நேருஜி நடந்து உள்ளே வருகிறார்'' என்றாராம்!

சத்தியமூர்த்தியும் புதுக்கோட்டை வாசிதான்!

எம்மிட் மெக்பீ என்ற முப்பத்து நாலு வயதான ஆடவரின் சுவாசப் பையில் துப்பாக்கி ரவை போய்விட்டது என்று. அதனை எடுக்க டாக்டர்கள் அவரை ஆபரேஷன் மேஜையில் கிடத்தினார்கள். அந்தச் சமயம் அவருக்கு இருமல் வந்தது. சுவாசப் பையில் சிக்கியிருந்த ரவை வாய்க்கு வந்துவிட்டது.

இது அமெரிக்காவில் ஐயோவா மாநிலத்தில் டேவன் போர்ட் என்ற ஊரில் நிகழ்ந்தது.

டாக்டர்களுக்கு வேலை இல்லாமல் செய்துவிட்டாரே!

''ஆனந்த குமாரசுவாமி கழகம்!'' என்று ஒரு 'கலை தெரி கழக'த்தைத் தொடங்கியிருக்கிறார் திரு கமலய்யா.

திரு கமலய்யா மத்திய சர்க்காரிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்னைக்கு வந்தவர். தமிழிலக்கியங்களில், கலைகளில், ஆங்கில இலக்கியங்களில் மிகுந்த ஆர்வம் உடையவர். ஆனந்த குமாரசுவாமியிடம் அளவுகடந்த ஈடுபாடு கொண்டவர். அதன் விளைவு இக் கழகம்.

ஆனந்த குமாரசுவாமி பாரத நாட்டு கலை, சிற்பம், சங்கீதம் பற்றி அரிய ஆராய்ச்சிகள் நடத்தி மேற்கத்திய மக்களுக்கு அதன் நுட்பங்களையும் அழகுகளையும் விளக்கியவர். ஏன், இந்தியர்களுக்கே விளக்கியவர் அவர்தான் என்பார் திரு கி. சந்திரசேகரன். ஆனந்த குமாரசுவாமியின் பணி மிகப் பெரியது.

அவர் இந்திய நாட்டில் ஆர்வம் கொண்டு இந்தியாவில் தங்கி தமது பணியைத் தொடர பனாரஸ் சர்வ கலாசாலைக்கு வேலை கோரி மனுப் போட்டார். சர்வ கலாசாலை மனுவை நிராகரித்துவிட்டது. அமெரிக்கா அவருக்குப் புகலிடமும் ஆராய்ச்சிப் பணிக்கு வசதியும் அளித்தது! அமெரிக்காவின் அதிர்ஷ்டம் அப்படி!

பஞ்சாப் சிங்கம் என்றும், பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமாகவும் விளங்கிய பஞ்சாப் மன்னன் ரஞ்சித் சிங் போரில் எவ்வளவு தீரனோ அவ்வளவு அழகில் கோரம்— ஒற்றைக் கண்ணன்; அம்மை வடு முகம். எனினும் ஆறாத காதல் பசி கொண்டவன்.

ரஞ்சித் சிங் முல்டான் நாட்டை வென்றான். வாஸ்தவம். ஆனால் அந்நாட்டு மோகரன் என்ற இளம் அழகிய கணிகைக்கு அடிமையானான். அவளைத் திருமணம் செய்து கொண்டான். மோகரன் எவ்வளவு அழகியோ அவ்வளவு புத்திசாலியும் கூட. வேடிக்கையாகவும் சமத்காரமாகவும் பேசக் கூடியவள்.

ஒருமுறை அவள் அரசனைக் கிண்டல் செய்யும் நோக்கத்துடன் ''என் அருமை விகார மகாராஜா, இறைவன் எல்லோருக்கும் அழகைப் பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டிருந்த போது, நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''நாடு பிடிக்கப் போயிருந்தேன்!'' என்று பளிச்சென்று ரஞ்சித் சிங் பதில் சொன்னான்.



சிந்தனைக்குச் சிகரம்

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்று கூறத் தக்க பெருமையை இவ்வுலகு பெற்றிருக்கலாம். ஆனால் மண்ணுலகில் பிறந்த பல்லாயிரம் கோடி மக்களில் ஒருசிலர் தமது சிந்தனையால் — செயலால் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பது மனித குலத்தின் பெருமையாகும். அவ்வாறு காலத்தைக் கடந்து, தமது சீரிய சிந்தனையால் செயலாற்றிய செம்மையால் தொடர்ந்து வாழும் பெருமையை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பெற்றிருக்கிறார்கள்!

இராஜாஜி அவர்கள் மறைந்து மூன்றாண்டுகளாகின்றன என்றபோதிலும், அவர் நம்மிடை இல்லை என்ற உணர்வு நமக்கு இல்லை. அவருடைய பழைய கட்டுரைகளை 'கல்கி' 'சுயராஜ்யா' ஏடுகளில் படிக்கும்போது, 'இன்றும் இருக்கிறார்! இன்றும் நமக்காக எழுதிக் கொண்டிருக்கிறார்! நேரில் நாம் அவரைக் காண முடியவில்லையே தவிர, எங்கோ அமர்ந்து நாட்டில் நடப்பதையெல்லாம் கண்காணித்து நமக்கு அவர் எழுதிக் கொண்டிருக்கிறார்!'' என்று கூறும் வகையில் அவர் பல ஆண்டுகளுக்கு முன் எழுதியவை பல இன்றும் பொருத்தமாய், நமக்கு அறிவுரை தருவதாக அமைந்துள்ளன. அவருடைய சிந்தனையும் எழுத்தும் காலத்தைக் கடந்து நிற்கின்றன.

''ஓர் அரசியல்வாதி அடுத்து வரும் தேர்தலைப் பற்றிக் கவலைப்படுகிறான், ஓர் அரசியல் ஞானி வருங்காலச் சந்ததிகளைப் பற்றிக் கவலைப்படுகிறான்'' என்று கூறுவார்கள். தன்னை அடுத்துள்ள நிலைமையையும் கால அளவையும் முன்வைத்து அரசியல்வாதி செயல்படுகிறான். தன்னை முன்வைக்காமல், நாட்டையும், மக்களினத்தையும் முன் வைத்து, சில அடிப்படை நெறி முறைகளுக்காக அரசியல் ஞானி சிந்திக்கிறான், பாடுபடுகிறான்.

பலரும் சிந்திக்கிறார்கள். ஆனால் சிந்தனையால் எல்லோருக்கும் தெளிவு பிறப்பதில்லை. முதலில் அவர்களுக்குத் தெளிவு உண்டாவதில்லை. அவர்களுக்குச் சிறிது தெளிவு கிடைத்தாலும், மற்றவர்களுக்கும் அந்தத் தெளிவை உண்டாக்கும்திறமை இருப்பதில்லை. தனக்குத் தெளிவு இருக்கிறது, பிறருக்கும் தெளிவைத் தந்திடும் திறமை இருக்கிறது — இவை இருப்பினும், இருக்கும் சூழ்நிலையைப் பார்த்து, ஏற்படக் கூடிய எதிர்ப்புக்களை நினைத்து, 'நமக்கேன் இந்தத் தொல்லை?' என்று அடங்கி விடுவர் சிலர். சிந்தனைத் தெளிவுடன் எழுத்தாற்றல், பேச்சாற்றலுடன், தமது சிந்தனையில் சரியெனப்பட்டதை அச்சமின்றி வெளியிடத் தக்க மன உறுதியும் தேவை.


மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமது கருத்துக்களை நேர்பட, அச்சமின்றி, அவதூறுகளைக் கண்டு ஆயாசப்படாமல், எடுத்துக் கூறினார். அதே சமயம் காலப் போக்கில் நிலைமைகள் மாறியபோது தமது முடிவுகளை மாற்றிக்கொள்ள அவர் தயங்கியதும் கிடையாது.

சுதந்திரப் போராட்டத்தில், ஆரம்ப முதல் தீவிரவாதியாகத் திகழ்ந்தவர், இராஜாஜி அவர்கள். சுதந்திர இயக்கத்தின் மூளையாக அவர்கள் விளங்கினார்கள். அவருடைய ஆலோசனையைப் பெறுவதில் அண்ணல் காந்தி அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் அக்கறை காட்டினார் என்பது வரலாறு அறிந்த உண்மையாகும். அறப்போராட்டத்தைத் தொடங்கியபோதுகூட, இராஜாஜியைத்தான் காந்தியடிகள் முதலாவதாகக் கலந்து வழிமுறை வகுத்தார் என்பதை, தமது வாழ்க்கை வரலாற்றில் காந்திஜி கூறுகிறார்.

''நாங்கள் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தபொழுது, ரௌலட் மசோதா சட்டமாக ஆக்கப்பட்டு விட்டது என்ற செய்தி வந்தது. அந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்தபடியே அன்றிரவு நான் உறங்கச் சென்றேன். அதிகாலையில் வழக்கத்துக்கு முன்னதாகவே நான் விழித்துக் கொண்டேன். உறங்கியும் உறங்காமலும் இருக்கிற நிலையில் திடீரென ஓர் எண்ணம் உதய



இரா. செழியன்



''உங்களுக்கு என்ன சார்! நாவலாசிரியர், பெரிய எழுத்தாளர்!''

''நீங்க மாத்திரம் சின்ன எழுத்தாளரா? நீங்களும் பெரிய எழுத்தாளர்தான்!''

மானது — அது ஒரு கனவைப் போலிருந்தது. விடியற்காலையில் இராஜகோபாலாச்சாரியிடம் என் எண்ணத்தை முழுமையாகக் கூறினேன்.''

சத்தியாக்கிரகம், ஹர்த்தால் போன்றவை சுதந்திரப் போராட்டத்தின் வழி முறைகளாக எவ்வாறு அமைந்தன என்பதைக் காந்திஜி அவ்வாறு விளக்குகிறார்.

காந்திஜியின் மனச்சாட்சியாக, காங்கிரஸ் போராட்டத்தின் தீவிரச் சின்னமாக, சுதந்திர இயக்கத்தின் கருத்துக் கருவூலமாக விளங்கிய இராஜாஜி அவர்கள், 1942 போராட்டத்தின்போது தவிர்க்க முடியாத சில சூழ்நிலைகள் உருவாகி யிருப்பதை உணர்ந்தார். மற்றவர்களுடன் மாறுபட்டாலும் தமது கருத்தை அச்சமின்றி வெளியிட்டார். அவருடைய கணிப்பு சரியென்பதைப் பின்பு வரலாறு மெய்ப்பித்தது.

நிலைமை மாற்றத்தைக் கவனியாமல், ஒரு திட்டத்தைப் பிடிவாதத்துடன் கடைப்பிடிப்பது இராஜாஜியின் பண்பு அல்ல. இந்திப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இராஜாஜி அவர்கள் ஆரம்ப முதல் விளங்கியபோதிலும், இந்திதான் ஆட்சி மொழி என்ற நிலைமை வலியுறுத்தப்பட்ட பொழுது, தமது ஐயப்பாட்டை, கவலையை, கருத்தை அவர் வெளியிடத் தயங்கவில்லை. நாட்டின் எதிர்காலமும், எல்லா மக்களின் நலன்களும் முக்கியமானவை என்ற அடிப்படையில் அவர் சிந்தித்தார். செயல்பட்டார்! அவருடைய சிந்தனை தேங்கிவிட்ட குட்டையல்ல. ஓடிக்கொண்டிருக்கும் தெளிந்த ஆறு!

கிண்டியில், காந்தி மண்டபத்துக்கு அருகில் இராஜாஜியின் நினைவாலயம் திறக்கப்பட்ட பொழுது, ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், ''இராஜாஜிக்கு ஒரு நினைவுச் சின்னம் தில்லியில் அமைக்கப்பட வேண்டும்'' என்று கூறினார். தில்லியில் இராஜாஜியின் சிலை அமைத்திட ஒரு திட்டம் இருக்கிறது. சென்ற ஆண்டு, நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. கே. தேவ் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் பங்கு பெற்றுள்ளனர். திரு மகாவீர் தியாகி, பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி, திருவாளர்கள் இரா. செழியன், ஏ. பி. வாஜ்பாய், கி. மனோகரன், சதாசிவம், எம். ஆர். மஸானி, சைத்தான் (பொருளாளர்), எம். எஸ். ஒபிராய், பிலுமோடி, வி. பி. ராஜூ, ராகேஷ் குப்தா.

தனிப் பெரும் திறமையும் இராஜாஜியிடம் தணியாத ஆர்வமும் உள்ள கலாசாகரம் இராஜகோபால் அவர்கள் சிலையை வடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

1975 டிசம்பரில், அந்தச் சிலை திறக்கப்பட வேண்டுமென முதலில் தீர்மானிக்கப்பட்டது. சிலை அமைப்பதற்கான இடம், தில்லி நாடாளுமன்றத்துக்கருகில் ஒரு வாய்ப்பான வட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆயினும் குறித்த காலத்தில் செய்து முடிக்கப்படாமல், நெருக்கடிகள் குறுக்கிட்டுவிட்டன.

இராஜாஜியின் நினைவுச் சின்னக் குழுவின் சார்பில் தென் மண்டலப் பகுதிக்கு ஒரு துணைக் குழு கீழ்க்கண்டவர்களை வைத்து அமைக்கப்பட்டுள்ளது. திருவாளர்கள் சித்ரா நாராயணசாமி, சதாசிவம், இரா. செழியன் எம். பி., ஜி. கே. சுந்தரம் எம். பி., பி. கோபால் ரெட்டி (ஆந்திரம்), கே. பி. கேசவ மேனன் (கேரளம்), கே. எஸ். ஹெகடே (கர்நாடகம்).

இராஜாஜி சிலை அமைப்பதைப் பொறுத்த வரை, குறிப்பிட்ட ஒரு சிலரை திரு சதாசிவம் அவர்களோ திரு சித்ரா நாராயணசாமி அவர்களோ, திரு மஸானி அவர்களோ சந்தித்தால், கலபத்தில் பெரும் தொகை கிடைத்துவிடும். சிலர் கூடிப் பெரும் தொகைகள் தருவதற்குப் பதில், பலர் கூடிச் சிறு சிறு தொகைகள் தருவது நல்லது.

இராஜாஜிக்குச் சிலை அமைப்பது அவருக்குப் பெருமை தரவல்ல. அது நமக்குப் பெருமை தருவது!

இராஜாஜியின் பெருமை அவருடைய தெளிந்த சிந்தனையில், திறம் மிக்க எழுத்தில், சலியாத உழைப்பில், குலையாத மன உறுதியில், இருக்கிறது! அவற்றை நாம் பின்பற்றுவோமாக!

மேலட்டை வண்ணப்படம்:

கே. எஸ். ராமானுஜம்


சத்துமிகுந்த, சுவையான
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்
B
R
I
T
A
N
N
I
A
Glaxo
BISCUITS
BRITANNIA
Glaxo
BISCUITS
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் அருமையான தனிச் சுவையோடு மேம்பட்டு விளங்குவது ஏன்? சத்துச் செறிந்த ஆரோக்கியமான குணச்சிறப்பே காரணம். ஆசையோடு குழந்தைகள் அவற்றை விரும்பிச் சுவைத்து வளருகின்றனர்! பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்— வளரும் குழந்தைகளுக்குச் சுவையான துணை.
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
லின்டாஸ்-BBC.GLX 6-140 TM

எடுத்துச் செல்ல எளிதானது

புதிய

ஃபியஸ்டா

டிரான்ஸ்மெயின்ஸ்

(மெயின்ஸிலும், பாட்டரியிலும் இயங்கும் ரிகார்ட் பிளேயர்)



தொழில் நுட்பத்தில் சிறந்த
எச் எம் வி மட்டுமே
அளிக்கக்கூடிய விலை!

விலை
ரூ. 660. மட்டுமே
(எக்ஸைஸ் வரியுடன் கூடிய
சிபாரிசு செய்யப்பட்ட விலை.
உள்ளூர் வரிகள் தனி)

நிறைந்த வசதிகளுடன்
சிறந்த ஒலியை அளிக்கிறது.

சிறப்பு அம்சங்கள்:

மின் விசை நின்றால் இது தானாகவே
பாட்டரியில் இயங்குகிறது.
4 வேகங்களில் இயங்கும். தகுந்த ரேடியோ
அல்லது ஆம்ப்ளிஃபையர் மூலம்
ஸ்டீரியோ சிஸ்டமாக மாற்றலாம்.

சக்தி:

பொருத்தப்பட்ட ஆம்ப்ளிஃபையர்
துல்லிய ஒலி தருகிறது —
உடன் அமைந்த சக்தி வாய்ந்த ஸ்பீக்கர்.

வசதி:

இசைத்தட்டு முடிந்ததும் தானாகவே
நின்று விடும்.

சிக்கனம்:

விசேஷ தொழில் நுட்பத் திறன்
கொண்டு மாற்றும் அவசியமில்லாத
பிக்-அப் ஹெட்

அழகிய தோற்றம்:

எழில் மிக்க காபினெட்டுடன்
தேர்ந்தெடுக்க இரு வண்ணங்கள்.

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

70 ஆண்டுகளுக்கும் மேலாக ஒலியில்
முதன்மையான பெயர்.

HMV

GC-8228A



சேரமான் காதலி

கண்ணதாசன்

முன்னுரை

வாழ்நாளில் நான் எதற்குமே பயந்ததில்லை. அதிலும் எழுத்துத் துறையில் எந்தப் பகுதியைத் தொடுவதற்கும் அஞ்சியதில்லை. தொட்ட துறைகளில் பெரும்பாலும் தோல்வி கண்டதில்லை. பல்துறை கவனங்கள் காரணமாக என் எழுத்துக்களில் முடிவு பெறாமல் நின்றவை உண்டு. அவையும் என்னுடைய பத்திரிகைகளில் வெளிவந்தவையே தவிர, பிற பத்திரிகைகளில் வந்தவையல்ல.

பிரபலமான பத்திரிகைகளுக்கு எழுதும்போது கூடுமானவரை பயத்தோடும் ஜாக்கிரதையாகவும் நான் எழுதுவேன்.

அந்தப் பயம் இப்போது அதிகமாகிவிட்டது. காரணம் நான் தொடர் கதை எழுதுவது 'கல்கி' பத்திரிகையில். அதிலும் சரித்திரத் தொடர்கதை.

சரித்திரக் கதையின் தந்தையாக விளங்கியவர் கல்கி. சரித்திரச் சான்றுகள் இல்லாத கற்பனை வரலாற்றுக் கதைகள் மட்டுமே வந்து கொண்டிருந்த காலத்தில் முதன் முதலாக அசல் சரித்திரப் பின்னணியைக் கொண்டு கதை எழுதத் தொடங்கியவர் கல்கி. அதோடு ஷேக்ஸ்பியரின் நாடகப் பாத்திரங்களைப் போல் தம்முடைய கதாபாத்திரங்களையும் நிலைபெற வைப்பதில் வெற்றி கண்டவர். வந்தியத் தேவனும், சிவகாமியும் வாழ்ந்தவர்கள் போலவே நம்முடைய கண்களுக்குத் தெரிகிறார்கள்.

சென்னை அண்ணா சாலையில் உள்ள குதிரை வீரன் சிலை வந்தியத்தேவன் சிலை என்றே சொல்லப்பட்டது.

ஒரு கதாசிரியனின் ஆழமான திறமை இதிலேயே வெளிப்படுகிறது.

ஒரு பாத்திரத்தைத் தெளிவாக அழகாக உருவாக்கி விட்டால், அதற்கு உயிர் வந்துவிடுகிறது.

தமிழ்க் கதை உலகில் தன் பாத்திரங்களை உயிர்ப் பாத்திரங்களாக்கியவர்கள் மிகவும் குறைவு. அதிலே முதல் வெற்றியைப் பெற்றவர் கல்கி.

ஒரு நல்ல கதைக்குத் தேவை உயிருள்ள சில பாத்திரங்களே. அந்தப் பாத்திரங்களின் மோதுதலிலேயே அழகான சம்பவங்கள் உருவாகிவிடுகின்றன.

நல்ல பாத்திரங்களை உருவாக்கத் தெரிந்தவன், சம்பவங்களைத் தேடி அலைய வேண்டியதில்லை.

திடீர்த் திருப்பங்களுக்காகத் திடீரென்று கதையை நிறுத்த வேண்டியதில்லை.

அதைக் கொண்டு வந்து நிறுத்துகிற இடமே அற்புதமான இடமாக அமைந்துவிடும்; அது இயற்கையாகவும் இருக்கும்.

அதிலேயும் வெற்றிபெற்றவர் கல்கி.

உண்மையாகவே வாழ்ந்த சில சரித்திர நாயகர்களோடு, மேலும் சில கற்பனை பாத்திரங்கள் கதையில் சேர்க்கப்படுகின்றன. வாழ்ந்த பாத்திரத்தை விட, கற்பனை பாத்திரங்கள் அதிக ஜீவனோடு களை கட்டி நிற்பதை நாம் கல்கியின் கதைகளில் படித்திருக்கிறோம்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களுக்கு இரண்டு சிறப்புக்கள் உண்டு. ஒன்று, உயிருள்ள பாத்திரம், இன்னொன்று, மறக்க முடியாத வசனம்.

கம்பனின் பாத்திரங்கள் அனைத்துக்கும் உயிர் வந்ததற்குக் காரணமே அவனது கவித் திறமை.

பாத்திரங்களுக்கு உயிர் கொடுக்க கல்கியின் தமிழ்த் திறமையும் பயன்பட்டது.

அப்படி மகத்தான பெருமை பெற்ற ஒரு பேராசிரியனின் பத்திரிகையில் நானும் சரித்திரக் கதை எழுதத் தொடங்குகிறேன்.

இதுவே எனது பேரச்சத்துக்குக் காரணம்.

பேராசிரியர் கல்கி அவர்களின் ஆன்மாதான் எனக்கு ஆசி புரிய வேண்டும்.

நான் ஏற்கனவே சில சரித்திரக் கதைகள் எழுதி இருக்கிறேன். கல்கி வாசகர்கள் அதனைப் படித்திருக்க முடியாது. ஏனெனில், அது ஒரு குறுகிய வட்டத்துக்குள் முடிந்து போய்விட்டது.



இப்போது நான் எடுத்துக் கொண்டிருக்கும் கதை, பதினைந்து வருட காலமாக என் மனத்தில் இருக்கும் கதையாகும்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மூன்றாம் சேரமானின் கதை இது.

சிறியன் கிறிஸ்தவர்களும், அரேபியர்களும், யூதர்களும் வேரோடி நின்ற காலம் அது.

இதை மட்டும்தான் நான் இப்போது உங்களுக்குச் சொல்லலாமே தவிர, கதையின் கருப் பொருளை விளக்க முடியாது. அதனை ரகசியமாக வைத்திருப்பதுதான் தொடர்கதைக்கு நியாயம்.

தமிழ் சஞ்சிகைகளில் 'கல்கி' ஓர் உயர்ந்த நாகரிகமான பத்திரிகை. அது உலவுகின்ற வட்டம் ஆழ்ந்த அறிவுள்ள ஆண்களும், பெண்களும் நிறைந்த வட்டம். அவர்களைத் திருப்தி செய்வது எவ்வளவு கடினம் என்பதை நான் உணருகிறேன்.

கடைசிப் பக்கத்தின் மூலம் அவர்களோடு நான் கொண்ட தொடர்பு எனக்கு எவ்வளவு பயனுள்ளதாக அமைந்தது என்பதை நான் விவரிக்க முடியாது.



என்றால் 'கல்கி' பெற்ற பயனை விட, 'கல்கி'யால் நான் பெற்ற பயன் மிக அதிகம்.

ஆகவே, 'கல்கி'யின் வாசகர்களுக்கு என் திறமை முழுவதையும் பயன்படுத்தி இந்தத் தொடர் கதையை நல்ல சுவையான கதையாகத் தர முயற்சி செய்வேன்.

காலக் குற்றங்கள், கணிதக் குற்றங்கள் பெரும்பாலும் தோன்றாவண்ணம் குறிப்புக்கள் வைத்திருக்கிறேன்.

தப்பித் தவறி எங்காவது அவை தோன்றினால் அது ஆராய்ச்சியாளர்கள் குற்றமே தவிர என் குற்றமல்ல.

அத்தியாயம் 1

ஆள்வார் ஆழ்வாரான படலம்

"அரண்மனை இப்போதுதான் 'களை' கட்டிக் கொண்டிருக்கிறது" என்றார் நாராயண நம்பூதிரி.

"ஆமாம். ஆனால் ஒரு சந்தேகம்..." என்று இழுத்தார் சங்கர நம்பூதிரி.

கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்த நாராயண நம்பூதிரி கொஞ்ச நேரம் அவரைப் பார்த்தார்.

"சேரநாட்டு ராஜ பரம்பரையினர் எல்லோருமே இதுவரையில் சைவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். இவர் மட்டும் எப்படி திருமாலடியாரானார்?" என்று கேட்டார் சங்கர நம்பூதிரி.

"எதை நீ அதிகம் கேட்கிறாயோ, எதில் அதிகம் லயிக்கிறாயோ அதே நிலைக்கு நீ ஆளாகிவிடுகிறாய். காதல் வசப்பட்டவன் ஜாதி பார்ப்பதில்லை. கடவுள் வசப்பட்டவன் மதங்களில் பிரிவு பார்ப்பதில்லை. வஞ்சி நகரமெங்கும் சில ஆண்டுகளாகவே இளம் வைஷ்ணவத் துறவிகள் அதிகம் காணப்படுகிறார்கள். அவர்களை அடிக்கடி கூட்டி வைத்து அரசர் விவாதித்துக் கொண்டிருந்த போதே எனக்குத் திகைப்பாகத்தான் இருந்தது. அவர்களது செந்தமிழில் அரசருக்கு ஒரு பற்று ஏற்பட்டிருப்பதை நான் கண்டேன். கேரள தேசத்தின் கொடுந் தமிழில் இல்லாத சில கூறுகள் அந்தச் செந்தமிழில் இருக்கின்றன. அதுதான் அரசரை வைணவம் பற்றிக் கொள்ள முதற் காரணம் என்று நான் நினைக்கிறேன்" என்றார் நாராயண நம்பூதிரி.

"இந்த வைஷ்ணவர்கள் விவாத மண்டபத்திலிருந்து விதான மண்டபம் வரைக்கும் நிறைந்து காணப்படுகிறார்கள். நமது நம்பூதிரிகள் சபையில் இது பற்றிப் பேச வேண்டும் என்று கூட நான் நினைத்தேன். ஒரு தடவை ஒரு வைஷ்ணவியை நான் வெளியே போகச் சொன்னபோது, அவன் பேசிய பேச்சு எனக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது. உங்களிடம் சொல்லிப் பரிகாரம் தேடிக் கொள்ளலாம் என்றுதான் பேசாமல் இருந்துவிட்டேன்" என்றார் சங்கர நம்பூதிரி.

"இது பற்றி இனி யாரோடும் பேச வேண்டாம். அரசாங்க விஷயங்களில் தகராறு வந்தால்தான் நம்பூதிரிகள் சபை தலையிட முடியும். இது மத

விஷயம். இது பற்றி மன்னருக்குச் சில கருத்துக்கள்தான் தெரிவிக்க முடியுமே தவிர, எதையும் நிரந்தரப்படுத்த முடியாது. வைஷ்ணவம் நமக்குப் புதியதல்ல; வெறுக்கத் தக்கதும் அல்ல. இந்தச் சேர தேசத்தில் இரண்டுக்கும் இடம் இருக்கிறது. என்ன நடக்கிறது என்பதை நாம் கவனிக்கலாமே தவிர, வேறொன்றும் செய்வதற்கில்லை'' என்றார் நாராயண நம்பூதிரி.

சங்கர நம்பூதிரி விடைபெற்றுக் கொண்டார்.

நாராயண நம்பூதிரி சுவரில் இருந்த பலகையை ஒதுக்கி உள்ளேயிருந்த சில ஏடுகளை எடுத்துப் பார்த்தார். கோயிலுக்கு நிவந்தங்கள் விடப்பட்டதற்கான சாஸனங்கள் அவை. நல்ல வேளையாகப் புதிய ஏடுகள் ஒன்றுமில்லை.

* * *

சேரநாடு.

சங்க காலத்தில் இதன் தலைநகரம் கரூர் என்பார்கள். ஆனால் நம் கதை நடக்கும் காலத்தில் இதன் தலைநகரம் வஞ்சியாகவே இருந்தது.

வடக்குத் திசை பழனி; வான்கீழ் தென்காசி
குடக்குத் திசை கோழிக் கோடாம் – கடற்கரையின்
ஓரமே தெற்காகும்; உள்ளெண் பதுகாதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு.

என்கிறது ஒரு பாடல்.





ஆகாச புத்திரி

சில ஆண்டுகளுக்கு முன் இந்தியன் ஏர் லைன்ஸ் வைகவுண்ட் விமானத்தில் பறந்து கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீமதி வர்கீஸ் ஓர் ஆண் குழந்தை பெற்றெடுத்தார். ஆகாயத்தில் பிறந்த அக்குழந்தைக்கு வைகவுண்ட் வாமன ராவ் எனப் பெயர் சூட்டப்பட்டது. அதே ஸ்ரீமதி வர்கீஸ் கடந்த 12-8-75 ஆகாய விமானத்தில் பறக்கும்பொழுது மீண்டும் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அப் பெண் குழந்தைக்கு வர்கீஸ் தம்பதிகள் ஆகாச புத்திரி எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

ஆதாரம்: 'ஸண்டே ஸ்டாண்டர்ட்'
— கோவிலூர். க. சேகர்

சேர நாட்டின் தலைநகரம் வஞ்சி என்று அழைக்கப்பட்டாலும் அது தலைநகரத்தின் ஒரு பகுதிதான். மற்ற பகுதிகள் கொடுங்கோளூர், கொல்லி நகர், மகோதைப் பட்டினம் என்று அழைக்கப்பட்டன. பூம்புகாரிலிருந்த பல பாக்கங்களைப் போலவே இவையும் இருந்தன. அரண்மனை இருந்த இடம் வஞ்சி ஆதலின் வஞ்சி என்று அழைக்கப்பட்டது. இந்த வஞ்சிக்கு மன்னராக இரண்டாம் சேரமான் அரசு கட்டில் ஏறியது கி. பி. 754ல். அப்போது ஸ்ரீ வில்லிப்புத்தூரிலிருந்த பெரியாழ்வாரின் மாணவராக இவர் தம்மை வரித்துக்கொண்டார். அதன் பொருட்டுத் தம்முடைய பெயரை கி. பி. 789—ல் 'இரண்டாம் சேரமான் பெருமாள்' என மாற்றிக் கொண்டார். பாண்டிய நாட்டையும், கொங்கு நாட்டையும் அவர் சேர்த்து ஆண்டதால், அதன் பொருட்டு இவருக்குக் 'கூடற்கோன்' என்றும், 'கொங்கர் கோன்' என்றும் பட்டம் வந்தது. அவருடைய ஆட்சிக் காலத்தில் சேர நாட்டின் ஆட்சி முறை சோழ—பாண்டிய நாடுகளில் இல்லாத விதத்தில் இருந்தது.

சேர நாட்டின் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு நம்பூதிரியின் கையில் இருந்தது. அத்தனை நம்பூதிரிகளுக்கும் சேர்த்து வஞ்சியிலே ஒரு சபை இருந்தது. அந்தச் சபையின் தலைவரே நாம் முதலில் சந்தித்த நாராயண நம்பூதிரி.

தற்போதைய நிலையை மேற்கோள் காட்டினால் நாராயண நம்பூதிரி பிரதம மந்திரியாகவும், இரண்டாம் சேரமான் பெருமாள் குடியாட்சித் தலைவராகவும் விளங்கினார்கள்.

அரசாங்க நிர்வாகத்தில் நம்பூதிரிகளே செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்தார்கள். அந்த அரசு முறையைச் சரித்திரம் வியப்புடனேயே நோக்குகிறது.

சேர நாட்டில், பல்லவநாட்டிலிருந்து குடியேறிய வைஷ்ணவர்கள் ஏராளமாக இருந்தார்கள்.

ஆட்சியில் தமக்கு அதிகப் பங்கு இல்லாததால் சமயத் துறையில் அதிகம் கவனம் செலுத்தினர் இரண்டாம் சேரமான் பெருமாள். இவரது ஒரே மகன் மார்த்தாண்ட வர்மன்.

மார்த்தாண்டவர்மனுக்கு ஆறு வயதாகும் போது சேரமானின் பட்டத்து ராணி காலமானாள்.

மனைவியை இழந்தும் மன்னர் மறுமணம் செய்துகொள்ளவில்லை. அதன்றியும் அரசர்களின் வழக்கப்படி அந்தப்புரத்தில் ஆசை நாயகிகளும் இல்லை.

இப்போது நாம் வஞ்சி நகரத்தைச் சுற்றிப் பார்ப்போம்..

பச்சைப் பசேலென்ற மலைகள். அவற்றின் முடியில் தவழ்ந்தாடும் வெண் மேகங்கள். சில்லென்ற இளங்காற்று. தெருவெங்கும் மார்பிலிருந்து முழங் கால்வரை ஒரே ஆடையைக் கட்டிக் கொண்டு செல்லும் இளம் பெண்கள். இளநீர்க் குவியல்கள். செவ்வாழைத் தார்கள். ஆம்; பொலிந்து பூரித்து நிற்கும் அழகியைப் போலவே வஞ்சி நகரம் இருந்தது.

புகார் நகரத்தில் யவனர் இருந்த பகுதியைப் போல் வஞ்சியிலும் மூன்று பகுதிகள் இருந்தன.

ஒரு பகுதியில் சிறியன் கிறிஸ்தவர்களும், மறு பகுதியில் அரேபிய மகமதியர்களும், மூன்றும் பகுதியில் யூதர்களும் குடியிருந்தனர்.

வஞ்சியின் வாணிகச் சந்தை அரேபிய வாசனைத் திரவியங்களால் வாசமாகவும், யூதப் பெண்களால் கலைத் தோட்டமாகவும், சிறியன் கிறிஸ்தவர்கள் கையாண்டு வந்த வெள்ளைக் குதிரைகளால் போர்க்களம் போலவும் காட்சி அளித்தது.

கொடுங்களூர் பகவதியம்மன் கோயிலில் மணி அடிக்கும்போதெல்லாம், அவர்களது மற்ற இரண்டு கோயிலிலும் மணி ஒலிக்கும் — மசூதியைத் தவிர.

மூலைக்கு மூலை தென்னங்கீற்று வேயப்பட்ட பந்தலில் இளம் வைஷ்ணவப் பெண்கள் உட்கார்ந்து கொண்டு திருமால் மீது பக்திப் பாடல்கள் பாடுவார்கள்.

அதற்குப் போட்டியாக சைவ பஜனைக் கோஷ்டிகள் பெரிய பிரும்ம தாளத்தை ஒலித்தபடி ஊர்வலம் போகும்.

அதோ .தெரிவதுதான் வஞ்சியின் அரண்மனை.

எப்போதோ கட்டப்பட்ட அந்த அரண்மனை, முதலாம் சேரமான் பெருமாள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. அப்போது வஞ்சிக்கு வருகை தந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் தங்குவதற்காகவே அது புதுப்பிக்கப்பட்டது. முதலாம் சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கி.பி. 712ல் கயிலை சென்ற பிறகு அம் மாளிகையில் பல்லவ நாட்டு வைஷ்ணவர்கள் குடியேறினர்கள்.

இரண்டாம் சேரமான் பெருமாள் பட்டத்துக்கு வந்ததும் அம்மாளிகை விரிவு படுத்தப்பட்டது.

பளபளக்கும் சலவைக் கற்கள் அரண்மனைக்கு ஒளியூட்டின. பட்டத்து ராணி நீராடுவதற்கென்று கட்டப்பட்ட மண்டபம், யூதப் பெண்களால் அலங்கரிக்கப்பட்டது. மற்ற அரண்மனைகளைப் போல் அல்லாமல் வஞ்சி மாளிகையில் படை வீரர்கள் பின் பக்கத்திலேயே தங்கினர்கள். வாசலில் 'நமோ நாராயண' என்ற குரல் கேட்டால், அரசரைக் கேளாமலேயே வாசல் காப்போன் வாயிலைத் திறக்கலாம். கோயிலில் இருப்பது போலவே அங்கேயும் ஒரு மடப்பள்ளி உண்டு. அல்லும் பகலும் அடிசில் சமைக்கும் பணியாட்கள் உண்டு.

வஞ்சியைவிட்டு வெளிக் கிராமங்களுக்கு வைஷ்ணவத் துறவிகள் செல்லும் போது, அரண்மனையிலிருந்து சேர நாட்டு இலச்சினையான வில் பொறித்த செப்புத் தகடு ஒன்று கொடுப்பார்கள். அந்தத் தகட்டை எந்தக் கோயிலில் காட்டினாலும் மூன்று வேளை உணவும், தங்குவதற்கு இடமும் உண்டு.

சோழ நாட்டிலிருந்து அரிசியும், பாண்டிய நாட்டிலிருந்து பிற தானியங்களும் ஏற்றி வரும் வண்டிக்காரர்களுக்கென பெரிய தொழுவம் ஒன்றும் உடன் சேர்ந்த மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டிருந்தன.

அந்த அரண்மனையைவிட அழகான கட்டடம் ஒன்றை நீங்கள் காண வேண்டும். அதுதான் நம்பூதிரிகள் சபைக் கட்டடம். கிட்டத்தட்ட அதுவும் அரசர் இருக்கையாகவே திகழ்ந்தது. அதிலே சாந்தி முகூர்த்த அறை என்று ஒன்று உண்டு.

குறிப்பிட்ட சில ஜாதிப் பெண்கள் திருமணமானதும், முதல் இரவை அந்த அறையிலே ஒரு நம்பூதிரியோடு கழிக்க வேண்டும் என்றொரு சம்பிரதாயம் இருந்தது. இருப்பினும் நாராயண நம்பூதிரி மட்டும் நைஷ்டிக பிரமசாரியாகவே இருந்தார்.

நமது கதை ஆரம்பிக்கும் ஆண்டு கி.பி. 796.

இரண்டாம் சேரமான் பெருமாள் அப்போது பட்டத்துக்கு வந்து நாற்பத்து இரண்டு ஆண்டுகள் முடிந்திருந்தன. அவர் 'பெருமாள்' பட்டம் பெற்று ஏழு ஆண்டுகள் ஆகியிருந்தன.


* * *

நம்பூதிரிகள் சபையில் நாராயண நம்பூதிரியும் சங்கர நம்பூதிரியும் பேசி முடித்த அதே நேரத்தில், அரண்மனை வழிபாட்டு மண்டபம் நிறைந்திருந்தது. அதன் நேர் பகுதியில் திருப்பதி வேங்கடேசப் பெருமாளின் மாணிக்கச் சிலை ஒன்று கம்பீரமாக அமைந்திருந்தது. ஒரு புறத்தில் திருவரங்கப்பெருமான். மறுபுறத்தில் திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட ஸ்ரீமந் நாராயணன். ஓங்கி உயர்ந்த இரண்டு குத்து விளக்குகள். மேலிருந்து பத்துச் சர விளக்குகள். பொன்னால் அலங்கரிக்கப்பட்ட மேல் விதானம். பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பிரசன்ன மேடை. அரசன் அடியவர் போல் அமர்ந்திருந்தான். அவன் குரல் கம்பீரமாக எழுந்தது.

இருளிரியச் சுடர்மணிக
 ளிமைக்கும் நெற்றி
யினத்துத்தி யணிபணிமா
 யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி
 யனந்த னென்னும்
அணிவிளக்கு முயர்
 வெள்ளை யணையை மேவித்

திருவரங்கப் பெருநகருள்
 தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப்
 பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக்
 கண்டு கொண்டேன்
கண்ணிணைக ளென்றுகொலோ
 களிக்கும் நாளே ?

மாவினைவாய் பிளந்துகந்த மாலைவேலை
 வண்ணனையென் கண்ணனைவன்
  குன்றமேந்தி
ஆவினையன் றுயர்கொண்ட வாயரேற்றை
 அமரர்கள்தந் தலைவனையந்
  தமிழி னின்பப்
 பாவினையவ் வடமொழியைப்
  பற்றற் றார்கள்
 பயிலரங்க தரவணையில்
  பள்ளி கொள்ளும்
 கோவினைநா வுறவழுத்தி
  யென்றன் கைகள்
 கொய்ம்மலர்தூ யென்றுகொலோ
  கூப்பு நாளே ?


வெற்றிகரமாக அழுக்கைப்போக்கும்
புதிய ரம்யா
தீவிரமாகச் சுத்தப்படுத்தும்
டிடர்ஜன்ட் வில்லை
NEW
RAMYA
DEEP CLEANSING DETERGENT
அழுக்குத்துணி
வெளுக்க—
பளீரென ஒளிவீச
மற்றொரு
தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு
SAA/UPL/1922 TAM


நினைவிருக்கட்டும்! "தெர்மலோ" முறையில்
தயாரிக்கப்படும் ஒரே காபி
நரசூஸ் காபி
மணமும், சுவையும் நிறைந்த
அதிகக் காபி பெற ''தெர்மலோ''
முறை வகை செய்கிறது.
நரசூஸ் காபி
கம்பெனி
சேலம்—636007
கிளைகள்:
பாண்டிச்சேரி,
தமிழகமெங்கும்
EP-NC-3A

கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம்
கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு
கொற்ற வொள்வாள்
காலார்ந்த கதிக்கருட
னென்னும் வென்றிக்
கடும்பறவை யிவையனைத்தும்
புறஞ்சூழ் காப்பச்

சேலார்ந்த நெடுங்கழனி
சோலை சூழ்ந்த
திருவரங்கத் தரவணையில்
பள்ளி கொள்ளும்
மாலோனைக் கண்டின்பக்
கலவி யெய்தி
வல்வினையே னென்றுகொலோ
வாழு நாளே ?

'' திருவரங்கத்தில் பள்ளிகொண்டான் அரங்கன். அவனது சங்கு சக்கரங்கள் ஓய்ந்து கிடக்கின்றன. பூமியின் ஏகச் சக்ராதிபதிக்கு ஓய்வு உண்டா? உண்டு. புவி எப்போதும் அமைதியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அரங்கன் எப்போதுமே ஓய்வாக இருக்கிறான். மனித குலத்துக்குப் பொறுப்பேற்றுக் கொண்ட அவன் மன வியாகூலத்துக்கு என்ன செய்ய முடியும்? இன்னின்ன காரியங்கள், இன்னின்ன காலங்களில் நடக்கும் என அவன் விதித்திருக்கிறான். இடையில் நடக்கும் காரியங்களை அவன் வேடிக்கை பார்க்கிறான்.

''தம்பிரான் தோழர் சொன்னது போல், ''தர்மம் தூங்கிக் கொண்டே கர்மத்தைக் கவனிக்கிறது.'' அரச கர்மம் தவறிவிட்டால், அரச தர்மமும் தவறிவிடுகிறதல்லவா! யார் எங்கே தவறுகிறார்கள் என்று கவனிப்பது: அரங்கனுடைய வேலையே! அந்த அரங்கனையும், திருமாலின் திருத்தலங்களையும் தரிசிக்க நான் புறப்படலாம் என்று கருதுகிறேன். அரசனாக நான் யாத்திரை செய்தால் அரங்கனுக்குக் கோபம் வந்தாலும் வரக்கூடும். தன்னை விட ஒரு மன்னனா என்று ஒரு தலைவன் நினைத்துவிட்டால் புண்ணியமே பாவமாகிவிடும். அதனால் அடியாராக, அடியார்க்கு நல்லாராக உங்கள் அனைவரையும் விட்டுப் புறப்பட இருக்கிறேன்......''

சேரமான் பெருமாள் இதைச் சொன்னாரோ இல்லையோ கூட்டத்தின் ஒவ்வொரு மூலையில் இருந்தும் விம்மல் சப்தம் கேட்டது.

அந்த விம்மலுக்கிடையே 'ஓ' வென்று ஒருவன் உரத்த குரலில் அழும் ஒலியும் கேட்டது.

''அரசே! நீங்களா இந்த முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்?''

சேரமான் பெருமாள் கம்பீரமாகத் திரும்பிப் பார்த்தார். அங்கே பாஸ்கர ரவிவர்மன் கை கட்டியபடி அழுது கொண்டிருந்தான்.

'' பாஸ்கர ரவிவர்மனா அழுகிறான்? அவன் பிறரை அழ வைத்துப் பழகியவனே தவிர, தான் அழுது பழகியவனல்லவே! * பிரிவு அவனைச் சுடுகிறதா, அல்லது கடைசியாக ஒரு முறை அழுது விடை கொடுக்கிறானா?''

பாஸ்கர ரவிவர்மன், இரண்டாம் சேரமான் பெருமாளின் மைத்துனர் மகன். மறைந்த பட்டத்து ராணி செரோட்டி தேவியின் தமையன் மகன். அத்தை பட்டத்து ராணி; மாமன் மன்னன் என்ற முறையில் அரசாங்கத்தில் அவன் பெற்றுக் கொண்ட சலுகைகள் அதிகம். அவையெல்லாம் மன்னர் மனத்தில் அவனைப் பற்றிய ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்கி இருந்தன.

அவன் அழுததைப் பார்த்ததும் அமைதியாகச் சேரமான் சொன்னார்: ''பாஸ்கரா, உன் துயரம் எனக்குப் புரிகிறது. அப்படியே நான் பட்டம் துறந்துவிட்டாலும் என் மகன் மார்த்தாண்டவர்மன்தான் அரசு கட்டில் ஏறப் போகிறான். நாடு எதிரியிடம் போய்விடவில்லை. நீ ஏன் கலங்க வேண்டும்?''

பாஸ்கரன் பதில் சொல்லவில்லை; தலை குனிந்தபடியே நின்றான்.

கூட்டம் அழுது கொண்டே கலைந்தது.

மண்டபத்தில் தனியாக நின்று கொண்டிருந்தான் பாஸ்கர ரவிவர்மன்.

''அடியேன் தெண்டம்'' என்றது ஒரு சேவகன் குரல்.

பாஸ்கரன் திரும்பிப் பார்த்தான்.

''அரசர், பெரியாழ்வாரைச் சந்திக்க நாளை திருவில்லிபுத்தூருக்குப் போகிறார்'' என்றான் அவன்.

''சரி'' என்று தலையசைத்த பாஸ்கர ரவிவர்மன் மண்டபத்தைவிட்டு வெளியேறினான். அரண்மனையை ஒட்டிய தென்னந் தோப்பில் சிறிது நேரம் உலாவினான். பிறகு தலையை முக்காடிட்டு மறைத்துக் கொண்டு, யூதர்கள் வாழ்ந்த பகுதியை நோக்கிப் புறப்பட்டான்.

அங்கே ஓர் அழகான இல்லம். முன் பகுதியில் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. வாசற் படிக்கட்டில் சிலையைப் போல் அமர்ந்திருந்தாள் ஒருத்தி. அவள் பெயர் யூதியாள். (தொடரும்)


அமரர் ராஜாஜி பிறந்து வளர்ந்து தேச பக்தத் திலகமாக உருவான சேலம் மண்ணை அவரது பிறந்த நாளையொட்டி வணங்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது..

நீலகிரி எக்ஸ்பிரஸில் அதிகாலை மூன்று மணிக்கே சேலம் ஜங்ஷனில் வந்து இறங்கி விட்டேன்.

''நீங்கள் எந்த ரயிலில் வந்தீர்கள்?'' என்று கேட்டார் சேலம் முன்னாள் எம்.பி. திரு ஆர். டி. பார்த்தசாரதி.

''நீலகிரி எக்ஸ்பிரஸில் மூன்று மணிக்கே வந்துவிட்டேன்!'' என்றேன்.

''அட, பாவமே! நீங்கள் ஏர்க்காடு எக்ஸ் பிரஸில் சென்னையிலிருந்து இரவு ஒன்பதே முக்கால் மணிக்குப் புறப்பட்டுக் காலை ஆறு மணிக்குச் சௌகரியமா சேலம் வந்து இறங்க லாமே! நாங்களும் பல வருஷங்களா இப்படி நடு இரவில் வந்து அவஸ்தைப்பட்டு இப்போ இந்த ஏர்க்காடு எக்ஸ்பிரஸைக் கொணர்ந்திருக்கிறோம்!'' என்றார் முன்னாள் எம்.பி.



நகர்வலம்: சேலம்

பி. எஸ். மணி

''சேலத்தில் விஜயராகவாச்சாரியாரும், ராஜாஜியும் அரசியல் விழிப்பை ஏற்படுத்தினார்கள். டாக்டர் வரதராஜுலு நாயுடுவும் டாக்டர் சுப்பராயனும் சேலம் தந்த தேச பக்தத் திலகங்கள். ஒத்துழையாமை இயக்கத்தின் முதல் தீர்மானம் சேர்மன் ராஜ கோபாலாச்சாரி ரோட்டிலுள்ள ராஜாஜியின் இல்லத்தில்தான் எழுதப்பட்டது'' என்று பழைய சரித்திர ஏடுகளைப் புரட்டினார் திரு பார்த்தசாரதி.



தமிழக மந்திரி சபையில் 'பாபுலர்' மந்திரியாக விளங்கும் திரு கே. ராஜாராம் அவர்களின் தந்தை திரு கஸ்தூரி பிள்ளை ராஜாஜியின் பங்களாவுக்கு எதிர் பங்களாவில் இருந்து, ராஜாஜியின் குடும்பத்தோடு பழகும் பாக்கியம் பெற்றவர்.

'' ராஜாஜி சேலத்துக்கு அருகில் உள்ள தொரகப்பள்ளி கிராமத்தில் பிறந்தார். ஹோசூர் பிரைமரி பள்ளியில் இளமைக் கல்வி பெற்றார். ராஜாஜியின் தந்தை தொர





முதல் பக்கம் :

- சேலம் உருக்காலைக்கான இரும்புக் கனி.
- ராஜாஜி வாழ்ந்த காந்தி ஆசிரமக் குடில்.
- சேலம் கிச்சிப்பாளையம் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்.
- திரு கஸ்தூரி பிள்ளை.



இரண்டாம் பக்கம் :

- மாவட்டத் தலைவர் திரு அ. மு. சுவாமிநாதன்.
- சேலம் உருக்காலை கட்டட நிர்மாணப் பணி ஒரு தோற்றம்.
- மாடர்ன் தியேட்டர் உரிமையாளர் திரு ஆர். சுந்தரம்.

கப்பள்ளி கிராம முன்சீபு. கிராம முனிசீபு சக்கரவர்த்தி அய்யங்காருக்கு மூன்று புதல்வர்கள். பெரியவர் தாலுகா ஆபீஸ் கிளார்க்; இரண்டாவது புதல்வர் டெபுடி தாசில்தாராக இருந்து ஓய்வு பெற்றவர். மூன்றாவது புதல்வர்தான் ராஜாஜி.''

''சேலத்தில் ராஜாஜி அவர்கள் தங்கும் பாக்கியம் பெற்ற இல்லங்கள் எவை?''

''சேலத்தில் ராஜாஜி வக்கீல் தொழில் நடத்தியபோது சேலம் பிரமுகர் ராஜா முதலியார் வீட்டில் குடியிருந்தார். பிறகு இரண்டாவது அக்ரஹாரத்தில் லட்சுமிப் பெருமாள் கோயிலுக்கு அருகில் வசித்தார். முதல் அக்ரகாரத்தில் ஆதிநாராயண செட்டியார் வீட்டிலும் சிறிது காலம் வசித்தார். பின்னர் சிவசாமிபுரம் எக்ஸ்டென்ஷனில் ஒரு பிளாட் வாங்கிப் பங்களா கட்டினார். ஒத்துழையாமை இயக்கத்தில் ராஜாஜி ஈடுபடும்வரை சேலத்தில் அவர் வாழ்ந்த பங்களா இதுதான்!''


''நீங்கள் ராஜாஜியின் எதிர்த்த வீட்டுக்காரராக இருந்த சமயம் எப்போது?''

''ராஜாஜி ராஜா முதலியார் வீட்டில் இருக்கும்போதுதான் நான் அவருக்கு எதிர்த்த வீட்டில் இருந்தேன். ராஜாஜியின் குமாரர்களுக்கும் அண்ணன் புதல்வர்களுக்கும் நான் கிளாஸ்மேட். ராஜாஜி வக்கீல் தொழில் நிமித்தம் சென்னை போய் வந்த சமயம் அவர்கள் வீட்டுக் குழந்தைகளுக்குப் பேனாக்கட்டை வாங்கி வந்து கொடுத்தார். எனக்கும் அவர் ஒரு பேனாக்கட்டை கொடுத்திருக்கிறார். சிறுவர்களாகிய நாங்கள் கிரிக்கெட் ஆடுவதற்காக ஸ்ரீ ராம ராவ் அவர்களிடம் 'கிரிக்கெட் செட்' வாங்கி வரச் செய்து எங்களுக்குப் பரிசளித்திருக்கிறார். ராஜாஜி கிரிக்கெட் ஆடியதில்லை. ஆனால் டென்னிஸ் வெகு அழகாக ஆடுவார். ராஜாஜி வக்கீலாக இருந்தபோது, 'இரட்டை சாரட்டு' குதிரை வண்டியைத் தாமே ஓட்டிச் செல்லும் அழகைச் சிறுவர்களாகிய நாங்கள் பல தடவை பார்த்து அதிசயித்திருக்கிறோம். அவரது ஜரிகைத் தலைப்பாவும் கறுப்புக் கோட்டும் வெள்ளை வெளேரென்ற மடிப்புக் கலையாத பஞ்ச கச்சமும் – கச்சிதமாக உடை அணிந்த மனிதர். 'மஸானிக் லாட்ஜ்' என்ற அமைப்பில் சேலம் பிரமுகர்களின் முதல் தலைவர் அவர்தான்! சேலம் இலக்கிய சங்கத்துக்குக் கட்டடம் விலைக்கு வாங்கி முதல் காரியதரிசியாகப் பணியாற்றியவரும் அவர்தான்!'' என்று சொல்லிக் கொண்டே போகிறார் திரு கஸ்தூரி பிள்ளை. பெரிய பெரிய பதவிகளையெல்லாம் வகித்துவிட்டு ஒரு சமயம் சேலம் இலக்கிய சங்கத்துக்கு வந்திருந்தபோது ராஜாஜி 'நான் முதல் காரியதரிசியாக இருந்தபோது ஒரு கிளார்க் நியமித்தேனே, அவர் இருக்கிறாரா?' என்று கேட்டுக் கொண்டே முதலில் அவரைப் போய்ப் பார்த்துக் குசலம் விசாரித்தாராம். ''மெய் சிலிர்க்க வைத்தது'' என்கிறார் கஸ்தூரி பிள்ளை.

''சேலத்துக்கு ராஜாஜி செய்த தொண்டுகளில் ஏதாவதொன்றைச் சொல்லுங்களேன்!''

''தீண்டாமை ஒழிப்புக்கு அடிக்கல் நாட்டியதைத்தான் அனைத்திலும் முக்கியமாகக் கருதுகிறேன். ராஜாஜி அந்தக் காலத்திலேயே கிச்சிபாளையம் சங்கிலிநாயனுர் என்ற ஆதிதிராவிடப் பையனை எப். ஏ. வரை படிக்க வைத்தார். அவன் சென்னை நகரசபைக்கு





வேலைக்குப் போய்விட்டான். அடுத்து அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த சக்கிலி முனுசாமிக்கு இண்டர்மீடியட் வரை உதவினார். முனுசாமி டெபுடி தாசில்தாராக இன்று ரிடையராகித் தர்மபுரியில் இருக்கிறார்.''

சேலத்தில் ராஜாஜியிடம் ஜூனியராக இருந்த நரசிம்மய்யங்கார் ராஜாஜியின் சம்பந்தியாகவும் ஆனார். அவர் மகன் அட்வகேட் திரு சுந்தரராஜ அய்யங்கார் ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்தார். ராஜாஜிக்கு ஒரு சமயம் நிமோனியா வந்து விட்டது. அப்பொழுது டி.எம்.ஓ. ஆக இருந்த டாக்டர் மத்தியாஸ் தளர்ந்து போய்த் தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கினார். உடனே ராஜாஜி, நரசிம்ம அய்யங்காரைப் பார்த்து ''மத்தியாஸ் டாக்டருக்கான தன்னம்பிக்கையை இழந்து விட்டார்! உடனே டாக்டர் நாராயண அய்யரை எனக்குச் சிகிச்சை செய்விக்க வரவழையுங்கள்!'' என்று கூறிவிட்டு, டாக்டர் மத்தியாஸிடம் 'நீங்கள் என் சிநேகிதர்தான். டாக்டர் அல்ல! போ ய் வாருங்கள்!' என்று விடை கொடுத்து அனுப்பினார். டாக்டர் நாராயண அய்யர் வந்து சிகிச்சை செய்து ஒரு வாரத்தில் குணம் அடைந்தார் ராஜாஜி. அத்தனை மன உறுதி ராஜாஜிக்கு.

''சேலத்துக்கு ஸ்ரீசைலபுரம்னு பேரு. பிரிட்டிஷ்காரன் காலத்திலேயே ஸ்ரீயும்போய், சைலமும் போய், சேலமாகத் திரிந்துவிட்டது. பிருகு முனிவர் கோபமுற்ற மகாலக்ஷ்மியைத் தவமியற்றி மகளாகப் பெற்றுப் பெருமானுக்கு மணம் முடித்து வைத்துச் சாபம் நீங்க வைத்த ஸ்தலம்! சேலம் ஐம்பெரும் பதிகளில் ஒன்று!'' சேல ஸ்தல மாகாத்மியத்தைத் தருகிறார் அழகிரிநாதப் பெருமாள் கோயில் பட்டாசாரியார் ஸ்ரீ எஸ். .வி. சந்தானம். இந்தக் கோயிலில் ஆஞ்சநேயர் அதி விசேஷம்.

சேலத்து மாம்பழம் சரித்திரப் பிரசித்தி. ஆனால் இந்த சீஸனில் மாம்பழ 'ஜாம்' கிடைக்கா விட்டாலும் சேலம் பஸ் ஸ்டாண்டில் மக்கள் 'ஜாமு'ம் பஸ் 'ஜாமு'ம் தினசரி ருசிகரக் காட்சி.

சேலம், சுப்பிரமணியபுரம் 'பேர் லான்ட்ஸ்' 'ஸ்வர்ணபுரி' ஆகிய எக்ஸ்டென்ஷன் பகுதிகளைக் கொண்டது. இவற்றின் வளர்ச்சிக்குக் காரணகர்த்தா தியாகி ஸ்ரீ வாஞ்சிநாதய்யர்.

அழகிய புல் மைதானத்துடன் மகாத்மா காந்தி கிரிக்கெட் ஸ்டேடியம் சேலத்தின் சிறப்புக்களில் ஒன்று. முன்னாள் எம். பி. திரு ஆர். டி. பார்த்தசாரதி கண்ட சாதனை. 1974ல் நான்காவது கிராமப்புற விளையாட்டுப் போட்டிகள் இந்த மகாத்மா காந்தி ஸ்டேடியத்தில் நடைபெற்றன. 21 ராஜ்யங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மாணவ மாணவிகள் கலந்துகொண்டதை லட்சம் பேர் கண்டு களித்தனர். நேரு யுவ கேந்திரம் இந்த மகாத்மா காந்தி ஸ்டேடியத்தில் இயங்கி வருகிறது.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் (கலெக்டர்) திரு அ. மு. சுவாமிநாதனை மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்துக்கு மத்தியில் சென்று சந்திக்க வேண்டியதாகி விட்டது.

''ஆண்டுதோறும் பன்னிரண்டு கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டித் தரும் காப்பிப் பயிர் விளைவிக்கும் சேர்வராயன் மலை, இன்சுவைப் பலா, அன்னாசி, ஆரஞ்சு முதலியவைகளை ஏந்தி நிற்கும் கொல்லிமலை, இரும்பு, மாக்னசைட், பாக்சைட் முதலிய கனி வளங்களைக் கருவில் கொண்ட நிலப் பரப்பு, காய்ந்த மேடுகளையும் கழனிகளாக்கும் இங்குள்ள வேளாண் மக்களின் அயராத உழைப்பு — இவை இம்மாவட்டத்து விலை மதிப்பற்ற செல்வங்கள்'' என்று கூறினார்.

சேலத்துக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டிய இடங்களில் சில:

பேராசிரியர் கல்கியின் பொய்மான் கரடு நாவலுக்குக் களமான பொய்மான் கரடு சேலம் டவுன் ஸ்டேஷனிலிருந்து ஒன்பது மைலில் உள்ளது.

சரித்திரப் பிரசித்தமான தாரமங்கலம் கோயில் சிற்பக் கலைச் செல்வங்களை ஏராளமாய்க் கொண்டிருக்கிறது. சேலத்திலிருந்து முப்பது கிலோமீட்டர் தூரந்தான். ஏர்க்காடு 'பிக்னிக்' செல்ல அருமையான இடம். நாமக்கல் அனுமாரின் அனுக்கிரகத்தை வேண்டாத பக்தர்கள் இருக்க முடியாது. 'ஓரி' விழாக் கண்ட கொல்லிமலை பயணிகள் விரும்பிச் செல்லும் மகிமையை விரைவில் அடைந்து விடத் தமிழக அரசு பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. நாமக்கல்லிலிருந்து முப்பத்தைந்து கல் தொலைவில் இருக்கிறது. இவையெல்லாம் போதாக் குறைக்கு 26 சினிமாத் தியேட்டர்கள் சேலத்தில் இருக்கின்றன!

1935ல் ஸ்தாபிதமாகி டைரக்டர் டி.ஆர். சுந்தரத்தின் நூறு படங்களை உருவாக்கிய மாடர்ன் தியேட்டர்ஸ் சேலத்தின் சிறப்புக்களில் ஒன்று. டைரக்டர் ஆர். சுந்தரத்தின் நிர்வாகத்தில் இன்று இயங்கி வருகிறது.

சேலத்தில் பர்ன் அண்ட் கம்பெனி, டால்மியா மாக்னசைட் கார்ப்பரேஷன், சேலம் மாக்னசைட் கார்ப்பரேஷன், பல நூற்பு ஆலைகள், கண்ணாடித் தொழிற்சாலை, சர்க்கரை, சிமெண்ட் ஆலை ஆகியன இருந்த போதிலும் பிற்பட்ட பகுதியாகவே கருதப்படுகிறது. கைத்தறி நெசவுக்குப் பேர் பெற்ற இடம் சேலம் மாவட்டம். தமிழ் நாட்டில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேல் சேலம் மாவட்டத்தில் தான் தயாராகிறது. மரவள்ளிக் கிழங்கு பயிராவதால் 150க்கு மேற்பட்ட ஜவ்வரிசித் தொழிற்சாலைகளும் உண்டு. ஆட்டையாம் பட்டி, பாப்பாரப்பட்டி, வேம்படித்தளம் செயற்கைப் பட்டுக்குப் புகழ் பெற்றவை.

516 கோடி ரூபாய் சேலம் உருக்காலைத் திட்டத்தில் பத்துக் கோடி ரூபாய் வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆலை உருவானால் 8000 பேருக்கு வேலை வாய்ப்பு உண்டு. அதன் முக்கிய தயாரிப்பு எவர்சில்வர்.

சேலத்திலிருந்து புறப்படு முன்னர் கடைசிக் காரியமாக ராஜாஜி நிறுவிய திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்துக்குப் போனேன். அங்கே ராஜாஜி வசித்த சிறு குடிலைப் பார்த்தேன். ''அவருக்கென்ன, இந்தக் குடிலில் வாழ்ந்தாலும் ராஜ கம்பீரத்துடன்தான் இருந்தார். ராஜபோகமாக கவர்னர் ஜெனரல் மாளிகையில் வாழ்ந்தாலும் துறவு மனப்பான்மையுடன்தான் திகழ்ந்தார்'' என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

புதுமையின் பொலிவுக்கு

ஹமாம்



நாள்தோறும் ஹமாம் தேய்த்துக்
குளியுங்கள். ஹமாம் தரும் நறு
மணமுள்ள நுரை உங்கள்
சருமத்தை சுத்தம் செய்வதுடன்,
புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள்
மேனிக்கு கவர்ச்சியான மெருகையும்
ஊட்டுகிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும்
ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.

அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்

டாடா
தயாரிப்பு

CMTH-14-151 TAM

போட்டிக் கதை 14

"**மணி** பத்தாகியும் இன்னும் தபால்காரர் வரவில்லையே!" என்று சன்னல் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மோகன் அலுத்துக் கொண்டான்.

இன்று மட்டும் எங்கிருந்து வந்துவிடப் போகிறது? ஒரு மாதமா, இரண்டு மாதங்களா இப்படி சன்னல் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தபால்காரர் இண்டர்வியூ கார்டு கொண்டு வருவார் என்று காத்திருப்பது. மூன்று வருடங்கள் அல்லவா அவன் காத்திருக்கிறான்!

மோகன் மூன்று வருடங்களுக்குமுன் பி. ஏ. பாஸ் பண்ணியவுடன் முதலில் தன்



பெயரை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டான். பின்பு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தப் பதிவைப் புதுப்பித்து வந்தான். ஆனால் வேலைதான் வரவில்லை. ஏன், இண்டர்வியூ கார்டாவது வரக்கூடாதா?

இதற்கிடையில் பாங்கி என்றும், கம்பெனி என்றும் பலவற்றுக்கு அப்ளிகேஷன் போட்டான். பல தேர்வுகளும் எழுதினான். ஆனால் வேலையோ கிடைக்கவில்லை.

காலையில் எழுந்ததும் குளித்துச் சாப்பிடுவான். பின் ஆங்கிலப் பேப்பரை எடுத்துக் கொண்டு சன்னல் அருகில் உட்கார்ந்து, சாலையில் வேலைக்குப் போகிறவர்களைப் பார்த்துக் கொண்டே படிப்பான்.

"இன்று எப்படியாவது தபால்காரர் இண்டர்வியூ கார்டு கொண்டுவரமாட்டாரா?" என்று அவர் வரவை எதிர்பார்த்திருப்பான். ஆனால் தபால்காரர் 'நாட் செலக்டட்' கார்டைக் கொடுத்தாலும் கொடுப்பாரே தவிர இண்டர்வியூ கார்டு கொடுக்கமாட்டார்.

இன்றும் அப்படித்தான் தபால்காரர் வருகையை எதிர்பார்த்திருந்தான்.

தபால்காரர் வந்தார். மோகனின் முகம் மலர்ந்தது. ஆனால் அவர் இண்டர்வியூ கார்டு கொடுக்கவில்லை. இன்லண்ட் கடிதம் ஒன்றைக் கொடுத்து விட்டுப் போனார். அது அவன் நண்பன் எழுதியது. அதை வேண்டா வெறுப்புடன் ஒரு முறை படித்து விட்டுக் கிழித்துச் சன்னல் வழியே வெளியே போடப் போனான்.

அப்போது அவன் கண்ட காட்சி அவனைச் சிந்திக்க வைத்தது —

வெளியே ஒருவன் தோளின் மீது கோணிப்பை ஒன்றைப் போட்டுக் கொண்டு, கீழே கிடந்த பழைய காகிதங்களைப் பொறுக்கி அதில் போட்டுக் கொண்டிருந்தான்.

மோகன் வெளியே வந்து அந்தப் பழைய காகிதங்களைப் பொறுக்குபவனை அழைத்தான்.

"ஏம்பா, இந்தப் பழைய காகிதங்களைக் கொண்டு போறியே, உனக்கு அதில் லாபம் இருக்கா?" என்று கேட்டான் மோகன்.

"ஏன் சார் இல்லே? கிலோ முப்பது காசுக்கு வாங்கறாங்க."

"ஒரு நாளைக்கு உனக்கு எவ்வளவு கிடைக்கும்?"

"எப்படியும் ஐந்து ரூபாய்க்குக் காகிதம் பொறுக்கிடுவேன் சார்!" என்று சொல்லி விட்டு அவன் பழையபடி காகிதங்களைப் பொறுக்க ஆரம்பித்தான்.

மோகன் வீட்டினுள் வந்து சன்னல் அருகில் உட்கார்ந்தான்.



அவன் உள் மனம் பேசத் தொடங்கியது.

"திருடக் கூடாது. பிச்சை எடுக்கக் கூடாது. பிறரைச் சுரண்டி வாழக் கூடாது. ஆனால் எந்த வேலையாவது செய்து சாப்பிடற திலே என்ன தவறு இருக்கு? நாமும் நாளாயி விருந்து இப்படி வீணே பொழுதைச் செல வழிப்பதைவிடப் பழைய காகிதங்களைப் பொறுக்கி விற்றால் என்ன ?"

பின்பு மோகன் நாளை முதல் பழைய காகிதங்களைப் பொறுக்கி விற்பது என்று முடிவு செய்தான்.

மறு நாள் காலையில் குளித்துச் சாப்பிட்டு விட்டு, ஒரு கோணிப் பையை எடுத்துக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டான்.

அப்போது அவன் முகத்தில் திடீரென்று ஒரு குத்து விழுந்தது.

மோகன் அந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து விடுபட்டுத் தன்னைத் தாக்கியது யார் என்று பார்த்தான்.

நேற்றுக் காலையில் அவன் வீட்டின் முன் பழைய காகிதங்களைப் பொறுக்கினவன் நின்று கொண்டிருந்தான். அவனுடன் மேலும் சில பெண்களும், ஆண்களும் காணப்பட்டனர்.

"உங்களுக்கு என்ன ஐயா கேட்டுப் போச்சு? தொப்புளுக்கு மேலே கஞ்சி உள்ளவங்க எல்லாம் எங்க தொழில் செய்ய வந்தா, அதையே நம்பி வயிறு பிழைப்பு நடத்துற எங்க நிலைமை என்ன ஆவறது ?" என்று கோபத்துடன் ஒருத்தி கேட்டாள்.



ஒரு நாள் வேலை!

ஏ.தெ.செல்லப்பா

முதலில் அவன் வசிக்கும் காலனியில் பழைய காகிதங்களைப் பொறுக்கலாம் என்று நினைத்தான். ஆனால் அது அவனுக்கு வெட்க மாக இருந்ததால் மஞ்களா தேவி காலனியில் பழைய காகிதங்களைப் பொறுக்கச் சென்றான்.

மற்றவர்கள் தன்னை வேடிக்கை பார்ப் பதையும் பொருட்படுத்தாது மத்தியானத்துக் குள் அரைக் கோணி நிரப்பிவிட்டான்.

பின் அங்கிருந்த தேநீர்க்கடையில் சிங்கள்டீ குடித்துவிட்டு மறுபடியும் பழைய காகிதங் களைப் பொறுக்க ஆரம்பித்தான்.

மாலை ஆறு மணியளவில் முழுக் கோணியும் சேர்ந்துவிட்டது. அதனைத் தோளில் வைத்துத் தூக்கிக் கொண்டு கடைக்குச் சென்றான்.

கடைக்காரர் அந்தக் காகிதங்களை நிறுத் துப் பார்த்து ஆறு ரூபாய் கொடுத்தார்.

மோகன்தான் முதன் முதலாக, ஒரு நாள் வேலையில் ஆறு ரூபாய் சம்பாதித்துவிட்ட மகிழ்ச்சியில் நினைத்தான். கூடவே நாளைக்குப் பழைய காகிதங்களை எங்கே பொறுக்கச் செல்வது என்று மனத்துக்குள் திட்டம் போட் டுக் கொண்டே நடந்தான்.

அறிமுக எழுத்தாளரின் கதை

"யோவ், இன்னோடு இந்த வேலையை விட்டுவிடு. எங்க பொழைப்பிலே மண்ணைப் போடப் பார்த்தே. அவ்வளவுதான்! உன் எலும்பைப் பொறுக்கிடுவேன்" என்றான் ஒருவன் மீசையை முறுக்கிக் கொண்டே.

மறு நாள் காலையில் வழக்கம் போல் மோகன், "என்ன தபால்காரர், பத்தரை மணி ஆகியும் இன்னும் வரவில்லையே ?" என்று அலுத்துக் கொண்டு சன்னல் அருகில் உட்கார்ந்திருந்தான்.

செயிண்ட் ஜோசப் பப்ளிக் ஸ்கூல்

கொடைக்கானல் - 624 101

(தமிழ்நாடு)

○○○○

பல்வேறு வகுப்புகளிலும் இடங்கள் கிடைப்பதுபற்றிய அறிவிப்பு

மாணவர்களுக்கான இந்த உயர்தர இங்கிலீஷ் போர்டிங் ஸ்கூல் 1976 ஜனவரி 20ம் தேதி குளிர்கால விடுமுறைக்குப் பின் திறக்கப்படுகிறது. பள்ளியாண்டு ஜனவரி தொடங்கி டிசம்பர் வரை. ஸீனியர் கேம்பிரிட்ஜ் *(I. S. C.)* பரீட்சைக்கு மாணவர்கள் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். பெண்கள் ஆறும் வகுப்பு வரை மட்டுமே அனுமதிக்கப்படுவர். பள்ளியில் சேர்வதற்குக் குறைந்த பட்ச வயது 4.

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற மலைவாசஸ்தலமான கொடைக்கானலில் அமைந்துள்ள இந்த பிரபலமான நிறுவனம் எழில் கொழிக்கும் இயற்கைச் சூழ்நிலையும், ஆரோக்கியமான பருவங்களையும் கொண்டது பள்ளிக்கூடமும் ஹாஸ்டலும் அதைச் சேர்ந்த பகுதிகளும், கட்டிடங்களும் முழுக்க முழுக்க மேலை நாட்டு முறையில் நவநாகரீகமான வசதிகளைக் கொண்டுள்ளன. சத்தான உணவு (சைவம், அசைவம் எதுவானாலும்) ஐரோப்பிய மேலை நாட்டு முறையில் பரிமாறப்படுகின்றன.

மிகவும் உயர்வான கல்வித்தரம் கொண்டது இப்பள்ளி. நல்ல பண்பாடுகள், சீரிய ஒழுக்கம், முழுமையான வலுவான கல்விப் பயிற்சி ஆகியவற்றின் மூலம் தகுதியும், அதிகாரிகளுக்கேற்ற குண நலன்களும் மாணவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாணவனுக்கும் தனிப்பட்ட நேரடியான கவனம் செலுத்தப்படுகிறது.

மாதக் கட்டணம் (உணவு, பள்ளிக்கட்டணம், லாண்டிரிச் செலவு உட்பட) ரூ. 345/- மட்டும்தான். பிராஸ்பெக்டஸுக்கும், ஸீட்டுகள் ரிஸர்வேஷனுக்கும் **எந்த வகுப்பில் அட்மிஷன் தேவை** என்பதற்கும் ரூ. 3/- போஸ்டல் ஆர்டருடன் பள்ளியின் வைஸ் பிரின்ஸிபாலுக்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

— ராசி —

சிவகாமியின் சபதம்

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

சிம்மக் கொடி

அமரர் கல்கி

உயிர்க் களை இழந்து மரணத்தின் அமைதி குடிகொண்டிருந்த கண்ணபிரானுடைய முகத்தைப் பார்த்த வண்ணம் சிவகாமி கண்ணீர் விட்டுத் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

''அம்மா! எத்தனை நேரம் அழுது புலம்பினாலும் கண்ணனுடைய உயிர் திரும்பி வரப் போவதில்லை. யுத்தம் என்றால் அப்படித்தான். கண்ணபிரான் ஒருவன்தானா இறந்தான்? இவனைப் போல் பதினாயிரக் கணக்கான வீரர்கள் பலியானார்கள். தயவு செய்து புறப்படுங்கள். இந்த வீட்டுக்குப் பக்கத்தில் தீ வந்துவிட்டது'' என்று பரஞ்சோதி கூறினார்.

கண்ணீர் ததும்பிய கண்களினால் சிவகாமி அவரைப் பரிதாபமாகப் பார்த்து, ''தளபதி! யுத்தம் வேண்டாம் என்று தங்களுக்கு ஓலை



எழுதி அனுப்பினேனே!'' என்று விம்மினாள்.

''ஆம், அம்மா! யுத்தத்தைத் தடுப்பதற்கு நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். என் முயற்சி பலிதமாகும் சமயத்தில் அந்தக் கள்ள பிக்ஷு வந்து எல்லாக் காரியத்தையும் கெடுத்து விட்டான். வாதாபி நகரம் அழிய வேண்டும் என்று விதி இருக்கும் போது யார் என்ன செய்ய முடியும்?''


''ஐயா! விதியின் பேரில் ஏன் குற்றம் சுமத்துகிறீர்கள்? எல்லாவற்றுக்கும் காரணம் இந்தப் பாதகிதான். அன்றைக்குத் தாங்களும் அவரும் வந்து எவ்வளவோ பிடிவாதமாக என்னை அழைத்தீர்கள். மூர்க்கத்தனத்தினால், 'வரமாட்டேன்' என்று சொன்னேன்....''

''அம்மா! எவ்வளவோ காரியங்கள் வேறு விதமாக நடந்திருக்கலாம். அதையெல்லாம் பற்றி இப்போது யோசித்து என்ன பயன்? தயவுசெய்து புறப்படுங்கள். அவரும் தங்கள் தந்தையும் தங்களைப் பார்க்க ஆவலுடன் காத்துக்கொண்டிருப்பார்கள்...''

''தளபதி! அவருடைய முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? என்னால் முடியாது. நான் இங்கேயே இருந்து உயிரை விடுகிறேன். ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாக அவரிடம் சொல்லுங்கள்!'' என்று சிவகாமி சொல்லிக் கொண்டிருக்கும்போது வாசலில் பெரும் சத்தம் கேட்டது.

சற்று நேரத்துக்கெல்லாம் மாமல்லர் உள்ளே பிரவேசித்தார். அவருக்குப் பின்னால் ஆயனரும் வந்தார்.

''ஆ! இதோ அவரே வந்து



விட்டார்!'' என்று பரஞ்சோதி வாய் விட்டுக் கூறி, மனத்துக்குள் 'இத்துடன் என் பொறுப்புத் தீர்ந்தது!' என்று சொல்லிக் கொண்டார்.


''அவரே வந்து விட்டார்!'' என்ற வார்த்தைகள் காதில் விழுந்ததும் சிவகாமியின் தேகம் புல்லரித்தது. குனிந்திருந்த தலையை நிமிர்த்தி, வாசற் பக்கம் பார்த்தாள். கண நேரத்திலும் மிகச் சிறிய நேரம் மாமல்லருடைய கண்களும் சிவகாமியின் கண்களும் சந்தித்தன.

அடக்கமுடியாத உணர்ச்சி பொங்கச் சிவகாமி மறுபடியும் தலை குனிந்தாள். அவளுடைய அடிவயிற்றிலிருந்து ஏதோ கிளம்பி மேலே வந்து மார்பையும் தொண்டையையும் அடைத்துக்கொண்டு மூச்சு விட முடியாமலும் தேம்பி அழுவதற்கு முடியாமலும் செய்தன.

அப்புறம் சிறிது நேரம் அங்கு என்ன நடந்ததென்றே தெரியாமல் சிவகாமி உணர்வற்றிருந்தாள்.

''ஆ! கண்ணபிரானு? ஐயோ!'' என்று அவளுடைய தந்தையின் குரல் அலறுவது காதில் விழுந்ததும் உணர்வு பெற்றாள்.

''ஆமாம்; கண்ணன்தான்! கமலியின் நெகிழ்நியைச் சிறை மீட்டு ரதத்தில் வைத்து அழைத்து



வர வந்த கண்ணன் தான் மார்பில் விஷக் கத்தி பாய்ந்து செத்துக் கிடக்கிறான். ஆயனரே! உம்முடைய மகளைக் கேளும்; அவளுடைய சபதம் நிறைவேறிவிட்ட தல்லவா? அவளுடைய உள்ளம் குளிர்ந்து விட்டதல்லவா? இனி இந்த நகரத்தைவிட்டுக் கிளம்பலாம் அல்லவா? கேளும், ஆயனரே! கேளும்!''

மாமல்லரின் மேற்படி வார்த்தைகள் சிவகாமியின் காதில் உருக்கிய ஈயத் துளிகள் விழுவது போல் இருந்தன. ஆஹா! இந்தக் குரல் எத்தனை அன்பு ததும்பும் மொழிகளை இன்பத் தேன் ஒழுகும் வார்த்தைகளை ஒரு காலத்தில் சொல்லி யிருக்கிறது? அதே குரலில் இப்போது எவ்வளவு கர்ண கடூரமான சொற்கள் வருகின்றன? ஆஹா! இதற்குத்தானா இந்த ஒன்பது வருஷ காலமும்



பொறுமையுடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தோம்?

மாமல்லரின் கொடுமையான வார்த்தைகள் பரஞ்சோதிக்கும் பெருந் துன்பத்தை உண்டாக்கின. ''சக்கரவர்த்தி! சிவகாமி அம்மை ரொம்பவும் மனம் நொந்து போயிருக்கிறார்....'' என்று அவர் சொல்வதற்குள் மாமல்லர் குறுக்கிட்டு, ''சிவகாமி எதற்காக மனம் நோக வேண்டும்? இன்னும் என்ன மனக் குறை? சபதம்தான் நிறைவேறி விட்டதே? சந்தேகமிருந்தால் வீதி வழியே போகும்போது பார்த்து நிச்சயப்படுத்திக் கொள்ளட்டும். வீடுகள் பற்றி எரிவதையும் வீதிகளில் பிணங்கள் கிடப்பதையும் ஜனங்கள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடுவதையும் பார்த்துக் களிக்கட்டும். ஆயனச் சிற்பியாரே! உம்முடைய குமாரியை அழைத்துக் கொண்டு உடனே கிளம்பும்!'' என்றார்.

சிவகாமியின் மார்பு ஆயிரம் சுக்கலாக உடைந்தது. அவளுடைய தலை சுழன்றது. அச்சமயம் ஆயனர் அவளுக்கு அருகில் சென்று இரக்கம் நிறைந்த குரலில், ''அம்மா, குழந்தாய்! என்னை உனக்குத் தெரியவில்லையா?'' என்றார்.

''அப்பா!'' என்று கதறிக் கொண்டே சிவகாமி தன் தந்தையைக் கட்டிக்கொண்டு விம்மினாள்.

* * *

அன்று அதிகாலையில் சேனாதிபதி பரஞ்சோதி வாதாபிக்குள் பிரவேசித்ததிலிருந்து மாமல்லருடைய உள்ளப் பரபரப்பு நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. சிவகாமிக்கு ஏதோ விபரீதமான அபாயம் நேரப் போகிறதென்றும் தாம் இங்கே வெறுமனே இருப்பது பெரிய பிசகு என்றும் அவருக்குத் தோன்றி வந்தது. புலிகேசிச் சக்கரவர்த்தி அரண்மனையில் அகப்படவில்லை யென்று மானவன்மரிடமிருந்து செய்தி வந்த பிறகு கோட்டைக்கு வெளியே அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆயனரையும் அழைத்துக்கொண்டு வாதாபி நகருக்குள் பிரவேசித்தார்.

சிவகாமியைச் சந்தித்தவுடனே அவளிடம் அன்பான மொழிகளைக் கூற வேண்டும் என்பதாகத்தான் யோசனை செய்து கொண்டு சென்றார். ஆனால், அவருடைய அன்புக்கும் அபிமானத்துக்கும் பெரிதும் பாத்திரமா யிருந்த கண்ணபிரான் செத்துக் கிடந்ததைக் கண்டதும் மாமல்லரின் மனம் கடினமாகி விட்டது. அதனாலேதான் அத்தகைய கடு மொழிகளைக் கூறினார்.

ரதத்தில் ஆயனரும் சிவகாமியும் முன்னால் செல்ல, பின்னால் சற்றுத் தூரத்தில் மாமல்லரும் பரஞ்சோதியும் குதிரைகளின் மீது ஆரோகணித்துச் சென்றார்கள். மாமல்லரின் விருப்பத்தின்படி பரஞ்சோதி தாம் சிவகாமியின் வீட்டு வாசலை அடைந்ததிலிருந்து நடந்த சம்பவங்களையெல்லாம் விவரமாகச் சொன்னார். அதையெல்லாம் கேட்கக் கேட்கச் சக்கரவர்த்தியின் நெஞ்சில் குரோதாக்கினி சுடர் விட்டு எரியத் தொடங்கியது. முக்கியமாக நாகநந்தியைப் பரஞ்சோதி கொல்லாமல் உயிரோடு விட்டு விட்டார் என்பது மாமல்லருக்குப் பெருங் கோபத்தை



கவனிக்கவும்: சுதந்திரப் போராட்ட வீரர்களே!

எல்லா மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களின் சங்கங்கள், இணைந்த அமைப்புகள், மாவட்ட உறுப்புகள், ஐ. என். ஏ. உட்பட மற்ற எல்லா சுதந்திர வீரர் அணிகள்.

5வது அகில இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் மகாநாடு, பெங்களூர்

1975 நவம்பர் 2ம் தேதி பெங்களூரில் கூடிய பூர்வாங்கக் கமிட்டி, பல்வேறு சுதந்திரப் போராட்ட வீரர் சங்கங்கள் ஒன்றாக இணைந்து ஒரு அகில இந்திய சங்கமாக இயங்க வேண்டுமென்று முடிவு செய்தபின் அந்தக் கருத்தை செயல் உருவில், பெங்களூரில் டிசம்பர் மூன்றாம் வாரத்தில் கூட இருக்கும் ஐந்தாவது அகில இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் மகாநாட்டில் நிறைவேற்ற வேண்டும். பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி மகாநாட்டைத் தொடங்கி வைக்கிறார். பூர்வாங்கக் கமிட்டிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த பழம் புரட்சி வீரர் பாபா பிருதிவிசிங் ஆஸாத் தலைமை வகிக்கிறார். கர்நாடக மாநில முதல்வர் ஸ்ரீ டி. தேவராஜ் அர்ஸ் மலர் வெளியிடுவார்.

இம்மகாநாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களைத் தேசத்தின் பொருளாதார சமூக புனர்நிர்மாணப் பணிகளிலும் சமூக விரோத சக்திகளை ஒடுக்கும் பணியில் ஈடுபடுத்தவும் மிக முக்கியமான தீர்மானம் செய்யப்படவிருக்கிறது. ஆகவே, எந்த சுதந்திரப் போராட்ட வீரனும் இந்த மகாநாட்டைத் தவற விட முடியாது. பெருவாரியான சுதந்திரப் போராட்ட வீரர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பிரதிநிதி சந்தாத் தொகை மிகக் குறைந்த பட்சமாக ரூ. 20 - என்று வைக்கப்பட்டுள்ளது. உணவு – தங்க வசதி ஆகியவை இத்தொகைக்குள் அடங்கும். ரயில், பஸ் கட்டணங்களில் சலுகைகள் தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மகாநாட்டுக்கு, சங்கங்களும், தனி நபர்களும் நிதி உதவி அளித்தால் நன்றியுடன் ஏற்கப்படும். நிதி உதவி அளிக்க முன்வருவோர் பொருளாளர் திரு ஆர். எம். தேசாய்க்கு அனுப்பலாம். பிரதிநிதிக் கட்டணம் செயலாளர், ஸ்ரீ வி. எல். சுந்தர ராவ், பட்டேல் பில்டிங், V மெயின் ரோடு, காந்திநகர், பெங்களூர்-560009 இதர விவரம் அறிய விரும்புவோர் மேற்கண்ட விலாசத்திலேயே பொதுச் செயலாளர் ஸ்ரீ எஸ். என். குப்தாவிடமிருந்து பெறலாம்.

பிரதிநிதிகள் கட்டணம் குறைந்த பட்சம் 1975 டிசம்பர் 5ம் தேதிக்குள் கூடுமானால் உள்ளூர் சங்கத்தின் மூலம் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பெங்களூர்
நவம்பர், 15, 1975

எம். எல். நாகராஜ் அர்ஸ்
தலைவர், வரவேற்புக் கமிட்டி
முன்னாள் அங்கத்தினர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி

உண்டாக்கியது. சிவகாமியைப் பெருந் துன்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகவே அவளைக் கொல்ல யத்தனித்ததாக நாக நந்தி சொன்னாரல்லவா? அதைக்கேட்ட போது, அந்தக் கூற்றில் அடங்கியிருந்த உண்மையை மாமல்லரின் அந்தராத்மா உடனே உணர்ந்தது. அது காரணமாக அவருடைய குரோதம் பன்மடங்கு அதிகமாகிக் கொழுந்து விட்டெரிந்தது.

சிவகாமி தன் அருமைத் தந்தையின் மீது சாய்ந்த வண்ணம் வாதாபி நகரின் பயங்கர வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சென்றாள். அந்தக் கோரங்களைப் பார்க்கச் சகியாமல் சில சமயம் கண்களை மூடிக்கொண்டாள். ஆனால், கண்களை மூடிக் கொண்ட போதிலும் காதுகளை மூடிக்கொள்ள முடியவில்லை. ஜுவாலை விட்டுப் பரவிய பெருந் தீயிலே



வீடுகள் பற்றி எரியும் சடசடச் சத்தமும், காற்றின் 'விர்' என்ற சத்தமும் குழந்தைகளின் கூக்குரலும், ஸ்திரீகளின் ஓலமும், சளுக்க வீரர்களைப் பல்லவ வீரர்கள் துரத்தி ஓடும் சத்தமும் ஜயகோஷமும், ஆஹாகாரமும் அவளுடைய செவிகளை நிரப்பி அடிக்கடி கண்களைத் திறந்து பார்க்கச் செய்தன.

இந்த நிலையில் ஒருமுறை மாமல்லர் சிறிது முன்னேறி வந்து ரதத்தின் ஓரமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தபோது, சிவகாமி ஆவலுடன் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஆனால் மாமல்லரோ அவள் பக்கம் தம் பார்வையைத் திருப்பவே யில்லை. ஆயனர் முகத்தை நோக்கிய வண்ணம் ''சிற்பியாரே! நாங்கள் எல்லாரும் இங்கிருந்து புறப்பட்டு வர இன்னும் ஒரு மாதம் ஆகலாம். உங்களுக்கு இஷ்டம் இருந்தால் உம்மையும் உமது மகளையும் முன்னதாக தக்க பாதுகாப்புடன் காஞ்சிக்கு அனுப்பி வைக்கிறேன். அல்லது நாகநந்தி பிக்ஷு உம்மையும் உமது குமாரியையும் அஜந்தாவுக்கு அழைத்துப் போக விரும்புவதாகச் சொன்னாராம். அது உங்களுக்கு இஷ்டமானால் அப்படியும் செய்யலாம்!'' என்றார்.

அத்தனை கஷ்டங்களுக்கும் யுத்த பயங்கரங்களுக்கும் இடையிலேயும் ஆயனருக்கு ''அஜந்தா'' என்றதும் சபலம் தட்டியது. அஜந்தா வர்ண இரகசியத்தைப் பரஞ்சோதி நாகநந்தியிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட விவரம் இன்னமும் ஆயனருக்குத் தெரியாது. எனவே, அவர் சிவகாமியைப் பார்த்து, ''அம்மா! உனக்கு என்ன பிரியம்? காஞ்சிக்குப் போகலாமா அல்லது அஜந்தாவுக்குப் போகலாமா?'' என்றார்.

சிவகாமியின் உள்ளம் அந்த நிமிஷத்தில் வைரத்தை விடக் கடினமாயிருந்தது. ''அப்பா! நான் காஞ்சிக்கும் போகவில்லை; அஜந்தாவுக்கும் போகவில்லை. பல்லவ குமாரரை என் பேரில் கருணை கூர்ந்து அவர் கையில் உள்ள வாளை என் மார்பிலே பாய்ச்சி என்னை யமபுரிக்கு அனுப்பிவிடச் சொல்லுங்கள். பழைய அபிமானத்துக்காக எனக்கு இந்த உதவி செய்யச் சொல்லுங்கள்!'' என்றாள்.

இவ்விதம் சொல்லிவிட்டு ஆயனரின் மடிமீது சிவகாமி மறுபடியும் ஸ்மரணை இழந்து வீழ்ந்தாள்.

மாமல்லர் இரும்பிச் சென்று பரஞ்சோதியின் பக்கத்தை அடைந்தார். சிவகாமியின் மீது அத்தகைய குரூரமான சொல்லம்புகளைச் செலுத்திய பிறகு அவருடைய மனம் சிறிது அமைதி அடைந்திருந்தது. ''நண்பரே! அதோ புலிகேசியின் பொய்யான ஜயஸ்தம்பத்தைப் பார்த்தீர் அல்லவா? ஒன்பது வருஷத்துக்கு முன்பு ஒரு நாள் நாம் அந்த ஸ்தம்பத்தின் அடியில் நின்று செய்துகொண்ட சங்கல்பத்தை இன்று நிறைவேற்றி விட்டோம். அந்தப் பொய்த் தூணை உடனே தகர்த்தெறிந்துவிட்டு பல்லவ சைனியத்தின் ஜயஸ்தம்பத்தை நாட்டச் செய்யுங்கள். புதிய ஜயஸ்தம்பத்திலே பல்லவ சேனையின் வெற்றிக் கொடி வானளாவப் பறக்கட்டும்! மகத்தான இந்த வெற்றிக்கு அறிகுறியாக நம் கொடியிலும் விருதுகளிலும் உள்ள ரிஷபச் சின்னத்தை மாற்றிச் சிம்மச் சித்திரத்தைப் பொறிக்கச் செய்யுங்கள்!'' என்று ஆக்ஞாபித்தார். (தொடரும்)

விலையை ஒப்பிடுக.
தரத்தை சோதித்திடுக.

பாயிண்ட்

தரமான டிட்டர்ஜண்ட்
சலவைப் பவுடர்



பெங்களூர் அரசினர் சோப்பு
தொழிற்சாலையின் ஒரு தரமான தயாரிப்பு

10. நெஞ்சு குளிர்ந்தது

நன்றே முடிவதெல்லாம் நன்றே

- ஆங்கிலப் பழமொழி

ராஜாஜியின் காங்கிரஸ் பிரவேசத்துக்கு எதிராகத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் காமராஜ் விடுத்த அறிக்கையைக் கண்டு, நெஞ்சு பொறுக்காத நிலையில் கல்கி எழுதிய தலையங்கத்தையும், அதன் மூலம் காமராஜ் தரப்பினர் சீற்றம் கொண்டதையும் கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். மீண்டும் அதே நிலையில் அடுத்த வாரக் கல்கி இதழிலும் அதன் ஆசிரியர் ஒரு குறிப்பு எழுதினார் — அப்போது காமராஜின் அறிக்கையை அவருடைய காரியக் கமிட்டி உறுதிப்படுத்தியிருந்தது :


தமிழ் நாட்டுக் காரியக் கமிட்டியின் ''செல்லாது!'' தீர்மானத்தைத் தூக்கியடித்து நமது சகோதர ஆந்திர மாகாணக் காரியக் கமிட்டியார் ஒரு ''கூடாது'' தீர்மானத்தைச் செய்திருக்கிறார்கள். நமது மதிப்புக்குரிய தலைவர் ஆந்திர கேசரி ஸ்ரீ டி. பிரகாசம் காருவின் தலைமையில் அவர்கள் கூடி, ''ராஜாஜியைத் திரும்பக் காங்கிரஸில் சேர்த்துக் கொள்ளக் கூடாது!'', ''ராஜாஜியைக் காரியக் கமிட்டிக் கூட்டங்களுக்கு அழைக்கக் கூடாது!'' என்றெல்லாம் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். எப்படி இருக்கிறது விஷயம்?

ஆந்திர கேசரி பிரகாசம் அவர்கள் சமீபத்தில் தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த போது, சில இடங்களில், ''நமது மாகாணத்தின் வரப்போகும் பிரதம மந்திரி!'' என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டாராம்! அந்த ஏற்பாட்டுக்கு ஏதாவது பங்கம் வந்துவிடப் போகிறதே என்ற பீதி காரணமாகவே,, ''ராஜாஜியைக் காங்கிரஸில் சேர்த்துக்கொள்ளக்கூடாது!'' என்று சம்பந்தமில்லாத, சர்வ



பொன்னியின் புதல்வர்

சுந்தா



★ நேரு, காங்கிரஸ் ராஷ்டிரபதியானவுடனே அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டியில் ராஜாஜியைச் சேர்த்துக் கொண்டார்.



★ 1945 அக்டோபர் தொடக்கத்தில் மௌலானா ஆஸாத் தமக்கு உரிய அதிகாரத்தின்படி ஆகஸ்டு மாதத்திலேயே ராஜாஜியைக் காங்கிரஸில் சேர்த்துக் கொண்டாயிற்று என அறிவித்தார்.

அதிகாரம் என்பது நெருப்பைப் போன்றது. அதைச் சரியாக உபயோகப்படுத்த வேண்டும்; நல்ல காரியங்களுக்கு உபயோகப் படுத்த வேண்டும். சமையல் செய்வதற்கும் குளிர் காய்வதற்கும் நெருப்பை உபயோகிக்கலாம்; குடியிருக்கும் வீட்டில் கொள்ளி வைப்பதற்கும் உபயோகப்படுத்தலாம். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியார் தங்களிடமுள்ள அதிகார நெருப்பைச் சொந்த வீட்டைக் கொளுத்துவதற்கு உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். ''ராஜாஜியை மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்தது செல்லாது'' என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்...

அசட்டுத்தனமான தீர்மானத்தை ஆந்திர மாகாணக் கமிட்டி நிறைவேற்றி இருப்பதாகக் காண்கிறது.

ராஜாஜி காங்கிரஸில் சேர்ந்து விட்டதினால் அவர் பிரதம மந்திரியாக வந்துவிட வேண்டும் என்று அவசியம் இல்லை; சட்டசபை அங்கத்தினர் ஆதரவு பெற்று ஸ்ரீ பிரகாசம் பிரதம மந்திரியாக வருவதில் நமக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. ஆனால் ஸ்ரீ டி. பிரகாசம் பிரதம மந்திரியாக வரும்பொருட்டு ராஜாஜியைக் காங்கிரசுக்குள்ளேயே வரவிடக் கூடாது என்று செய்யப்படும் பட்டவர்த்தமான சூழ்ச்சியை நாம் வெறுக்கிறோம்.

(கல்கி இதழ் 23-9-45)

ராஜாஜி தரப்பாரும் காமராஜ் தரப்பாரும் மேலும் தீவிரமாய்த் தத்தம் கட்சிகளை எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்தார்கள்; அத்துடன், ''ராஜாஜி வேண்டும்'' என்று முதல் தரப்பாரும், ''வேண்டாம்'' என்று மறு தரப்பாரும், அகில இந்திய காங்கிரஸ் ராஷ்டிரபதி மௌலானா 'ஆஸாதுக்கு, நூற்றுக்கணக்கில் தந்திகளும் கடிதங்களும் அனுப்பினார்கள்.



அக்டோபர் தொடக்கத்தில் மௌலானா ஆஸாத், தமக்கு உரிய அதிகாரத்தின்படி ஆகஸ்டு மாதத்திலேயே ராஜாஜியைக் காங்கிரஸில் சேர்த்துக் கொண்டாயிற்று என்று அறிவித்தார். ராஜாஜியைக் காங்கிரஸ் உறுப்பினராகக் கருத வேண்டும் என்றும், அதன்படியே ஆவன செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தந்தி மூலம் தெரிவித்தார்; அந்தத் தந்திச் செய்தி பத்திரிகைகளில் வெளியாயிற்று. ஆனாலும், ராஜாஜி பற்றிய விவாதத்தை அது ஓய வைக்கவில்லை. திருச்செங்கோடு தாலுகாக் கமிட்டியிலிருந்து மாகாணக் கமிட்டிக்கு

★ ''தற்போதைய நிலைமையில் ராஜாஜியைப் போல் காங்கிரஸ் தொண்டின் பொறுப்பை வகித்து நடத்தக்கூடியவர் யாருமில்லை. அவருடைய ஊழியத்தைத் தென்னாட்டு காங்கிரஸ்வாதிகள் இழந்து விடக் கூடாது'' என்றார் காந்திஜி.

★ ''ஸ்ரீ பிரகாசம் பிரதம மந்திரியாக வரும்பொருட்டு ராஜாஜியைக் காங்கிரஸுக்குள்ளேயே வரவிடக் கூடாது என்று செய்யப்படும் பட்டவர்த்தனமான சூழ்ச்சியை நாம் வெறுக்கிறோம்'' என்று எழுதினார் கல்கி.





★ திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று அதிகாரபூர்வமான தீர்மானம் கொணர்ந்த பட்டாபியையும், கைதூக்குதல் முறையில் அதை வோட்டுக்குவிட்டு நிறைவேறி விட்டதாக அறிவித்த காமராஜும்.

★ ''ஊரெல்லாம் உன்னை வேண்டாம் என்றாலும் எனக்கு நீ வேண்டும்'' என்று ரங்கநாதப் பெருமாள் அருள்தந்தது அதிருசி....



ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லுமா செல்லாதா என்ற பிரச்னையை அது தீர்க்கவில்லை. மாகாணக் கமிட்டியில் ஒருவர் அங்கம் வகித்தால்தான் அவர் காங்கிரஸ் மகாசபையிலும் உயர் கமிட்டிகளிலும் இடம் பெற முடியும். அதனால்தான் அந்தப் பிரச்னை தீர வேண்டியது அவசியமாயிற்று.

அதற்கிடையே, அடுத்த ஆண்டு மார்ச்சு மாதத்தில் சட்டசபைகளுக்குத் தேர்தல் நடக்கும் என்று அரசாங்கம் நாள் குறிப்பிட்டு அறிவித்துவிட்டபடியால், காங்கிரஸ் கட்சியின்

சார்பில் வேட்பாளர்களைத் தீர்மானிப்பதற்கென, தேர்தல் கமிட்டி ஒன்றைக் காமராஜ் நியமித்தார். அந்தக் கமிட்டியில் அவரை ஆதரிப்பவர்களே இடம் பெற்றிருந்தார்கள். அதைத் தலையங்கம் ஒன்றில் கல்கி சுட்டிக்காட்டினார் :

....சென்னை மாகாணத்திலுள்ள எல்லாக் காங்கிரஸ் வாதிகளும் தங்களுக்குள் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமைப்பட வேண்டும். தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் ராஜாஜி தடுப்புப் பிரசாரத்தை நிறுத்தி, அவர் வலிய வந்து அளிக்கும் ஒத்துழைப்பை மனமுவந்து பெற வேண்டும்.

சட்டசபை அபேட்சகர்களைப் பொறுக்குவதற்காக இப்போது ஏற்பட்டிருக்கும் தமிழ் நாட்டுத் தேர்தல் கமிட்டி ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் அடங்கியது. மாகாணக் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையை மேற்படி தேர்தல் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளாதது பெரும் பிசகு. ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையும், ஸ்ரீ பெருமாள்சாமி ரெட்டியார், ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர், சர்தார் வேதரத்தினம், ஸ்ரீ எம். சி. வீரபாகு போன்றவர்களையும் மேற்படி தேர்தல் கமிட்டியில் சேர்த்துக் கொள்ள வேண்டும். எல்லாருடைய பூரண ஒத்துழைப்பின் பேரில் தேர்தல் கமிட்டி ஏற்பட்டால்தான், கட்டுப்பாடாகச் சரியான சிபாரிசுகளைச் செய்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இந்தத் தலையங்கம், அக்டோபர் 28ம் தேதிய கல்கி இதழில் வந்தது. அதற்கு மூன்றாம் நாள் 31ம் தேதியன்று மதுரைக்கு அடுத்த திருப்பரங்குன்றத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, காமராஜின் தலைமையில் கூடவிருந்தது. அதை முன்விட்டு எழுதிய இந்தத் தலையங்கத்தில், மேலும் கல்கி, ''தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியார் நாட்டின் நிலைமையை நன்கு யோசித்து, ராஜாஜி விஷயமாகவும், தேர்தல் கமிட்டியை விஸ்தரிக்கும் விஷயமாகவும் தக்க முடிவுக்கு வருவார்கள் என்று நம்புகிறோம்'' என்று எழுதி இருந்தார்.

இதே தலையங்கத்தில், ராஜாஜி சம்பந்தமான விவாதத்தில் தமது கருத்துக்கள் மீது எழுந்த கண்டனத்துக்கு, மறுமொழியும் கூறியிருந்தார் :

ராஜாஜி விஷயமாக நாம் எடுத்த முயற்சியின் பொருட்டுச் சில அன்பார்ந்த சகோதரப் பத்திரிகைகள் நம்மீது நெருப்பைக் கக்கி இருக்கின்றன. இதைப் பற்றித் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் சிறிதும் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. நாம் எழுதியதோ செய்ததோ சரியா தப்பா என்பது இப்போது தேசத்தின் முன்னுள்ள பிரச்னை அல்ல. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வேலையில் பொறுப்பும் பங்கும் பெறுவதற்கு ராஜாஜி வேண்டுமா வேண்டாமா என்பது தான் பிரச்னை. பத்திரிகைகளின் எழுத்தையும் செய்கையையும் பற்றித் தீர்ப்பளிக்கப் பொது ஜனங்கள் இருக்கிறார்கள். உண்மையைப் பொய் என்று சாதிப்பதினாலும், ஆபாசமான வசை மொழிப் பிரயோகத்தினாலும் தமிழ் மக்களைத் திருப்பி விட முடியாது..

கல்கியினால் காரியம் எல்லாம் கெட்டுவிடுகிறது என்றும், கல்கியின் தலையீடு இல்லாவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்றும், சில அன்பார்ந்த நண்பர்கள் சொல்லி வருகிறார்கள். இது எப்படி என்பது நமக்குப் பெரிய மர்மமாயிருக்கிறது. நாம் சொல்வதில் உண்மை இருந்தால் அதை எடுத்துக்கொண்டு அதன்படி நடக்கட்டும். நாம் சொல்வது சரியில்லாவிட்டால் அதைப் பொருட்படுத்த வேண்டியதே இல்லை.

நம்மால் எப்படிக் காரியம் கெட்டுப் போகும்? நாம் சொல்லிவிட்டோமே என்பதற்காக நல்ல காரியத்தை, உசிதமான காரியத்தைச் செய்யாமல் விட்டுத் தவறான காரியத்தைச் செய்வார்களா? இப்படிச் செய்யக் கூடியவர்களாயிருந்தால், அவர்களை நம்பித் தேசத்தின் காரியங்களை ஒப்புவிக்கலாமா?

ஆகவே, கல்கியைக் கொஞ்சம் மறந்துவிட்டு, நாட்டுக்கு நன்மையான காரியத்தைச் செய்யும்படி தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு பலப் பரீட்சைக் களமாக விளங்கப்போகும் திருப்பரங்குன்றம் கூட்டத்துக்கு நாள் நெருங்க நெருங்க, இரு தரப்புப் பிரசாரமும் தீவிரமாயிற்று. ''அபிமன்யு'' ம. பொ.சி.யின் துணையுடன் பல ஊர்களுக்கு ராஜாஜி சென்று பேசினார். அங்கங்கே பல ஆதரவாளர்கள் சேர்ந்து கொண்டார்கள் — என். அண்ணாமலை பிள்ளை, சி. பி. சுப்பையா, சா. கணேசன், ஆரணி சீனிவாச ராவ், பெருமாள்சாமி ரெட்டியார், திருச்சி ரத்தினவேலுத் தேவர் முதலானோர். கம்யூனிஸ்ட் தலைவர் பி. ராமமூர்த்தியும் சேர்ந்து கொண்டார்.

காமராஜும் அதே போலத் தமது ஆதரவாளர்களுடன் பிரசாரப் பயணம் செய்தார். சி. என். முத்துரங்க முதலியார், எம். பக்தவத்சலம், ருக்மிணி லட்சுமிபதி, முத்துராமலிங்கத் தேவர் ஆகியோர் அவர் பக்கம் இருந்தார்கள்.

ராஜாஜியும் அவருடைய ஆதரவாளர்களும் மதுரையில் ஏ. வைத்தியநாதய்யரின் வீட்டில் தங்கினார்கள். தாம் ராஜாஜியை ஆதரித்ததற்காக அந்நகரில் தமது உயிருக்கே ஆபத்து



சாம்பாரில் உப்பு அதிகமாகி விட்டதா? அந்தச் சாம்பாரில் ஒரு சிறு வெள்ளி ஸ்பூனைப் போட்டு அடுப்பில் வைத்துப் பத்து நிமிடம் கொதிக்க வையுங்கள். உப்புச் சத்தை ஸ்பூன் இழுத்துக்கொண்டு விடும்.

ஃபெமினா - பானி.

ஹல்லோ !

பிரான்ஸ் நாட்டில் ட்ரங்க் கால் போட்டால் தொடர்பு கிடைக்க நேரமானால் அது வரை நம் காதுகளில் இனிமையான இசை கேட்டுக்கொண்டிருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

— உமன்ஸ் ஓன் - பாபு



நேரவிருந்தது என்று ம.பொ.சி. சொல்கிறார்.

திருப்பரங்குன்றம் கூட்டத்தில் கலந்துகொள்ள ராஜாஜிக்கு அழைப்பு இல்லை. அழைப்பு இல்லாமலே அதில் கலந்துகொள்ளலாம் என்று அவருடைய ஆதரவாளர்களில் சிலர் யோசனை கூறினார்கள். ஆனால் ம. பொ. சி. வற்புறுத்தியதன் பேரில், அவர்களுடைய யோசனையை அவர் ஏற்காமல் குற்றாலத்துக்கு டி. கே. சி. யுடன் தங்கி இருக்கப் போய் விட்டார்.

31ந் தேதி காலையில், திருப்பரங்குன்றத்துக் கூட்டம் ஆரம்பமானபோது, தலைவர் காமராஜ் முன்னுரையாகச் சிறிது பேசினார். அப்போது அவர், ராஜாஜி காங்கிரஸில் திரும்பச் சேர்ந்ததை மகிழ்ச்சியுடன் தாம் வரவேற்பதாக அறிவித்தார்.

அந்தப் பேச்சின் விவரத்தைச் செய்தி மூலம் அறிந்த கல்கி எதிர்பாராத ஆனந்த வியப்புக்கு உள்ளானார். அந்த வியப்பு உணர்ச்சியுடன் அவசர அவசரமாகத் தலையங்கம் ஒன்றை அவர் எழுதி அநேகமாய்ப் பூர்த்தி யடைந்திருந்த தமது அடுத்த மாதம் 4ந் தேதிய இதழில் சேர்த்தார்.

''புது அத்தியாயம்'' என்ற தலைப்புக் கொண்ட அந்தத் தலையங்கத்தின் முக்கிய பகுதிகள்:

திருப்பரங்குன்றத்தில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், அக்கிராசனர் ஸ்ரீ காமராஜ நாடார், ''ராஜாஜியின் காங்கிரஸ் பிரவேசத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்!'' என்று கூறியபோது, ராஜாஜிக்கு மட்டும் அவர் வரவேற்புக் கூறவில்லை; தியாகத்துக்கும் ஒழுக்கத்துக்கும், அறிவுக்கும் திறமைக்கும், ஒற்றுமைக்கும் உயர்ந்த பண்பாட்டுக்கும் நல்வரவு கூறியதாகவே கொள்ள வேண்டும். இன்னும், தமிழ் நாட்டின் மேன்மைக்கும் தமிழ் மக்களின் உன்னதத்துக்கும் வரவேற்பு அளித்ததாகச் சொல்ல வேண்டும்.

மேலும் ஐயந்திரிபுகளுக்குக் கொஞ்சமும் இடம் ஏற்படாதபடி, ... ''வரப்போகும் மாகாண சட்ட சபைத் தேர்தல்களில் அவருடைய ஒத்துழைப்பு நமக்கு வேண்டும்'' என்று கூறி, ''நமக்குள்ளே ஒற்றுமை அவசியம், பிளவு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளக் கூடாது'' என்றும் வற்புறுத்தி இருக்கிறார்...

ஸ்ரீ காமராஜின் உதாரணத்தைப் பின்பற்றிக் காங்கிரஸ் ஊழியர்கள் அனைவரும் வெளி வேற்றுமைகளையும் மன வேற்றுமைகளையும் அடியோடு களைந்தெறிந்து விட்டு, வருங்காலத்தில் ஒரே மனதுடன் ஒரேமுகமாக தேசப் பணியில் ஈடுபடுவார்கள் என்று நம்புகிறோம். வீண் விவாதங்களும் துவேஷப் பிரசாரங்களும் பரஸ்பர தூஷணைகளும் அடங்கிய பழைய அத்தியாயம் இத்துடன் முடிவு பெறட்டும். ''ராஜாஜி வேண்டும்'' என்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கூறிவிட்டபடியால், ''ராஜாஜி வேண்டாம்'' என்ற கிளர்ச்சி நிற்கட்டும். தமிழ் நாட்டின் காங்கிரஸ் இயக்க சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகட்டும்...

ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் விசால நோக்கம் காட்டி, மிகப் பெருந்தன்மையோடு நடந்து கொண்டிருப்பதை முன்னிட்டும், தமிழ் நாட்டு தேச பக்தர்கள், தேசத் தொண்டர்களுக்குள்ளே மனக் கசப்பு அறவே மறந்து பரிபூரண ஒற்றுமை நிலவும் பொருட்டும், பெரும் சர்ச்சைக்கு இடமாகி யிருந்த ''பெரிய பதவியும் சின்ன புத்தியும்'' என்னும் நமது தலையங்கத்தில் ''சின்ன புத்தி'' என்ற பதப் பிரயோகத்தை நாம் மனப்பூர்வமான மகிழ்ச்சியுடன் வாபஸ் பெறுகிறோம்.

நெஞ்சு பொறுக்காமல் சொன்ன சொற்களை ''வாபஸ்'' பெற்றுக் கொள்வதற்குக் காமராஜின் பேச்சு கல்கிக்கு ஒரு வாய்ப்பை அளித்தது; அதை இந்தத் தலையங்கத்தில் அவர் பயன்படுத்திக் கொண்டார். அம்மட்டில் சரியே. ஆனால் கல்கியின் ஆனந்த வியப்பை ஏமாற்ற அதிர்ச்சியாய்க் குடைசாய்த்து விட்டது மறுநாள் வந்த செய்தி.

என்ன ஆயிற்று? காலையில் அப்படிக் காமராஜ் பேசினாரா? அன்று மாலையே எம். பக்தவத்சலம், ''திருச்செங்கோடு தேர்தல் செல்லாது'' என்னும் அதிகார பூர்வமான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். ராஜாஜியின் ஆதரவாளர்கள் கொதித்தெழுந்து அதை எதிர்த்தார்கள். அவர்களைக் கண்டித்து மறு தரப்பார் வாயடி அடித்தார்கள். அந்தக் கூச்சல்களுக்கும் குழப்பத்துக்கும் இடையே, காமராஜ், ''கைதூக்கல்'' முறையில் தீர்மானத்தை ஓட்டுக்கு விட்டு அது நிறைவேறிவிட்டதாக அறிவித்தார். தனித் தனியே வோட்டைப் பதிவு செய்து கணிக்க வேண்டும் என்று ராஜாஜி தரப்பார் கோரியதற்கு அவர் இணங்கவில்லை. ம. பொ. சி.யின் சொற்களில், ''பிரதிவாதியே நீதிபதி ஆசனத்தில் அமர்ந்து விட்டால் தீர்ப்பு வாதிக்குச் சாதகமாகவா இருக்கும்?''

கல்கி தவறாக எதிர்பார்த்தது போல் புதிய அத்தியாயம் ஒன்று ஆரம்பமாகாமல், பழைய அத்தியாயமே

தொடர்ந்துகொண்டிருக்கையில் ராஜாஜியின் தலைமையில் நம்பிக்கை கொண்ட சமரச காங்கிரஸ்வாதிகள் இருநூறுபேர் சீர்காழியில் கூடினார்கள். அவர்கள் இயற்றிய தீர்மானங்களில் ஒன்று, ''திருச்செங்கோட்டுத் தேர்தல் செல்லாது என்று சொன்ன திருப்பரங்குன்றத்துத் தீர்மானம் செல்லாது'' என அறிவித்து, அது பற்றிக் காங்கிரஸ் மேலிடத்தார் விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. இன்னொன்று, மாகாணத் தேர்தல் குழுவை சீர்படுத்த வேண்டும் எனக் கோரியது. அந்த இரண்டுக்கும் இணங்க, அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியார், தம்மில் ஒருவரான ஆஸப் அலியைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அத்தலைவர் வெகுவாக விசாரணை செய்துவிட்டு, திருச்செங்கோட்டுத் தேர்தல் செல்லத் தக்கதே எனத் தீர்ப்பளித்தார். அத்துடன், தேர்தல் குழுவில் ராஜாஜி தரப்பாரை சேர்த்துக் கொள்ளுமாறும் காமராஜுக்கு யோசனை கூறினார்.

அதைத் தொடர்ந்து காமராஜ், ராஜாஜியுடன் ஒரு சமரச உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி காமராஜ் தரப்பில் ஐந்து பேர்களும், ராஜாஜி தரப்பில் மூன்று பேர்களும், அவரவர் ஆதரவாளர் தொகையின் விகிதப்படி தேர்தல் குழுவில் இடம் பெற்றார்கள். அந்தக் குழுவின் தலைவர் பதவி காமராஜுக்கு; அதற்கு ஆலோசனை கூறும் பதவி ராஜாஜிக்கு.

இவ்விதமாய் அக்குழு அமைந்ததை கல்கி வரவேற்று, ''ராஜாஜியை எல்லாக் கட்டங்களிலும் கலந்துகொண்டு காரியம் செய்வதாக ஸ்ரீ காமராஜ் நாடார் உறுதி கூறியிருப்பது சமரச மனப்பான்மைக்கு மிக முக்கியமான அறிகுறியாகும்'' என்று எழுதினார்.

யார் யாரை வேட்பாளர்களாய் நிறுத்தலாம் என்பது குறித்து குழுவின் இரு தரப்பாரும் ''பேரம்'' பேசிப் பட்டியல் தயாரித்துக் கொண்டிருக்கையில், மகாத்மா காந்தி, இந்திப் பிரசார சபையின் வெள்ளி விழாவில் தலைமை வகிப்பதற்காகச் சென்னைக்கு வந்தார் —1946 ஜனவரி இறுதியில். அந்த விழாவுக்குப் பிறகு, ராஜாஜி காமராஜ் ஆகிய இருவரின் துணையுடன் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்தார் அண்ணல். அந்தப் பயணத்தினிடையே, முன்பு ராஜாஜி பிரதம மந்திரியாக இருக்கையில் இயற்றிய சட்டத்தின் மூலம் ஹரிஜனங்களுக்குப் பிரவேச உரிமை கிடைத்த மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கும் பழனி ஆண்டவர் ஆலயத்துக்கும் மகாத்மா சென்று தரிசனம் செய்தார். கல்கியின் சொற்களில்: ''தமிழ் நாட்டின் பழம்பெரும் தெய்வங்கள், காந்தி மகான் தங்கள் ஆலயத்துக்கு வந்து தங்களைத் தரிசித்ததில் எல்லையில்லா மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தார்கள்.''

தமிழ் நாட்டில் பயணம் செய்கையிலும் திரும்பிச் செல்கையிலும் ராஜாஜியைப் பற்றிக் குறை கூறும் கடிதங்கள் சில மகாத்மாவின் கைக்குக் கிடைத்தன. அவற்றுக்கு அவர் தமது ''ஹரிஜன்'' பத்திரிகையில் பதில் எழுதினார். தேசத்தின் பல பத்திரிகைகளும் எடுத்து வெளியிட்ட அந்தப் பதில் என்ன என்பதைக் கல்கியின் தமிழாக்கத்திலேயே பார்ப்போம்:

என்னுடைய மிகப் பழைய நண்பர்களில் ராஜாஜி ஒருவர். என்னுடைய இலட்சியங்கள், கொள்கைகள் எல்லாவற்றுக்கும் வாக்கினாலும் செயலினாலும் சிறந்த முறையில் விளக்கம் கொடுப்பவர் அவர் என்பது பிரசித்தமான விஷயம். 1942ல் அவர் என்னோடு மாறுபட்டார் என்பதை நான் அறிவேன். அந்த வேறுபாட்டைப் பகிரங்கமாக வெளியிட்ட அவருடைய தைரியத்தைப் போற்றுதல் வேண்டும். ராஜாஜி சிறந்த சமூக சீர்




உங்களுக்கு விருப்பமான ப்ரூ
இப்போழுது குறைந்த விலைக்கு
ரீ:பில் பாக்கெட்டில்
கிடைக்கிறது
200 கிராம்-(ஜாடியைவிட ஒரு ரூபாய் குறைவு)
50 கிராம்-(ஜாடியைவிட 50 பைசா குறைவு)
Refill pack
Brooke Bond
BRU
INSTANT
CHICORY
BRU
Brooke Bond
BRU
INSTANT
கெட்டியான
ஸ்ட்ராங்கான
ப்ரூ ருசி
சிறந்த காப்பியின் ருசி
OBM-4381A/3 TAM

ஓல்ட் ஸ்பைஸ்
ஆணின் வெற்றிக்கு அடிகோலுகிறது.



எழில்துள்ளும் பெருங்கடல்,
அழகுப் பொக்கிஷமாக
அவள் அருகிலிருக்க—
ஆம் அவன் ரசனைக்கு
சுருதி கூட்டுகிறது.
வழவழவென ஷேவ்,
குளுகுளுவென குளியல்,
எண்ணத்தைக் கிளர்ந்திடும்
எண்ணற்ற அலுவல்கள்.
இவற்றிற்கெல்லாம்
வேண்டிய உற்சாகம்
பொங்கும் புத்துணர்ச்சியை
அள்ளித்தரும்
ஓல்ட் ஸ்பைஸ்.

ஆண்களின் அழகுக்காக
ஓல்ட் ஸ்பைஸ் அளிக்கும்
அணிவரிசை:

- ஆஃப்டர் ஷேவ் லோஷன்*
- கொலோன்*
- லாதர் ஷேவிங் க்ரீம்*
- பிரஷ்லெஸ் ஷேவிங் க்ரீம்
- பாடி டால்க்*
- ஹேர் க்ரீம்
- பிரிலியண்டைன்.

ஓல்ட் ஸ்பைஸ்
ஆண்மையின் சின்னம்

Old Spice

the mark of a man



* எலுமிச்சை மணத்திலும் கிடைக்கின்றன.

இந்தியாவெங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைகளில் கிடைக்கின்றன. தயாரிப்பவர்கள்: கோல்ஃபாக்ஸ் லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட். லிட்., மௌலீஸ்-ஷில்டன் எண்டர்ப்ரைசஸ்.

OS 2/TAM



வாத்துப் பாதை!

சாலையைக் கடக்கப் பாதசாரிப் பாதை - அது மனிதருக்கு மட்டுமல்ல, வாத்துக்களுக்கும் உண்டு ஜப்பானில்! டாமா ஆற்றில் வாழும் வாத்துக்கள் சாலையைக் கடந்து மறுபுறம் வசிப்பவரிடம் சென்று அவர்கள் அன்புடன் வழங்கும் உணவை உண்டு வருகின்றன. சாலையைக் கடக்கும்போது இவை காவை எதிர்கொள்ளாதிருக்க அட்ஸுகி நகர சபை அவற்றுக்குத் தனியே பாதசாரிப் பாதை அமைத்துத் தந்தது. சிவப்பு பச்சை விளக்குகளும் உண்டு!

— பஸிஃபிக் ஃபிரெண்ட்

பார்த்த சாரதி!

''கார் வசிகரமாக அமைந்திருப்பின் யாவருக்கும் காரின் உள்ளே அமர்ந்திருக்கும் பிரமுகரைத்தான் பார்க்க ஆவல் ஏற்படும். ஆனல் உரிமையாளரைவிட அதை ஓட்டுபவரையே, பார்த்து, சொல்லைக் கேட்டு ஏன் வணங்கவும் செய்கிறோம் என்றால் அவர்தான் அர்ச்சுனரின் ரதத்தை ஓட்டின சாரதியான கிருஷ்ண பரமாத்மா. அப்படி எல்லாரும் பார்த்த சாரதியானதால் பார்த்தசாரதியானர்; பார்த்தனுக்கு சாரதியானர். — தூப்புல் ஸ்ரீ லட்சுமி நரசிம்மன் உபந்யாசத்தில் கேட்டவர்: — அ. ஐ. ரங்கராஜன்

திருத்தக்காரர். தமது கொள்கையின்படி நடப்பதற்கு ஒரு நாளும் அஞ்சாதவர். அவருடைய அரசியல் ஞானமும் நேர்மையும் அனைவரும் ஒப்புக் கொண்டவை. ஆகவே, அப்படிப்பட்டவருக்கு எதிராக ஒரு கோஷ்டி (கிளிக்) இருப்பதைக் கண்டு எனக்கு வேதனை உண்டாயிற்று. சென்னை காங்கிரஸ் நிர்வாகத்தில் மேற்படி கோஷ்டி செல்வாக்குப் பெற்றிருக்கிறது. ஆனல் பொதுமக்கள் ராஜாஜியிடம் பக்தி கொண்டிருக்கிறார்கள்...தென்னாட்டுக் காங்கிரஸ்வாதிகள் தங்களுக்கு எது உசிதமென்று படுகிறதோ அப்படிச் செய்யட்டும். ஆனல் அவர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்யாவிடில் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு என்னுடைய கடமையைச் செலுத்தியவனாக மாட்டேன். தற்போதைய நிலைமையில், ராஜாஜியைப் போல் காங்கிரஸ் தொண்டின் பொறுப்பை வகித்து நடத்தக் கூடியவர் யாருமில்லை. அவருடைய ஊழியத்தைத் தென்னாட்டுக் காங்கிரஸ்வாதிகள் இழந்துவிடக் கூடாது. (கல்கி 17-2-46)

காந்திஜியின் இந்த அறிக்கையைக் கண்டு, ராஜாஜியை வேண்டாதார், மகாத்மாவையும் வேண்டாதவராகக் கருதி ஆத்திரம் அடைந்தார்கள். மதுரையிலும் வேறு சில ஊர்களிலும் பெரிதாகக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். இருவரையும் சேர்த்து இகழ்ந்து பேசினார்கள்.

காந்திஜியின் சொற்கள் மூலம் குறிப்பாக ''க்ளிக்' என்ற சொல்லின் மூலம் தாம் அடைந்த வருத்தத்தை ஓர் அறிக்கையில் காமராஜ் வெளியிட்டுவிட்டு, தமிழ்நாடு தேர்தல் குழுவிலிருந்து விலகிக்கொண்டார்.

அவருடைய அச்செய்கை பற்றிக் கல்கி எழுதினர்:

அந்த உலகம் போற்றும் மகானின் அபிப்பிராயங்களைச் சிரத்தையுடன் கவனித்து, அவற்றில் உண்மை இருந்தால் ஒப்புக்கொண்டு அவருடைய புத்திமதியின்படி நடக்க வேண்டும். அல்லது அந்த அபிப்பிராயங்கள் சரியல்லவென்று கருதினல், மகாத்மாவே அனுமதித்திருப்பது போல் தங்களுக்கு உசிதம் என்று தோன்றுகிற வழியில் தைரியமாக நடக்க வேண்டும். இந்த இரண்டு நேர் வழிகளைக் கடைப்பிடிக்காமல் ஸ்ரீ காமராஜ் நாடார் ஒரு குறுக்கு வழியைக் கடைப்பிடித்திருக்கிறர்.

இந்த ராஜிநாமாவில் அர்த்தம் இல்லை. அதற்கு அவசியமும் இல்லை. அதனல் அவருக்காவது தமிழ் நாட்டு காங்கிரஸ் வேலைக்காவது நன்மையும் கிடையாது என்று நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. (கல்கி 17-2-46)

காமராஜின் ஸ்தானத்தில் ருக்மிணி லட்சுமிபதி தேர்தல் குழுவின் தலைவராய்ச் செயல்பட்டார். விலகியிருந்தபடியே அக்குழுவின் நடவடிக்கைகளை இயக்கிக் கொண்டிருந்தார் காமராஜ். இறுதியாய் அக்குழு தயாரித்த வேட்பாளர் பட்டியலில், ராஜாஜி தரப்பாருக்கு மிகக் குறைவான தொகுதிகளே கிடைத்தன.

ராஜாஜிக்குப் பல்கலைக் கழகத் தொகுதி ஒதுக்கப்பட்டது. ஆனல், அவர் தாம் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்று திடீரெனத் தெரிவித்தார். ''எனக்கு விரோதமாய்த் தோன்றியுள்ள சூழலைச் சமாளிக்க இயலவில்லை'' என அறிக்கை விடுத்தார். தம் காரணமாய் மகாத்மா காந்தி நிந்தனைக்கு உள்ளானதை நினைத்து மனம் நொந்தார்.

''விதுரர் வில்லை முறித்து விட்டுப் போய்விட்டார்'' என்று ராஜாஜி விலகியது பற்றிக் கல்கி குறிப்பிட்டார்.

மார்ச்சு மாதம் மூன்றும் வாரத்தில் நடந்த தேர்தலில், காங்கிரஸ் கட்சி

மகத்தான வெற்றி அடைந்தது: தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்றுக்கும் அப்போது பொதுவாய் இருந்த சென்னை சட்ட சபைகள் இரண்டிலும் காங்கிரஸ்காரர்கள் வெகுவாக பெரும்பான்மை பலம் கொண்டார்கள்.

தலைவர் ஒருவரை, அதாவது பிரதம மந்திரியாய் வருவதற்கு உரியவரை, அவர்கள் தேர்ந்தெடுக்கும் கட்டம் வந்தது. அந்தப் பதவிக்கு ராஜாஜியையே தேர்ந்தெடுக்கும்படி மகாத்மா காந்தியும், ராஷ்டிரபதி ஆஸாதும், மத்திய பார்லிமெண்டரிக் குழுவின் தலைவர் வல்லபாய் பட்டேலும் ஆலோசனை கூறினார்கள். அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் அந்த ஆலோசனையை ஆமோதித்தது.

ஏப்ரல் 18ந் தேதியன்று நடந்த சென்னை சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியின் கூட்டத்தில் அந்த ஆலோசனை மீது வாக்கெடுத்ததில் அதற்கு எதிர்ப்பாக 148 வோட்டுக்களும் ஏற்பாக 38 வோட்டுக்களும் பதிவாயின. அந்த நிராகரிப்பை அடுத்து, டி. பிரகாசமும் சி. என் முத்துரங்க முதலியாரும் தலைமைப் பதவிக்குப் போட்டி யிட்டதில், முன்னவர் வெற்றி பெற்றார். (பின்னர் அவரே பிரதம மந்திரியானார்.)

ராஜாஜியைத் தேர்ந்தெடுக்காதது குறித்துக் கோபமும், கேலியும் வருத்தமும் கலந்த தலையங்கம் ஒன்றை, ''சபாஷ்! புண்ணியவான்களே!'' என்ற தலைப்புடன் அம்மாத 28ம் தேதிய இதழில் கல்கி எழுதினார். அதே இதழில் ராஜாஜியின் தலைமைக்கு ஆதரவாய் வாக்களித்த அந்த மூப்பத்தெட்டு உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றைப் பொன்னிறத் தாளில் வெளியிட்டார். அவர்களுடைய பெயர்களைப் ''பொன்னெழுத்தில் பொறிக்கத் தற்சமயம் வசதி இன்மையால் பொன் வர்ணத்தில் அச்சிடுகிறோம்'' என்று அதன் முகவுரையில் குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டில் இப்படி யெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கையில், டெல்லியிலும், சிம்லாவிலும் பிரிட்டிஷ் மந்திரி சபை தூதுக் கோஷ்டியினர் இந்திய அரசியல் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர். அந்தப் பேச்சுக்களிலும், அவற்றின் பலனாய்ப் பின்னர் வெளியான சுதந்திரத் திட்டத்தை ஏற்பதற்கான ஆலோசனைகளிலும், காங்கிரஸ் பெருந் தலைவர்கள், ராஜாஜியின் அரசியல் அறிவாற்றலை நாடிப் பயன்படுத்திக் கொண்டார்கள். பல சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவர் உதவி புரிந்ததைப் பெருமையுடன் கல்கி குறிப்பிட்டு எழுதினார்.

ஜுலை மாதத்தில் ஜவாஹர்லால் நேரு காங்கிரஸ் ராஷ்டிரபதியானார்; ஆனவுடனேயே அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ராஜாஜியைச் சேர்த்துக் கொண்டார். காங்கிரஸின் மிக உயரிய கட்டளைக் குழுவில் தமது அருந் தலைவர் இடம் பெற்றது குறித்து, மிக்க மகிழ்ச்சி யடைந்த கல்கி ''தமிழ் நாடு உயர்ந்தது'' என்ற மகுடத்துடன் ஒரு தலையங்கம் எழுதினார்—ஜுலை 21ந் தேதிய இதழில். அந்தத் தலையங்கத்தில், முன்பு ''திருச்செங்கோடு தேர்தலை ஆட்சேபணை செய்து எழுந்த விகாரமான கிளர்ச்சியையும், அதன் விபரீத விளைவுகளையும் கிளறாமல் விடுவதே நலமாகும்'' என்றார். ஆயினும் அவற்றைச் சொல்லிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. நன்றாகச் சொல்லிக்காட்டி, தமது நெஞ்சின் வேதனையை ஓரளவு தணித்துக் கொண்டார்.

சில வாரங்களுக்குப் பிறகு, ''தமிழ் நாடு இன்னும் ஒரு படி மேலே உயர்ந்திருக்கிறது'' என்று நேருவைப் பிரதமராய்க் கொண்ட இடைக்கால தேசிய அரசாங்கத்தில் ராஜாஜி மந்திரி பதவி ஏற்றபோது கல்கி எழுதினார்: ''தமிழ் மக்களின் பெருமிதமும் குதூகலமும் பொங்கிப் பெருகி ஓடுகிறது'' என்றார். பொதுவாகத் தமிழ்மக்களின் உணர்ச்சி அப்படியெனில், அவர்களில் தனி ஒருவரின் உணர்ச்சி எப்படி இருந்திராது!

''ராஜாஜி வேண்டாம்'' என்ற கிளர்ச்சி வலுத்திருந்தபோது, ஸ்ரீரங்கத்துக் கோவில் யானை, ராஜாஜிக்கு மாலை அணிவிக்கும் காட்சி ஒன்றை, கல்கியின் புகைப்பட நிருபர் எம்.டி. கணேசன், படம் பிடித்திருந்தார். அந்தப் படத்தைக் கல்கி அப்படியே வைத்திருந்து, டெல்லி மந்திரியாய் ராஜாஜி நியமனமான தருணத்தில் வெளியிட்டார். ''ஊரெல்லாம் உன்னை வேண்டாம் என்றாலும் எனக்கு நீ வேண்டும்'' என்று ரங்கநாதப் பெருமாள் அருளியதற்கு அது அறிகுறி என்பது, அப்படத்துக்குக் கல்கி வரைந்த வர்ணனை.

இதற்கும் மேலாகத் தமது பக்திக்கு உரிய தலைவரைக் கல்கி போற்றி எழுதுவதற்கு, இன்னும் சில பெருமை வாய்ந்த தருணங்கள் வரப்போகின்றன.

(தொடரும்)



ஜப்பான் நாட்டில் காது கேட்காதவர்கள் சௌகரியத்துக்காக டெலிபோன்கள் உண்டு. இவைகளில் மறுமுனையில் பேசுபவர்களின் குரலை 18 மடங்கு சப்தமுள்ளதாக்கிக் கொள்ள வசதி செய்திருக்கிறார்கள்.

— ஜப்பான் ரிவ்யூ - பாலி

பரிசு! – அதிலும் ஒரு சலுகை!

''கல்கி கதம்பம் என்ற புத்தகத்தை இலவசமாகப் பெற கல்கி பத்திரிகைக்கு இரண்டாண்டுச் சந்தாவை மகிழ்ச்சியோடு அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் ஒரே சமயத்தில் ரூ. 76 புரட்டுவதுதான் சற்றுச் சிரமமாயிருக்கிறது'' என்று பல அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே இத்தகையவர்களுக்கு ஒரு விசேஷச் சலுகை வழங்குகிறோம்.

சந்தாத் தொகையை இரண்டாகப் பிரித்து டிசம்பர் 15ம் தேதிக்குள் ரூ. 38/-ம், ஜனவரி 15ந் தேதிக்குள் ரூ. 38-ம் அனுப்பினால் போதுமானது. இரண்டாவது தவணையாக ரூ. 38/- எங்களுக்குக் கிடைத்ததும் பரிசு நூலினை அனுப்பி வைக்கிறோம். ஒரே தவணையில் டிசம்பர் 15ந் தேதிக்குள் அனுப்புவதானாலும் தடையில்லை. பரிசு நூல் முன்னதாகவே உங்களை வந்தடையும்.

கல்கி கதம்பம் என்ற அரிய நூலைப் பற்றி:

- ★ அமரர் கல்கி அவர்களின் சிறுகதைகள், பயணக்கட்டுரை, நகைச்சுவைக் கட்டுரை, கவிதை, சினிமா விமர்சனம் போன்ற அவரது நவரச எழுத்துக்களும் இதில் மணம் வீசுகிறது.
- ★ கல்கி பத்திரிகை அளவில் 160 பக்கங்கள் ★ வண்ணப் படங்கள்
- ★ உயர்ந்த காகிதம் ★ கனமான மேலட்டை
- ★ எந்த ஒரு நூலகத்தையும் பெருமிதத்துடன் அலங்கரிக்கக்கூடிய எடுப்பான தயாரிப்பு.

சந்தாத் தொகையை மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை–600031 என்ற விலாசத்துக்கு மணியார்டர் செய்யவும். சென்னைவாசிகள் 'செக்' அனுப்பலாம்.

இச்சமயத்தில் நீங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் மற்றும் ஒரு பலனையும் அடைகிறீர்கள்.

கண்ணதாசன் எழுதும் மகோந்நத சரித்திர நவீனமாகிய **சேரமான் காதலி** கல்கி டிசம்பர் 7உ இதழில் ஆரம்பமாகிறது. இந்தத் தொடர்கதையை ஓர் இதழ்கூட விட்டுப் போகாமல் தொடர்ந்து படித்து வருகிற வசதி ஏற்படுகிறது.

அது மட்டுமா? சேரமான் காதலியோடு கல்கியில் இடம்பெறுகிற வேறு பல சுவையான சிறப்பு அம்சங்கள், சிரிப்புப் பகுதிகள், உயர்தரமான சிறுகதைகள், புதிய தொடர்கதைகள் முதலியவற்றையெல்லாமும் அடுத்த 104 இதழ்களில் படித்து மகிழலாம் அல்லவா?

இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தாங்கள் கைநழுவ விடவே மாட்டீர்கள் என நம்புகிறோம்.

நினைவிருக்கட்டும்! தேனினும் இனிய நடையில் **கண்ணதாசன்** எழுதும் **சேரமான் காதலி**; அத்துடன் இலவசமாகக் **'கல்கி கதம்பம்'** என்னும் அரிய பொக்கிஷம்!

குறிப்பு: ஏற்கனவே கல்கி சந்தாதாரராக இருப்பவரும் தங்கள் சந்தாவை மேலும் இரண்டாண்டுகளுக்குப் புதுப்பித்துக் கொண்டு இந்த அன்பளிப்பைப் பெறலாம்.

11

ரூபாவின் வாயிலிருந்தும் ராஜேஷ் என்ற சொல்லைக் கேட்டு, அநூப்புக்குக் கவலையாகி விட்டது. இவளும் ராஜேஷ் பைத்தியம் தானோ என்று! "நான் ராஜேஷ் இல்லை: அநூப்!" என்றான்.

"ஐயே! இது தெரியாதாக்கும்!"

"பின்னே யாரைச் சொல்கிறாய்? ராஜேஷ் கன்னாவைச் சொல்கிறாயா?"

"ஆமாம், கூட வருவது ஷர்மீளா போலிருக்கிறதே!" என்றாள் ரூபா.

இருவருடைய கவனமும் வருகிறவர்களை நோக்கிச் செல்லவே, இருவருமே மௌனமாகி விட்டார்கள். அவர்கள் பிரதான வாசல் வரை வந்துவிட்டனர். அவர்களோடு வந்த இரண்டு மூன்று பேர் ஜீப்பில் வைத்திருந்த சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தனர். ரூபா மூச்சைப் பிடித்துக் கொண்டு திரையுலகைக் கலக்கிக் கொண்டிருந்த அந்த இருவருடைய முகங்களையும் வைத்த கண் எடுக்காமல் பார்க்கலானாள்! லட்சக் கணக்கான இளம் உள்ளங்களை மந்திரம் போட்டாற் போல் மயக்கியவர்களாயிற்றே! அவர்களை முதல் தடவையாக இத்தனை நெருக்கத்தில் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியதைக் கை நழுவ விட அவள் விழிகளுக்கு மனம் இல்லை.

ராஜேஷ் ஹால் வாசலில் நின்று, "நீ இன்று இவ்வளவு பிடிவாதம் பிடிக்காமல் இருந்தால் அந்த 'ஷாட்' முடிந்திருக்கும்!" என்றான்.

"ஆமாம், உங்கள் அந்த 'ஷாட்' முடிகிறதற்குள்ளே நானும் உறைந்து பனிக்கட்டியாகியிருந்திருப்பேன்! உங்கள் ஆசையைக் கெடுத்து விட்டேன் இல்லையா?"

"சட்! இதென்ன அசட்டுப் பேச்சு! அந்த ஒரு 'ஷாட்'டுக்காக என்னுடைய ஒரு நாள் வீணாகப் போகிறது என்று சொல்ல வந்தேன்!"

"உங்கள் ஒரு நாளைக் காப்பாற்றப் போய் என் வாழ்நாள் முழுவதற்குமே மங்களம்பாடச் சொல்கிறீர்களா?"



ராஜேஷ் சிரித்துக் கொண்டே அழைப்பு மணியை அழுத்தினான். அப்பொழுது அவன் பார்வை வராந்தாவில் அமர்ந்திருந்த அநூப்-ரூபாவின் மீது விழுந்தது. அதைக் கண்டு அவ்விருவருடைய இமைகளுமே தாழ்ந்தன.

''யார் நீங்கள்?'' என்று தன் இடத்தில் நின்ற வண்ணமே கேட்டான் ராஜேஷ்.

''பயணிகள்!'' அநூப் அடக்கமான குரலில் பதில் அளித்தான்.

''இங்கே வெளியே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?''

''எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.''

''யாரை?''

''புயல் அடங்குவதை!''

''இங்கே இப்படி உட்கார்ந்திருந்தீர்களானால் நீங்கள் குளிரில் விறைத்து விடுவீர்கள்!'' ஷர்மிளா பரிவோடு கூறினாள்: ''உள்ளே வந்து உட்காருவதற்கு என்ன?''

''அப்படித்தான் நாங்களும் நினைத்தோம், ஆனால் காவலாளி எங்களை உள்ளே விட மறுத்து விட்டான்!''

அதே சமயம் உள்ளிருந்து தாழ்ப்பாள் திறக்கும் சத்தம் கேட்டது. அடுத்த கணம் கதவு திறந்து கொண்டது. காவலாளி அவர்களெதிரே கைகட்டி நின்றான்.

''செளகிதார்! இவர்களை உள்ளே விட மறுத்தாயாமே!'' குரலில் கடுமை தொனிக்கக் கேட்டான் ராஜேஷ்.

''இவர்களிடம் அநுமதிச்சீட்டு இல்லீங்க.''

''ஆனால் உனக்கு மூளை இருக்கிறதல்லவா? இந்தக் குளிரில் இவர்களுக்கு ஏதாவது இசைகேடாக நிகழ்ந்து விட்டால்...?'' என்று கேட்டாள் ஷர்மிளா.

''நான் என்ன செய்வேனுங்க? உத்தரவை மீறலாமுங்களா?''

''உத்தரவை நீ எத்தனையோ தடவை மீறியிருக்கிறாய் — எங்களுக்காக!'' ராஜேஷ் அவனைச் சுட்டெரிப்பது போலப் பார்த்தான்.

''எசமான்! வந்து விஷயம் என்னன்னா...''

''உன் சமாதானங்கள் எனக்குத் தேவையில்லை!'' ராஜேஷ் தோளைக் குலுக்கிக்கொண்டான்: ''உத்தரவு, சட்ட திட்டம் எல்லாம் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக நமக்கு நாமே போட்டுக் கொள்வது. சிக்கலாக்குவதற்காக அல்ல. புரிந்ததா?''

அப்புறம் அநூப்பையும் ரூபாவையும் உள்ளே வருமாறு கைச்சாடை காட்டி அழைத்தான்.

''தாங்க் யூ!'' அநூப் மெதுவான குரலில் நன்றி தெரிவித்துவிட்டு ரூபாவுடன் அவர்கள் பின்னாலேயே உள்ளே நுழைந்தான்.

குலை நடுக்கும் குளிரைப் போக்கிக் கொள்வதற்காக எல்லோரும் கணப்புக்கருகில் அமர்ந்தனர்.

''நீங்கள் உங்களை இதுவரை யாரென்று அறிமுகம் செய்து கொள்ளவில்லையே!'' சிறிது நேரம் கழித்து ராஜேஷ் கேட்டான்.

''ஓ, ஐ ஆம் ஸாரி!'' அநூப் சட்டென்று கூறினான்: ''மை ஒய்ஃப்யான்ஸி ரூபா!''

அவன் ரூபாவைச் சுட்டிக் காட்டியபோது அவள் வெட்கத்தால் தலை குனிந்தாள். அவள் உள்ளூற நாண நகை புரிந்தபோது அவளது கன்னக் கிண்ணங்களில் வழிய வழியப் பன்னீரை நிரப்பினாற் போலிருந்தது.

''நீங்கள்...?'' ராஜேஷ் எல்லோருடைய பார்வையையும் நாணிக் கண் புதைக்கும்



ரூபாவிடமிருந்து அகற்றுவதற்காக அநூப் பைப் பார்த்துக் கூறினான்: ''யூ ஆர் டாம் லக்கி!''

இதைக் கேட்டு ரூபா இன்னும் குறுகிப் போனாள்.

''என் பெயர் அநூப்!'' என்றான் அநூப்.

காவலாளி உணவு தயார் என்று அறிவிக்கவே ரூபாவுக்கு உயிர் வந்தாற் போலிருந்தது. இருவரையும் விருந்துக்கு அழைத்தான் ராஜேஷ்.

ரூபா ராஜேஷுக்குப் பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள். அநூப் அவளைக் கடுமையாக நோக்கினான். என்றாலும் அவன் ஷர்மிலாவுக்குப் பக்கத்து நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான். ஷர்மிலாவுக்கு என்ன தோன்றியதோ, தன் நாற்காலியிலிருந்து எழுந்து போய் ரூபாவுடன் உட்கார்ந்து கொண்டாள். ''அங்கே கணப்பிலே உடம்பு எரிந்தது!'' என்று கூறிக் குறும்பு நகையை உதிர்த்தாள்.

ரூபா அநூப்பைப் பொருள் பொதியப் பார்த்து மென்னகை புரிந்தாள். அநூப் மனத்துள் அஷ்ட கோணலாக வளைந்து கூனிக் குறுகிப் போனான்.

''நீங்கள்படங்கள் பார்ப்பதுண்டல்லவா?'' என்று ரூபாவிடம் கேட்டான் ராஜேஷ்.

''உண்டு; எப்பொழுதாவது.''

''அப்படியானால் நாங்கள் இருவரும் நடித்ததைதாவது படம் பார்த்திருப்பீர்களே!''

''பார்த்திருக்கிறேன், 'ஆராதனா' பார்த்திருக்கிறேன்.''

''எப்படி இருந்தது?''

''நன்றாயிருந்தது.''

''எங்கள் நடிப்பு?''

''வெகு அழகு!''

''அது சரி! அந்தப் படத்திலே 'ஹைலைட்' எது; சொல்லுங்கள்!''

ராஜேஷின் இந்தக் கேள்வி ரூபாவைத் திகைக்க வைத்தது. தனக்குப் பரீட்சை வைப்பதாக அவள் எண்ணினாள். அதற்கு உகந்த பதிலை யோசித்தாள். மேஜையின் நாற்புறமும் உட்கார்ந்திருந்த எல்லோருடைய பார்வையும் அவள் மீதே பதிந்திருந்தது.

''நீங்கள் ஒன்றும் சொல்லக் காணோமே!'' ராஜேஷ் முடுக்கினான்.

''இசையும், உங்கள் அற்புத நடிப்பும்!''

ராஜேஷ் ரொட்டித் துண்டத்தில் வெண்ணெய் தடவிக் கொண்டிருந்த ஷர்மிலாவை நோக்கினான். 'ரூபாவின் பதிலில் அவள் பெயரைக் காணோமே! அதனால் ஒருவேளை அவள் தவறாக எடுத்துக் கொண்டிருப்பாளோ?' என்று எண்ணினான்.

''சார்! இந்தப் பெண்களைச் சொல்லிப் பயன் இல்லை. உங்கள் பெயரைப் பார்த்தாலே போதும், பாகாக உருகிப் போகிறார்கள்!'' என்றான் அநூப் குத்தலாக.

அவனுக்கு ரூபாவின் மேல் கோபம் கோபமாக வந்தது. அவனுக்காக அவன் உயிரை விட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு திரைப்பட நடிகனோடு இப்படி ஒட்டி உறவாடுவதா என்று!

''அப்படியானால் உங்களுக்கு இவர் நடிப்பு பிடித்திருக்கும்!'' ராஜேஷ் அந்தப் புதிய காதலனின் மனப் போக்கைப் புரிந்து கொண்டு மடக்கினான்.

''நான் படமே பார்க்கவில்லை.'' அநூப் முதலில் ஷர்மிலாவையும் பிறகு ராஜேஷையும் பார்த்தான்.

''நீங்கள் படம் பார்ப்பதில்லையா?''

''பார்ப்பதுண்டு. ஆனால் ஹிந்திப் படங்களைப் பார்ப்பதில்லை.''

''அப்படியா? ஆங்கிலப் படங்கள்தான் பார்ப்பீர்கள் போலும்!''

''ஆமாம். ஹிந்திப் படத்தில் என்ன இருக்கிறது? ஏதாவது புதிய கையாளப்படாத விஷயம் உண்டா! அதே அரைத்த மாவையே அரைத்த கதை; செயற்கையான பிளாட், இயல்புக்கு ஒவ்வாத பாத்திரங்கள்— எதுவுமே நம்ப முடியாதவை. பையனும் பெண்ணும் ஒரு ஹில் ஸ்டேஷனில் சந்திப்பார்கள், ஒரு சின்னச் சண்டை, மோதல், அப்புறம் காதல், ஓடியாடிப் பிடிக்க வேண்டியது, பாடி முடிக்க வேண்டியது...''

அநூப்பின் பேச்சைக் கேட்ட ரூபாவுக்குப் பயமாகிப் போய்விட்டது. எங்கேயாவது இவர்கள் தவறாக எடுத்துக் கொண்டுவிட்டால் என்ன செய்வது என்று! ஆனால் ராஜேஷின் முகத்தில் அப்படி ஓர் உணர்ச்சியே தென்படவில்லை.

அநூப் தன் கருத்தைக் கூறி முடித்ததும் ராஜேஷ் வெகுஅமெரிக்கையாகச் சொன்னான்: ''உங்கள் காதல் கூட ஏறக்குறைய இத்தகையதாகத்தானே தோன்றுகிறது!''

''ஆமாம்!...'' அநூப் துணுக்குற்றான். அதற்குமேல் பேச்சை ஓட்டாமல் கத்திரித்துக் கொண்டான்.

வற்றாத ஊற்றெனச் சிரிப்பு வெடித்துச் சூழலைக் கிளுகிளுக்க வைத்தது.

எல்லோரும் உணவு அருந்தி எழுந்தபோது மணி ஒன்பதுதான். இருந்தாலும் நள்ளிரவு கழிந்து விட்டாற்போலத் தோன்றியது. எல்லோரும் போன பின் அநூப்பும் ரூபாவும் மட்டும் அமர்ந்து சூடான காப்பி குடித்துக் கொண்டிருந்தனர்.

வெளியே புயல் பயங்கர உருவமெடுத்திருந்தது.

''ஏன் ரூபா, கோபமா?'' என்று காப்பி பருகுவதை நிறுத்திவிட்டு அநூப் ரூபாவைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமாம். பேசுவதை யோசித்துப் பேச வேண்டாமா?'' என்று அவனைப் பார்க்காமலே சொன்னாள் ரூபா.

''ஒரே சந்திப்பில் நீ உருகிப் போய்விட்டாயோ என்று தோன்றுகிறது. நான் கசக்க ஆரம்பித்து விட்டேன். இல்லை?'' என்றான் அநூப்.

''நீங்கள் மட்டும் என்ன? ஷர்மிலாவின் பக்கத்திலே போய் உட்காரவில்லையாக்கும்!''

ஏழு எழுத்துக்கள் கொண்ட ஓர் ஆங்கில வார்த்தை. முதல் இரண்டு எழுத்துக்கள் ஆணைக் குறிக்கும். முதல் மூன்று எழுத்துக்கள் பெண்ணைக் குறிக்கும். முதல் நான்கு எழுத்துக்கள் ஆணைக் குறிக்கும். ஏழு எழுத்துக்களும் சேர்ந்த வார்த்தையோ ஒரு பெண்ணைக் குறிக்கும். அது என்ன வார்த்தை?

— எம். சிவசுப்பிரமணியன்.

விடை: HEROINE

''உன்னைப் பார்த்துவிட்டுத்தானே நான் போய் உட்கார்ந்து கொண்டேன். நீ நீட்டும் ஹீரோவிடம்போய் உட்காரவில்லையென்றால், நான் எதற்கு இப்படி யெல்லாம் செய்யப் போகிறேனாம்?''

''நீங்கள் சொல்கிறதைப் பார்த்தால், தெரிந்து கொண்டே வேண்டுமென்று அப்படிப் பேசினீர்கள் என்றாகிறது!''

''ஆமாம்!''

''ஹௌ மீன்!'' என்று கூறி ரூபா எழுந்து நடக்கலானாள். அநூப் சட்டென்று தாவி அவளைத் தடுத்து, ''ரூபா!'' என்று தழு தழுத்தான்.

''போங்கள்! நான் உங்களோடு பேசப் போவதில்லை.''

''சற்றுக் கோபத்தை மறந்து யோசித்துப் பாரேன்!''

அப்பொழுது தொலைவில் மலைப் பகுதியில் இடி இடித்தது. பயணிகள் பங்களாவின் விளக்குப் போய்விட்டது. அந்த இருட்டில் ரூபா அநூப்பைப் பார்க்க முயன்றாள். அடுத்த கணம் கீச்சிட்டுக் கொண்டு அவன் மார்பில் முகம் புதைத்தாள். அப்புறம்...? இரண்டு இளம் உள்ளங்களின் துடிப்புக்கள் ஒன்றாயின.

மறுநாள் ஹாஸ்டலுக்குத் திரும்புவதற்கு முன்னால், ரூபா தன் தாயாரையும் பார்த்து விட்டுச் செல்வது என்று முடிவு செய்தாள்.

உண்மையில் அவள் வீட்டுக்குப் போகும் சாக்கில்தான் முதல் நாள் ஹாஸ்டலிலிருந்தே புறப்பட்டிருந்தாள். எதிர்பாராத விதமாகப் புயலில் மாட்டிக் கொண்டாள். அது அவள் வாழ்க்கையில் புதிய, வித்தை மிகு மயிர்க் கூச்செடுக்கும் அநுபவமாக உருவெடுத்தது. கருகிக் காயவிருந்த நம்பிக்கை மொட்டு அன்பின் இலேசான நைப்பில் மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கியது. தென்றலின் ஓர் இலேசான அலையே தனது வறண்ட வாழ்க்கையில் வசந்தத்தை வருவித்து விட்டாற் போல் அவள் உணர்ந்தாள். அவளது இருண்டு கிடந்த மனத்திலும் மூளையிலும் மூலை முடுக்குகளிலெல்லாம் சின்னஞ் சிறு நட்சத்திரங்கள் கண் சிமிட்டத் தொடங்கின.

இந்தச் சிந்தனைகளில் தன்னை மறந்தவளாய், அவள் தன் வீட்டுக்குப் போகும்குறுகிய சந்தில் இறங்கி நடந்தாள். அவள் அநூப்புக்கு மால் ரோடின் மற்றொரு மூலையிலேயே விடை கொடுத்து அனுப்பி விட்டாள்; அவளது ஏழைமையின் அப்பட்டமான காட்சியை அவன் கண்டுவிடக் கூடாது. அவனது கற்பனை மாளிகை ஆட்டம் கண்டுவிடக்கூடாது என்பதற்காக! சொல்லப் போனால் அநூப் ரூபாவின் தாயாரைப் பார்த்துப் போகத்தான் விரும்பினான். ஆனால் ரூபாதான் அதைத் தவிர்த்து விட்டாள். அவளே தன் தாயாரைச் சந்திக்க விரும்பியதற்குக் காரணம், தாயாரிடம் தன் நெஞ்சத்தைத் திறந்து காட்டிவிட வேண்டும் என்பதுதான். தாயாரைத் தவிர அவளுக்கு வேறு யார் இருந்தார்கள்? தன் உள்ளத்தை



சிங்கக் குளியல்!

சிலைகளுக்கு மாலை போடுவது மிக்க சகஜம். ஆனால் விழா முடிந்து மறுநாள் அந்த மாலையைக் கழற்றி எறிய யாரும் முன்வர மாட்டார்கள். அது பாட்டுக்குக் காய்ந்து கருகி நாட்கணக்கில் தொங்கிக் கொண்டிருக்கும்.

படத்தில் ஜப்பானிய இளைஞர்கள் தாமாகவே முன்வந்து சிங்கச் சிலையைக் குளிப்பாட்டுவதைக் காணலாம். கார், தொழிலகங்களின் புகையால் கரி படிந்து போன சிலையைச் சோப்புப் போட்டுக் கழுவுகிறார்கள். — பஸிஃபிக் ஃபிரெண்ட்

விண்டு வைக்க? தாயார் பிரின்னை ஏற்றுக் கொண்டு விடுவாள் என்று அவள் முழுமையாக நம்பினாள்.

அவள் வீட்டு வாசற்படி ஏறியதுமே துணுக்குற்று நின்றாள். கதவோரம் நின்று கொண்டு ஜான் அழுக்கேறிய ரூபாய் நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருந்தான். அழுக்கேறிக் கசமாகிவிட்ட கிழிந்த உடை, கருநரை ஓடிய தாடி, பரட்டைத் தலை, குடி வெறியில் தீத்துண்டமெனச் சிவந்த கண்கள். அவன் பார்ப்பதற்குப் படுபயங்கரமாகத் தோன்றினான். அவனைக் கண்ட மாத்திரத்திலேயே ரூபாவின் மனத்தில் வெறுப்புணர்ச்சி கிளர்ந்து எழுந்தது. அவள் மூக்கைச் சிணுங்கிக்கொண்டு அவனைப் பாராதவள் போல் உள்ளே போகலானாள். ஜான் அவளைப் பார்த்ததும் நோட்டுக்களைக் கையில் இடுக்கிக் கொண்டே, அவளை நெருங்கி, அவள் கன்னத்தை நிமிண்டினான். கறை படிந்த பற்களைக் காட்டிச் சிரித்தவாறே ''உன் அம்மா உனக்குப் பார்த்துப் பொறுக்கித்தான் பெயர் வைத்திருக்கிறாள்! ரூபா!— ஆகா! என்ன அழகான பெயர்!'' என்றான்.

(தொடரும்)

மாலதி எனக்காக என்ன செய்துவிட்டாள்?

ரமணியின் கவனத்தைக் கண்ணி வைத்தது போல் ஆக்ரமித்துக் கொண்டு விட்டாள், அந்தப் பெண்.

அந்நியம்தான்.

என்றாலும் அழகு அவளிடம் பூத்துக் குலுங்கியது. பெண் எழிலை மிகைப்படுத்தும் வக்கணை அறிந்து சேலை அணிந்திருந்தாள், அவள். பஸ்ஸில் அமர்ந்திருந்த பல பேர்கள் நடுவில் ரமணி மீண்டும் மீண்டும் அவளைப் பார்த்தான் என்றால், அதன் காரணம் இவை இரண்டும்தான். 'இத்தனை லட்சணம் பொருந்திய பெண்கூட உலகத்தில் இருக்கிறாளா?' என்று அதிசயித்தான் அவன். அந்த அதிசயத்தின் ஊடே அழுது வடியும் முகம் ஒன்று அவன் மனத் திரையில் பிரசன்னமாயிற்று.

வேறு யாருமில்லை.

அவனது மனைவி மாலதிதான் அது.

'சை... பெண்ணா, அவள்! இந்த ரதியின் கால் தூசுகூடப் பெற மாட்டாளே, மாலதி!' என்று முகம் சுளித்தான் ரமணி.

இன்று அல்ல. எப்போதுமே அவன் இப்படித்தான். அந்நியப் பெண்களைத் தன் மனைவியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும், அந்த வயிற்றெரிச்சலில் தன்னைத் தானே நொந்து கொள்வதும் அவனுக்கு வழக்கமாகிவிட்ட ஒரு பழக்கம். ஆனால் இன்று அளவுக்கு மீறிய எரிச்சலும், அதிருப்தி கலந்த வேதனையும் அடைந்தான் ரமணி.

''ஏன், என்னவோபோல் இருக்கிறீர்கள்?''

வீடு திரும்பிய கணவனிடம் அன்பொழுகக் கேட்டாள், மாலதி.

''எல்லாம் என் தலையெழுத்து!'' வெடித்தான் அவன்.

மாலதி திகைத்தாள். ''உங்கள் தலை எழுத்தை நொந்துகொள்ளும்படி இப்போது என்ன நடந்து விட்டது?''

''இங்கு பார், மாலதி! ஏற்கெனவே நான் நொந்து போயிருக்கிறேன். நீ வேறு தீயைக் கொளுத்தாதே!'' சீண்டப்பட்ட சிங்கமாக கர்ஜித்தான் ரமணி. அதற்கு மேல் அங்கு நின்று கொண்டிருக்க மாலதிக்குப் பைத்தியமா, என்ன? இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டாள், அவள்.

அதன் பிறகு அந்த நான்கு சுவர்களுக்குள் நடந்த காரியங்கள் அத்தனையும் ஊமைப் படமாகத் தொடர்ந்தன.

வெளியில் போய்விட்டு வந்தால், 'விஜய் படித்தானா... சாப்பிட்டானா...' என்று தன் பிள்ளையைப் பற்றிச் செல்லமாக விசாரிப்பான், ரமணி. அதைக்கூட இப்போது மறந்து, ஆறு வயதில் தனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்ற ஞாபகமே இல்லாமல் படுக்கையில் சுருண்டுகொண்டான் அவன்.

விடிந்த நாள் வெள்ளிக் கிழமை.

இரண்டாம் சனிக்கிழமை ரமணிக்கு விடுமுறை ஆதலால், முதல் நாள் வெள்ளிக் கிழமை மாலைக் காட்சிக்கு குடும்பத்தோடு அவன் சினிமாவுக்குப் போவான்.

ஆகவே, அலுவலகம் புறப்பட்டுக்கொண்டிருந்த ரமணியிடம், ''என்னங்க! நாளைக்கு உங்களுக்கு இரண்டாம் சனிக்கிழமையாச்சே, இன்று சினிமாவுக்குப் போகலாம் இல்லையா?'' என்று ஞாபகப்படுத்தினாள், மாலதி.

'ஆமாம்... உன் முகரக்கட்டைக்கு அது ஒண்ணுதான் குறைச்சல்' என்று குமுறி எழுந்தன வார்த்தைகள். ரமணி அடக்கிக் கொண்டான். கேட்ட கேள்வி, கேள்வியாகவே நின்றது. டிபனை வாங்கிக்கொண்டு முடுக்கிவிட்ட இயந்திரமாக நடையைக் கட்டினான், ரமணி.

அலுவலகம்.

துயரங்கள், தொல்லைகள், இல்லாமை, பொல்லாப்பு — எல்லாவற்றுக்கும் ஒரு தாற்காலிக ரஜா கொடுத்துவிட்டு, 'சிவனே' என்று வேலை பார்க்கச் சிறப்பான இடம் ஒன்று இருக்குமானால், அது இந்த காரியாலயம்தான்.

ஆனால் ரமணிக்கு அங்கேயும் சோதனை காத்திருந்தது. கால தேவதைக்கு ரமணி ஒருவனைச் சுற்றித்தான் கவனமா, என்ன? அவன் மன அமைதியை விடாமல் துரத்தியடிக்கிறதே!

பாலு ரமணியின் சக ஊழியன். அவன் எப்போதும் வெண்ணிற ஆடைகளைத்தான் அணிவான். இருந்தும் இன்றைக்கு அவனிடம் ஏதோ ஒரு புதுமையைக் கண்டவன் போல் ஆச்சரியத்துடன் கேட்டான் ரமணி.

''பாலு, உன் சட்டை ஸ்நோ ஒயிட்டாக இருக்கிறதே, எந்தக் கடையில் சலவை செய்தாய்?''

''நான் கடையில் சலவைக்குப் போடுவதில்லை.''

''உன் சொந்தச் சலவையாக்கும்?''

''அதுவும் இல்லை.'' அவன் சிரித்தான். ''என் மனைவியின் கைவண்ணம்.'' பாலுவின் நெஞ்சு நிமிர்ந்து புடைத்தது. கம்பீரமும், பெருமிதம் கலந்த மகிழ்ச்சியும் அவன் முகத்தில் ஆனந்த தாண்டவம் ஆடின.

ஆனால் ரமணி?

குண்டடிபட்ட பறவையாகத் தலை தொங்கிப் போனான், அவன். 'வீட்டுக்குள்ளே கட்டிக்கொள்ளும் நாலு முழ வேட்டியைக் கூட மாலதி உருப்படியாய்த் துவைத்துத் தர மாட்டாளே! பாலுவுக்குத் தன் மனைவியைப் பற்றி வெளியில் பெருமை பேச முடிகிறது. ஆனால் எனக்கு?....' குமுறி அழவேண்டும் போல் இருந்தது, ரமணிக்கு.

தமிழினியன்

சாப்பாட்டுக்கான மதிய இடைவேளை.

டிஃபன் ஷெட்டில் இருந்த டைம் கீப்பர் வேணு கத்தினான்:

"ரமணி, நீ வரும்போது என்னுடைய டிஃபன் பையையும் தயவுபண்ணி எடுத்து வந்துவிடேன்."

ரமணி எடுத்து வரும்போது யதேச்சையாய்ப் பையினுள் கவனித்தான். பழைய கவர் ஒன்று இருந்தது.

"வேணு, இதென்ன கவர்?"

"அது சாதாரணக் கவர் இல்லை. அதிலே ஒரு ரூபாய் நோட்டும், இன்றைக்கு வாங்க வேண்டிய கறிகாய் லிஸ்டும் இருக்கிறது. வேலை முடிந்து போகும் வழியில் கறி காய் வாங்கும் வேலையையும் முடித்துக்கொள்வேன். என் அலைச்சலை மிச்சப்படுத்த என் ஒய்ஃப் இப்படி ஓர் ஏற்பாடு செய்திருக்கிறாள். ஹி....ஹி...." வேணு சிரித்தான்.



அந்தச் சிரிப்பு ரமணியைச் சித்ரவதை செய்தது. வேணுவைப் போல் ரமணி சிரிக்க முடியவில்லையே! ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு துணைவி வாய்க்கிறாள். ஏதேனும் ஒரு வகையில் அவள் சிறந்து விளங்கவும் செய்கிறாள். ஆனால் ரமணிக்கு வாய்த்தவள்? எந்தக் கோணத்தில் நின்று நோக்கினாலும் முழுமை பெறாத ஒரு களிமண் உருண்டையாகவன்றோ இருக்கிறாள்!

தலையில் அறைந்து தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள முயன்றான், ரமணி. ஆனால் அடிக்க அடிக்கக் கிளம்பும் பந்து போல் அது மேன்மேலும் பொங்கிப் பெருகியதே தவிர குறையவில்லை.

வீடு திரும்பினான்.

கோபாவேசம் அவன் இதயம் முழுதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

பூட்சைக் கழற்றி ஒரு பக்கம் எறிந்தான். காலுறையை உருவி இன்னொரு பக்கம் விட்டெறிந்தான்.

குழந்தை விஜயனுக்கு அப்பாவின் செய்கை விசித்திரமாகத் தோன்றியது. ஓடோடி வந்தான் அவன். "அப்பா! நீங்கள் அசடு. இப்படித்தான் பூட்சைக் கழற்றிப் போடுவார்களா?" என்று சிரித்துக் கொண்டே தலை கீழாகக் கிடந்த காலணிகளைச் சரியாக எடுத்து வைத்தான்.

சமையல் உள்ளிருந்து வெளியில் வந்தாள் மாலதி.

"என்னங்க..."

"ம்...ம்..." மனிதக் குரலா, கரடியின் உறுமலா?

"விஜய் ஏதாவது சொன்னானா?"

"சொல்ல என்ன இருக்கிறது?"

"இந்தக் குவார்ட்டர்லி டெஸ்டிலேயும் நம் விஜய்தான் பஸ்ட் ராங்க். குழந்தையைக் கன்கிராஜுலேட் பண்ணி, நம் இருவருக்கும்

பாராட்டுக் கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கிறாங்க, கிளாஸ் டீச்சர்.''

''இஸ்... இட்...''

''பின்னே, பொய்யா சொல்வேன்!'' ஓடிச் சென்று அக்கடிதத்தைக் கொண்டு வந்து காட்டினாள், மாலதி.

அதைக் கண்டதும், பொங்கித் திரண்ட சோப்பு நுரை விநாடிக்கு விநாடி குமிழ் உடைந்து அடங்குவது போல், ரமணியின் கோபாவேசம் மெல்ல மெல்லத் தணிந்து ஆறுதல் அடைந்தது.

மாலதியும் பெருமை பேசத்தக்க ஒரு காரியத்தைச் செய்யத்தான் செய்திருக்கிறாள். எழுபது குழந்தைகளுக்கு மத்தியில் கடந்த மூன்று தேர்வுகளிலும் தொடர்ந்து முதலாய் வரக்கூடிய புத்திசாலிக் குழந்தைக்கு ரமணியைத் தந்தையாக்கியது யார்? மாலதி தானே?


அடுத்த பத்தாவது நிமிஷம்.

சைக்கிள் ரிக்ஷா ஒன்று தியேட்டரை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதில் ரமணி, மாலதி, விஜயன் மூவரும் இருந்தனர்.

''மாலு... விளிம்பில் உட்கார்ந்து அவஸ்தைப்படாதே. நன்றாய் உட்கார்ந்துகொள்'' என்று அவள் தோள்களைப் பற்றி உள்வாட்டத்தில் இழுத்து உட்கார வைத்தான் ரமணி. இப்போது அவள் தன் அருகில் இருப்பதே ஒரு பெரும் பாக்கியமாகத் தோன்றியது அவனுக்கு.



உலக ஹிந்து கலாசாரத் தத்துவக் கூட்டம்



(ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் முன்னிலையில்)

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கலாசாரம் உண்டு. அவற்றுள் பாரத தேசத்தின் கலாசாரம் மிகவும் பழைமையானது.

இந்தப் பாரதீய கலாசாரம், தத்துவம் உலகெங்கும் ஒரு காலத்தில் வியாபகமாக இருந்தது. அதற்குச் சான்றுகள் அநேக நாடுகளில் இருந்தும் கிடைத்திருக்கின்றன. பாரதீய கலாசாரம், தத்துவம் ஆகியவற்றில் வெளி நாட்டு விஞ்ஞானிகளும் அறிவாளிகளும்கூட அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். பாரத தேசத்தைச் சேர்ந்த பலர் உத்தியோகம், வியாபாரம், படிப்பு காரணமாக இன்றும் வெளி நாடுகளில் குடியேறியுள்ளனர். அவர்களுக்கு நம் கலாசாரம், தத்துவம் ஆகியவற்றில் விசுவாசம் குறையாமல் இருப்பதற்கும், பிற நாட்டவர் நம் பெருமையை உணர்வதற்கும் நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக உலக ஹிந்து கலாசாரத் தத்துவங்கள் பற்றி ஒரு கூட்டம் சென்னையில் நடத்த ஏற்பாடு ஆகியிருக்கிறது. 1976 மார்ச் மாதம் முதல் வாரத்தில் சென்னையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் நடத்துவதற்கான ஏற்பாடு நடந்து வருகிறது.

இது ஒரு பொதுக்கூட்டம் அல்ல. தனிமையில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளும் கூட்டமே. குறைந்தது ஒவ்வொரு தேசத்திலிருந்தும் 4 பிரதிநிதிகளாவது இருக்க வேண்டும் என்றும், எந்த வகுப்பினராயினும் ஹிந்துக்களாக இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தங்கள் தேசத்தில் ஹிந்து மத கலாசாரத்தையும் தத்துவத்தையும் பரப்பும் சங்கங்கள் ஏதாவது இருக்கின்றனவா, எத்தனை இருக்கின்றன, எவ்விதம் செயல்படுகின்றன என்பது போன்ற விவரங்களைச் சேகரித்து அனுப்புவதோடு இந்தக் கூட்டத்துக்கு வந்தவர்கள் திரும்பிச் சென்ற பிறகு தொடர்ந்து ஏதாவது பணிகள் செய்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்னும் விஷயங்களை அறிந்து கொண்டு இந்தக் கூட்டத்துக்கு வருமாறு கோரப்படுகின்றனர்.

தங்கள் தங்கள் கருத்துக்களை ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் தெரிவிப்பதும், ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் கட்டளைகளைத் தங்கள் தேசத்துக்கு எடுத்துச் செல்வதுமே இக் கூட்டத்தின் லட்சியம்.

போக்கு வரவு செலவுகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். கூட்டத்துக்கு வந்தது முதல் போகும் வரை எல்லாருக்கும் இருக்க இடம், உணவு வசதிகள் இலவசமாக அமைப்பாளர்களால் செய்து தரப்படும்.

மேலும் தேவையான உதவிகள் ஏதாவது இருந்து தெரிவித்தால் முடிந்தவரை அமைப்பாளர்களால் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியில் ஒன்றை அணுகவும்:

T. M. P. Mahadevan, Sankar Vihar, Trustpuram, Ayyanavaram, Madras, Tamilnadu.

Manager, Sri Kanchi Kamakoti Peetam-Math. Kanchipuram. Tamilnadu.

குறிப்பு: இதைப் படிக்கும் வாசகர்கள் வெளி நாடுகளில் தங்களுக்கு உறவினர்களோ நெருங்கிய நண்பர்களோ இருந்தால் அவர்கள் முகவரியைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



குத்துச்சண்டை வீரர் முகம்மது அலியிடம் நிறைய கார்கள் உண்டு. இருந்தாலும் அவருக்கு பஸ்ஸில் பயணம் செய்ய ஆசை அதிகம். ஆகவே வீட்டில் ஒரு பஸ்ஸும் வாங்கி வைத்திருக்கிறார். உமன் – பாபு

மோகினி ஆட்டம்

அந்தா ரத்தினம், ப்ரீதா ரத்தினம் சகோதரிகள் ஏற்கனவே பரத நாட்டியக் கலையில் அபூர்வமான தேர்ச்சி பெற்றவர்கள். இவர்களது மோகினி ஆட்டம் அண்மையில், சென்னை பிரும்மகான சபையின் ஆதரவில் மியூஸிக் அகாடமி ஹாலில் நடந்தது. கேரள நாட்டின் இந்தச் சிறப்பான நடனம் சமீப காலத்தில் புத்துயிர் பெற்றிருக்கிறது. சகோதரிகள் இருவரும் நடனக் கலை நிபுணரான திருச்சூர் ராமநாதன் அவர்களிடம் மோகினி ஆட்டத்துக்கான பயிற்சியைச் செவ்வனே பெற்றுள்ளனர். கேரளத்தின் பிரசித்தி பெற்ற நடனக் கலை நிபுணரான பத்மஸ்ரீ சின்ன அம்மு அம்மாளிடம் முறைப்படி மோகினி ஆட்டத்தைப் பயின்றவர் திருச்சூர் ராமநாதன்.

வானகத்திலிருந்து இறங்கிய இரண்டு மின்னல் கொடிகள் என, சகோதரிகள் இருவரும் அருமையான ஹஸ்த அபிநயங்களும், முகபாவங்களும் தோன்ற பிரமிப்பூட்டும் விதத்தில் மோகினி ஆட்டத்தை நிகழ்த்தினர். பிரார்த்தனை சுலோகம் முடிந்து சக்ரவாகத்தில் 'சொல்லுக்கட்டு' தொடங்கிய போதே இந்நிகழ்ச்சியில் விறுவிறுப்பும் தொடங்கிக் களைகட்டி விட்டது. கேரள நாட்டு நடனத்தில் 'சொல்லுக் கட்டு' பிரதான அம்சம் வகிப்பது. – நட்டுவாங்கத்தின் அடிப்படையே அது தான். அதன் பிறகு ராக மாலிகையில் 'ஒரு சித்திரம்' – கேரளத்து மகாகவி வள்ளத்தோல் நாராயண மேனன் இயற்றிய பாடலுக்கு அபிநயம் – பெண் மனத்தை விண்டு காட்டும் வியத்தகு கவிதை அது. அந்தா அதை மிகவும் சமத்காரமாக அபிநயித்துக் காட்டினார்.

இடைவேளைக்குப் பிறகு "கங்காதர பார்வதி ப்ரச்னோத்தரம்" என்ற நிகழ்ச்சி, தலைசிறந்த ஒரு நாடகமாகவே பரிணமித்தது. அந்தா, ப்ரீதா இருவரும் முறையே கங்காதர மூர்த்தியாகவும், பார்வதியாகவும் பங்கேற்றனர். இது ஆலமுண்ட நீலகண்டப் பெருமானின் காதல் வசப்பட்ட உள்ளத்தை வேடிக்கையாக வெளிப்படுத்துவது – தனிமையில் இருக்கும் சிவபெருமான், தம் சடாமகுடத்தில் இருக்கும் கங்கா தேவியைக் கீழே கட்டவிழ்த்துவிட்டு அவளுடன் சல்லாபிக்கிறார். அந்தச் சமயம் பார்த்துத்தானா பார்வதி தேவி அங்கு வரவேண்டும்! அவ்வளவுதான்! இருவருக்கும் கடுமையான சம்வாதம், ஊடல்! கடைசியில் சக்தியும் சிவனும் இணைந்துவிடுகின்றனர்! குஞ்சன் நம்பியார் இயற்றிய இந்தப் பாடல் ராகமாலிகையில் ஒலிக்கிறது. சகோதரிகள் இந்தச் சுவையான பாடலுக்குச் சுவாரஸ்யமாக அபிநயம் பிடித்துச் சபையோரை ஆனந்த பரவசத்துக்குள்ளாக்கிப் பதிலுக்கு அவர்களிடமிருந்து பலத்த கையொலியைப் பரிசாகப் பெற்றனர்.

"பந்தாட்டம்" கடைசி நிகழ்ச்சி. விறுவிறுப்பாக இருந்தது.

சகோதரிகள் இருவரும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு முன்பும் அழகான ஆங்கிலத்தில் விளக்கம் தந்தது இனிமையாகவும் இருந்தது. உபயோகமாகவும் இருந்தது.

கேரள பாணியில் நடன அரங்கத்தை நிர்மாணித்திருந்தது. மோகினி ஆட்டத்துக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருந்தது.

– காந்தன்





பாலாஜி

ஜம்பம் ஒரு கலை

ஒரு சில கார்ட்டூனிஸ்டுகள் போடும் படங்களைப் பார்க்கும்போது, 'நாமும் இப்படிச் சுலபமாகப் படம் போடலாம்' என்றுதோன்றும். அந்தப் படங்களைப் பார்த்து ஓரளவு போடக் கூட முடியும். ஆனால் நாமே சொந்தமாக ஒரு படம் போட ஆரம்பித்தால்தான் அது எத்தனை கஷ்டமான காரியம் என்பது தெரியும்.

இந்த மாதிரி பார்க்க, அல்லது கேட்க எளிதாக இருப்பது ஜம்பம். ஆனால் நாமே ஜம்பம் அடித்துக் கொள்ள வேண்டுமானால் அதுவும் நாசுக்குடன், ஒரு சாமர்த்தியத்துடன், ஜம்பம் அடித்துக் கொள்ளவேண்டுமென்றால், அது ஒரு கலை என்பதை உணர்வோம்.

சிறந்த முறையில் ஜம்பம் அடித்துக்கொள்வது என்பதன் இலக்கணம் என்ன?

சொல்ல வேண்டியவைகளை, சொந்தப் பெருமைகளைப் பறைசாற்றிக் கொள்ள வேண்டும்; ஆனால் ஜம்பமாகச் சொல்கிறான் என்பதைப் பிறர் உணராதபடி ஜம்பமாகச் சொல்ல வேண்டும்!

மாதிரிக்குச் சில ஜம்ப உரைகளை இங்கு தருகிறேன்:



- ''சார்... என்னைக் கேட்டால் பசங்களை என்ஜினீர், டாக்டர் என்று படிக்க வைக்கிறதை விட ஒரு டைப்பிஸ்டாக ஆக்குவதே மேல் என்பேன். பாருங்களேன், இவன் இருக்கிறானே ராஜு, எம். பி. பி. எஸ். பாஸ் பண்ணினானே, அப்போ கெடைச்ச கோல்டு மெடலோடு திருப்தி அடைய வேண்டியது தானே. இப்போ அமெரிக்கா போகணும்னு துடிக்கிறான். எவன்கிட்ட சார் இருக்குது பணம்? இவன் இப்படி என்றால் இவன் தம்பி ராமு இருக்கிறானே, அவன் பி.ஈ. படிச்சு இரண்டாயிரம் சம்பாதிக்கிறது போறாதாம். சொந்தமாக இண்டஸ்ட்ரி ஆரம்பிக்கப் போகிறானாம். இதெல்லாம் பார்த்தால், சொல்லாமல் கொள்ளாமல் நானும் என் ஒய்ஃபும் என் பெண் கிட்டே பாரீஸுக்கே போய்விடலாமா என்று தோன்றுகிறது!''

- ''எங்க ஜலஜா இருக்கிறாளே படிப்பு பூஜ்யம். 'என்னடி, இப்படி மார்க் வாங்கினால் எப்படி உருப்படுவே' என்று கேட்டால் என்ன சொல்லுகிறாள் தெரியுமா? 'இதோடு மேடைப் பேச்சிலே பதினேழு கப் வாங்கி இருக்கிறேன். டேபிள் டென்னிஸ் சாம்பியன் என்று காலேஜில் பேர் வாங்கி இருக்கிறேன். போம்மா, நான் அரசியல்வாதியாகவோ இல்லை புகழ் பெற்ற விளையாட்டுக் காரியாகவோ ஆகிறேன்' என்கிறாள்... ஹூம் அவள் தலையிலே என்ன எழுதியிருக்கிறதோ!''

- ''மணி பத்தடிக்கப் போகிறது இன்னும் என் வீட்டுக்காரர் வரவில்லை மாமி... அவரவர்கள் ஆபீஸ் முடிந்ததும் வீட்டுக்கு வர வில்லையோ? இவருக்கு சதா நாடகம்தான். இதோடு இரண்டாயிரம் தரம் மேடை ஏறியாச்சு. என்ன லாபம்? என் கழுத்திலே குந்து மணி பொன் ஏறித்தா? இந்த அழகிலே இவருக்குக் 'கலைமாமணி' பட்டம் கொடுக்கப் போறாங்களாம். மலேசியாவில் நாடகம் போடக் கூப்பிடறாங்களாம். என்ன நாடகம் வேண்டியிருக்கு, வெங்கட்ராமா! நான் பண்ணின புண்ணியம் அவ்வளவுதான்!''


- ''அதை ஏன் கேக்கறே, மருக்கொழுந்து. என் மச்சான் இருக்குதே அல்லா போலீஸ்காரனுக்கும் டாவு காட்டிட்டு தெனக்கும் இருபது படி அரிசி நெல்லூர்லேருந்து கொண்டாந்துடுது! இதைப் பார்த்து என் கொளுந்தியாளுக்கு வயித்தெரிச்சல். வவுறு எரியறயே போவச் சொல்லேன் உன் புருஷனையும்! அகப்பட்டுக்கிட்டு முழிப்பான். அவனுக்கு இன்னா தெரியும்? ஆபீஸ் வாட்ச்மேன் வேலை பாத்து முந்நூறு ரூபா சம்பாதிக்கத் தெரியும்! அது என்ன பெரிய பீதாம்பரய்யர் வித்தையா?''

- ''ஏண்டா டயர் ஏஜென்ஸி எடுத்தோம் என்று இருக்கிறது. நாலைந்து மாசமா ஒடவே இல்லை. ஏழு குமாஸ்தா, இரண்டு பியூன் இவர்களுக்குச் சம்பளமே மூவாயிரம் ரூபா ஆகிறது. இப்படிப் போனால் எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்க முடியும்? ஒரு வருஷம், இரண்டு வருஷங்கள் முடியலாம். இதை மூட்டைகட்டிவிட்டுப் பழையபடி வைர வியாபாரத்துக்கே போய்விடப் போகிறேன்.''

சிலருக்குத்தான் இயற்கையாக ஜம்பம் அடித்துக்கொள்ளத் தெரியும். வேறு சிலரது ஜம்பம் தம்பட்டம் அடிப்பது போல் இருக்கும். நீங்கள் எந்த வகையோ?

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

படுக்கை வேளையில் பல் துலக்க நீங்கள்
மறந்திடும் ஒவ்வொரு நேரமும்...



உலகமெல்லாம்
பரவிப் பெருகியுள்ள
நோயால் பீடிக்கப்படும்
அபாயத்துக்கு உள்ளாகிறீர்கள்!

படுக்கை வேளையில் நீங்கள் பல் துலக்கத் தவறும்போது, பற்களைச் சிதைக்கும் கிருமிகள், இரவு நேரத்தில் உங்கள் வாயில் தங்கும் உணவுத் துகள்கள் மூலம் வளர்ச்சி அடைகின்றன. இதனால் நூற்றுக்கு 95 பேரைப் பாதித்து, வலிதரும் சொத்தையாக மாறி, அவதி தரும் பற்சிதைவு நோய் பீடிக்கிறது.

பினாகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினாகா ஃப்ளோரைடினால், காலைதோறும் காலையிலும், மீண்டும் படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல், இரவு பூராவும் உங்கள் வாயைச் சுத்தமாக வைத்திருக்கிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.



பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—

பினாகா ஃப்ளோரைட்

U-BF/2a/75 Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானம் பதிப்பு) 60 மலேசிய காசு